

பாலகுமாரன்
காதல்
வெண்ணிலா

# காதல் வெண்ணிலா

## 1

"ஐம்பத்தியாறு வயசு வரைக்கும் உசிரோட இருந்திருக்கீங்களே அது சாதனை. முப்பது வயசுல ஹார்ட் அட்டாக் வருதுங்க. ஏன் நம்ம வரதனுக்கு வரலையா? அதைவிட பெரிய சாதனை ஐம்பத்தியாறு வயசுக்கு திடகாத்திரமா தோள்ல துண்ட போட்டுக்கிட்டு விறுவிறுன்னு சின்னப் பையன் மாதிரி நடக்கிறீங்களே, அதுவும் சேர்த்துக்கணும். ஐயாசாமி ரிடையராயிட்டாருன்னா உடனே சட்டுன்னு அவரு வேலை செஞ்ச செக்ஷன் நின்னு போச்சு பாருங்க. அதுவும் சாதனை."

திருநாவுக்கரசு அவரது இடதுகையை வலது கையால் பிணைத்துக் கொண்டு பேசினான்.

இந்தச் சிறிய புகழ்ச்சியும் தாங்காமல் அவர் தலை குனிந்து உட்கார்ந்திருந்தார்.

"பெரியவருக்கு முன்னாடியே தெரியும். ஆனா, வாயத் தொறக்கலை." யாரோ சொன்னார்கள்.

"தெரிஞ்சா கடன் கேட்பான். அறுபது எழுபது வருதே, அதுல அஞ்சு கடன் கொடு. வட்டியோட திருப்பித் தந்துருவேன்னு கெஞ்சுவான். இல்லாத பொல்லாத பொய்யெல்லாம் சொல்வான்"

''அதெப்படித் தரமுடியும்? அவருக்குப் பொண்ணுங்க இருக்கே, கட்டிக் கொடுக்கணுமே?''

பெரியவர் ஐயாசாமி தலை நிமிர்ந்தார். ஆமான்னு கண்கள் சொல்லின. ஆனாலும் பதில் பேசவில்லை.

ஐயாசாமி பேசுகிற ஜாதியில்லை. திருநாவுக்கரசிடம் கொஞ்சம் பேசுவார்.

''தம்பி, அஞ்சே முக்கா போயிருச்சா?''

''ஏங்க, குத்துக்கல்லு மாதிரி நிக்கறேன். என்னை வுட்டு எப்படிப் போவும்?''

''ஆறு பத்து புடிக்கிறயோன்னு பார்த்தேன்.''

''அஞ்சே முக்கா ரைட் டைம், வண்டி இரண்டு நிமிஷத்துல வரும். ஆமா வாட்ச் வாங்கி கட்டறது... இரண்டாயிரத்து எண்ணூறு ரூவா சம்பாதிக்கற இல்லை...?''

பதில் பேச மாட்டார்.

''ஊர்ல எல்லா மைனரும் வாட்ச் கட்டறான். நாம என்னத்துக்குன்னு விட்டாரு'' வேறு யாராவது பதில் சொல்வார்கள்.

''வாட்சுன்னா நானூறு ரூபா. ரிப்பேரு, செலவு. அதுல குந்துமணி தங்கம் வாங்கிப் பொண்ணுக்கு சேர்த்துருவாரு'' வேறு எவராவது தொடர்வார்கள்.

''இரண்டு பொண்ணு பெத்தவன் அப்படித்தான் இருப்பான்.''

''வயித்துக்குக்கூட சாப்பிடாதயா?''

''வயித்துக்குச் சாப்பிடாத யாரும் இல்லை. பெரியவரு நல்லா சாப்பிடறவர்தான்.''



''இந்த செங்கல்பட்டு ஸ்டேஷன்ல என்னிக்காச்சும் அவர் டம்ளர் காபி குடிச்சுருப்பாரா? விரல் விடு!''

''ஏங்க குடிக்கணும்? முக்கால் அவர்ல தாம்பரம் வரும், இறங்கி திபுதிபுன்னு பஸ்ஸு புடிச்சா, கம்பெனி உள்ள போனா நாக்குல நிக்கிற மாதிரி டீ.'' திருநா பதில் சொன்னான்.

''பத்து பைசா டீ. அதான் கணக்கு. இங்கு எழுவது பைசாவாச்சே காப்பி! அறுவது பைசா மிச்சமில்லே?''

''நீ பாங்க்ல சம்பாதிக்கிறவன்; நீ சாப்பிடலாம். அவரைக் குத்தம் சொல்லாதே. அவருக்கு இஷ்டமில்லே விடு.''

''ஏண்டா கத்தறே... அவரைச் சொன்னா.''

''வாத்யார வுட்டுக் கொடுக்காத பேசறான். என்னா திருநா அப்படித்தானே?''

''வண்டி வருது. பதறாத ஏறுங்கப்பா'' ஐயாசாமி சொல்ல, செங்கல்பட்டில் ஒரு பட்டாளம் வண்டி ஏறும்.

வாத்தியாரும், சிஷ்யப் பிள்ளையும் ஒரே கம்பார்ட்மெண்ட் தேடுவார்கள். தாம்பரம் ஸ்டாண்டில் திருநா சைக்கிள் வைத்திருக்கிறான். அவரைப் பின்னால் ஏற்றி வண்டி மிதிப்பான். மூன்று நிமிடத்தில் தொழிற்சாலை வந்து விடுவார்கள்.

ஐயாசாமிதான் செக்ஷன் ஹெட். கார்பெண்டரி செக்ஷன். பலவகைப் பெட்டி அடிப்பதிலிருந்து கம்பெனிக்குள்ளே மரவேலை வரை செக்ஷன் வேலை. பம்பு மோட்டாரிலிருந்து பல மிஷின்களில் வருகிற மோட்டார் வரை, வீட்டு மெயின் சுவிட்ச்களிலிருந்து மிஷின்களில் வரும் மெயின் சுவிட்ச் வரை, விதவிதமாய் மின் உபகரணங்கள்.

இடைவிடாது பெட்டி அடித்து உள்ளே சாமான்களை ஆடாது வைத்து காகித ஜல்லி அழுத்தி, மேல்மூடி போட்டு பேக்கர் கம் கார்ப்பெண்டர்.

காலையில் வந்ததும் மரம் அறுக்கவேண்டும். என்ன உபகரணங்கள் வெளியே போகின்றன என்று தெரிந்து அதற்கேற்றபடி பெட்டி போடவேண்டும். பெட்டிக்குத் தகுந்தபடி மரம் அறுக்க வேண்டும்.

மரம் அறுக்க பெரிய சக்கரக்கத்தி உண்டு. மின்விசை தட்ட விஷ்ணு சக்கரம் மாதிரி சுற்றுவதில் பலகை கொடுத்து சரியான சைஸ் அறுக்க வேண்டும். அப்படி அறுக்கும்போது ஏகப்பட்ட ஓசைவரும். அந்த ஓசையை தினசரி கேட்பவருக்கு அநேகமாய் காது செவிடாகும்.

ஐயாசாமிதான் மரம் அறுப்பார். ஆனால் அவருக்குக் காது செவிடாகவில்லை. ஆனால் காது செவிடானது போல யார் எது சொன்னாலும் கேட்டுக் கொண்டிருப்பார். இந்தக் கம்பனிக்கு வேலை ஆர்டரோடு திருநா செங்கல்பட்டு வண்டி ஏறும்போது அவரைப் பார்த்தான், வணங்கினான்.

''எம்பேர் திருநாவுக்கரசுங்க. உங்க கம்பெனில வேலை ஆயிருக்கு'' கும்பிட்டான்.

பதிலுக்குக் கும்பிட்டார்.

''இது ஆர்டருங்க.'' கவர் நீட்டினான்.

கவர் புரட்டிப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்தார்.

''ஐஐடில கார்பெண்டர் படிச்சேன். இங்க இண்டர்வியூவுக்குக் கூப்பிட்டிருந்தாங்க. என் அக்கா புருஷனும் இங்க வேலை செய்யறவரும் சிநேகிதம். அவரு சிபாரிசுல



கிடைச்சதுங்க. இண்டர்வியூவிலும் நல்லா பதில் சொன்னேன். இங்கிலீஷ் படிக்கத் தெரியுமான்னு கேட்டாங்க.

ஹிண்டு பேப்பர் படிச்சுக் காட்டினேன். பாலிடிக்ஸ் விருப்பம் இருக்கான்னு கேட்டாங்க. இல்லை சார்ன்னேன். எதுல விருப்பம் இருக்குன்னாங்க. கோயிலுக்குப் போவேன். வருஷம் இரண்டு தடவை மாலை போட்டுக்குவேன். ஒண்ணு சபரிமலை, இன்னொண்ணு திருப்பதி பாதயாத்திரைன்னேன். அது என்னா பாதயாத்திரைன்னாங்க. மெட்ராஸ்லேர்ந்து திருப்பதிக்கு நடந்து போவோம். நாற்பத்தஞ்சுநாள் விரதம் இருப்போம். நடந்தா... நடந்தா... எத்தினி நாளு, எங்க சாப்பிடுவே எப்ப நடப்பே, எவ்வளவு நடப்பேன்னு கேட்டாங்க. விவரமா சொன்னேன். வேலை கிடைச்சுடுச்சு. அதிகாரியெல்லாம் ரொம்ப மரியாதையா பார்த்தாங்க.''

ஐயாசாமி சிரித்தார்.

கம்பெனிக்குள் நுழைந்து சடங்குகள் முடித்துவிட்டு பர்ஸனல் ஆபீஸ் குமாஸ்தாவுடன் கார்பென்டரி செக்ஷன் போனபோது, அங்கே 'செக்ஷன் ஹெட்' என்று ஐயாசாமி அவனுக்கு அறிமுகம் செய்துவிடப்பட, வியந்தான். 'நீ பாலிடிக்ஸ் தெரியும்னு சொல்லியிருந்தே... உன்னை வேலைக்கு எடுத்திருக்க மாட்டாங்க. சொல் பேச்சு கேட்கிற தொழிலாளியா நீ இருக்கமாட்டேன்னு பயந்துருப்பாங்க. சாமி கும்புடறவனைச் சுலபமா பயமுறுத்தலாம்னு அவங்களுக்குத் தெரியும்.''

''நீங்க பாலிடிக்ஸ் ஆளுங்களா?''

''இல்லை. ஆனா உழைக்கறவனுக்கு மரியாதை தரலைன்னா வுடமாட்டேன். ஒரு தடவ மூணுநா லீவு சேர்ந்தாப்பல வந்தது. நாலாநாள் வந்து பார்த்தா, பேர்பாதி மரம் அடுக்கி வச்சுருந்தது காணம், நான்தான் ரிப்போர்ட் பண்ணேன். சாயந்திரம் டிபார்ட்மெண்ட்ல உள்ள எட்டு பேருக்கும் மரம் காணாம போனதுக்கு நீங்க

தான் காரணம்னு மெமோ குடுத்துட்டான். அப்படியே எடுத்துக்கிட்டு கம்பெனி முழுக்க சுத்தினேன். தொழிலாளி கிட்ட நியாயம் கேட்டேன். எல்லோரும் செய்த வேலைய கீழே போட்டாங்க. நாளைக்கு அவனுக்கும் இப்படி மெமோ வருமில்லை? மொத்தமா வாசலுக்கு வந்துட்டோம். மெமோ திருப்பி வாங்கித்தான் உள்ள வந்தோம்.''

''யாருங்க மரம் திருடினது?''

''அதிகாரி ஒருத்தன் 'ரிஜெக்டட்'ன்னு பாஸ் போட்டு எடுத்துக்கிட்டுப் போய்ட்டான்.''

''ஐயோ!''

''நமக்குள்ள ஒத்துமை அவஸ்யம். ஒத்துமையா இருக்கறதாலியே கண்டதுக்கும் கத்தக்கூடாது. உனக்கு மரம் அறுக்கத் தெரியுமா?''

தெரியும் என்று அவன் தலையாட்டினாலும் சொல்லிக் கொடுத்தார். ஏனோ அவரைத் திருநாவுக்கு மிகவும் பிடித்துப் போனது.

அவரை அப்பா என்று கூப்பிட்டான்.

''ஏம்பா, நான் சைக்கிள் வாங்கிடறேன். எம்பின்னால் வந்துறேன். தாம்பரத்துலேர்ந்து மூணு நிமிஷம் கம்பெனி போயிடலாம். நொச்சு நொச்சுன்னு நடக்கறத விட்டுட்டு...''

''பழக்கப்படுத்திடுவே. அப்புறம் முடியாதுன்னு வுட்டுட்டுப் போயிடுவே. நான் மறுபடியும் நடக்கணும்.''

''வுடமாட்டேம்பா. உன்கூட சண்டை போட்டாலும் நின்னு ஏத்திக்கிட்டு போவேன்; வருவேன்.''

''வேணாம்.''

''திருப்பதி ஏழுமலையான் மேல சத்தியம், வுடமாட்டேன்.''



சிரித்தார். சைக்கிள் வாங்கினான். சைக்கிளின் பின்னே அமர்ந்து வந்தார்.

''மாலை போட்டுக்கறவன் தட்டு புட்டுன்னு சாமி மேல சத்தியம் பண்ணக்கூடாது. அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும். சத்தியம்ன்னு ஒண்ணு பண்ணா, அதுக்கு சோதனை வரும், அப்ப தாங்க முடியாம தவறிட்டா ரொம்ப மனசுக்கு வேதனை வரும்.''

வந்தது. அவன் தாங்கினான். மாலை நாலுமணிக்கு மானேஜிங் டைரக்டர் ரூமில் தடுப்பு சரிசெய்யப் பெரியவரை அழைத்துப் போனார்கள். சங்கு ஊதித் தொழிலாளர்கள் வெளியேற, பிறகு அவன் காத்திருந்தான். அவர் வெளியே வரும்போது இரவு ஒன்பது மணி.

''வாங்க போகலாம்'' என்று அவன் மரத்து இருட்டிலிருந்து எழுந்தபோது நடுங்கிப் போனார்.

''போலையா நீ?''

''அதெப்படி உங்களை வுட்டுட்டுப் போறது?''

''போயிருக்க வேண்டியதுதானே?''

''மனசு கேட்கலை?''

''இப்படிப் பண்ணாதடா!''

''தினமுமா? என்னிக்கோ ஒரு நாள்தானே!''

''சரி; வண்டி எடு.''

அவர் ஆனந்தமானார் என்பது அவரது முகத்தில் தெரிந்தது.

''நல்ல புள்ளை, நல்ல புள்ளை என்று பல பேரிடம் சொல்வார்.

பச்சை மரத்தில் சில சமயம், உடம்புக்கு மச்சம்மாதிரி துண்டாய் வட்டமாய் ஒரு மரு இருக்கும். அறுக்கும்போது அந்த இடத்தில் அதிகக் கவனம் வைக்கவேண்டும். மேலே சிவப்பு ப்ரைமர் பூசப்பட்ட ஒரு மரத்தை திருநா அறுக்க, மச்சம் உடைந்து எகிறி முகத்தில் அடித்தது. மச்சப்பகுதி உறுதியானது. துண்டாய் வெளிவரும் இயல்புடையது. சக்கரக் கத்தி பட்டதும் துண்டு எகிறி நெற்றியில் தாக்க பிடித்துக் கொண்டிருந்த மரத்தைத் திருநா விட்டுவிட, விடுபட்ட மரமும் தாக்கியது. நெற்றியில் மருவு தாக்கி ரத்தம், இடது கை நான்கு விரல்களில் பலகை தாக்கிக் காயம்.

பர்ஸ்ட் எய்டுக்கு வாரிப் போனார்கள். அங்கு பஞ்சு அழுத்தி, தையல் போடவேண்டும் என்று ஆம்புலன்ஸில் தூக்கிப் போனார்கள்.

பெரியவர் கூடவே வந்தார். தையல் போட்டு அதே ஆம்புலன்ஸில் செங்கல்பட்டுக்குப்போய் வீட்டில் இறக்கிப் படுக்க வைத்துப் பதறிய வீட்டுக்குச் சமாதானம் சொல்லி, அவர் தொழிற்சாலை திரும்பினார்.

தினமும் வந்து பார்த்தார்.

வீடு சினேகிதமாயிற்று.

''என்னடா திருநா.... எங்க உன் மாமனாரைக் காணோம்?'' மதினி கேலி செய்வாள்.

''மாமனாரா, யாரு?''

''அதான் ஐயாசாமியா... அவரு பேரு என்னா?''

''அவரு வாத்தியாரு அண்ணி. அசிங்கமா பேசாத''

''உனக்கு பக்கோடா பொட்டலம் வாங்கியாறாரு.''

''ஊட்டுக்கு வாங்கிப் போனது என்னாதுன்னு கேட்டேன். வச்சுக்கடான்னு கொடுத்துட்டாரு.''



''அதான் மாமனாருன்னு சொன்னேன்'' பொண்ணுக்கு வாங்கினு போறதை வழில கேட்ட புள்ளைக்குக் கொடுத்தா பொண்ணை விட பெரிய உறவுன்னுதானே அர்த்தம்?''

அவருக்கு இரண்டு பெண்கள். மூத்த பெண்ணைப் பார்த்திருக்கிறான். இரண்டாவது பெண் ப்ளஸ்டூ படித்துவிட்டு எங்கோ அரசு நிறுவனத்தில் டெம்பரரி வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாளாம். காலை ஏழு மணிக்கு செங்கல்பட்டில் வண்டி பிடிதது சென்னைபோய் இரவு ஏழு மணிக்குத் திரும்புவாளாம்.

மூத்தது வரும், கதவுக்குப் பின்னாலிருந்து பேசும், போய்விடும். புடவை நுனி, தலைப் பின்னல் காது ஜிமிக்கி, முழங்கை வளைவு என்று பார்த்திருக்கிறானே தவிர முகம் தெரியாது.

அவருக்குக் குரல் கொடுத்துத் தெருவில் நிற்பான். வாசல் திண்ணையில் உட்கார்ந்து பேசிவிட்டு வருவான்.

இரண்டாவது பெண்ணை ஒருமுறை போட்டோவில் பார்த்திருக்கிறான். எண்பது பேரில் ஒரு பெண்ணாய், ப்ளஸ்டூ பிரிவு உபசார விழாவின் படம் ஃப்ரேம் போட்டுக் கொடுத்தபோது பார்த்திருக்கிறான். 'உர்' என்று நின்றிருந்தது. பெரிய வாயாடி என்று ஐயாசாமி சொல்வார்.

அதற்கு மேல் கேட்டதில்லை. கேட்பது நியாயம் என்றும் தெரியவில்லை. வாத்தியாருக்கு அது பிடிக்குமோ பிடிக்காதோ என்கிற பயம்.

''ஏங்க நம்ம கம்பெனில டைப் அடிக்கிற பொண்ணு புருஷனை வுட்டு அஸிஸ்டன்ட் மேனேஜரை ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்கிச்சாமே: தெரியுமா?''

''அதுபத்தி உனக்கென்ன?''

"இரண்டு பசங்களாம். பசங்களையும் வுட்டுட்டு வந்துட்டாளாம்."

"கண்ட கழிசடைங்க பத்தி என்கிட்ட பேசாதே"— சுள்ளென்று திட்டினார்.

ஐயாசாமிக்கு அப்படிப்பட்ட பேச்சுகளில் விருப்பமில்லை. இழிவாய்ப் பெண்களைப் பேசுவதில்லை. இழிவான பெண்களைப் பற்றியும் பேசுவதில்லை.

ஒரு நடிகையைப் பற்றி தாம்பரம் வரும்வரை கேலி செய்து கொண்டிருந்த ஆளைப் பற்றித்தான் இழிவாய்ப் பேசினார்.

"அந்த பொம்பளை அவர் சொல்ற மாதிரி ஒரு மாதிரிப் பொம்பளைங்கதாங்க."

"இருக்கட்டும். அவ வயித்துப் பொழப்பு. நமக்கு என்ன? அப்பேர்ப்பட்ட பொம்பளைய நாம தொடலையேன்னு ஒரு ஏக்கம்தான் இப்படிப் பேச்சு."

"நீங்க தொட்டதில்லையோ?" டக்கென்று கேட்டான்.

"நாலு நாள் பொணத்தைக் கட்டி யாரு முத்தம் தருவாங்க?"

"என்னது?"

"திருக்குறள் படி" பேச்சு கத்தரித்து விட்டார்.

வேலையில் சுத்தம், தரும நியாயத்திற்குப் பயம், ஒழுக்கம் பேணும் விதம், அவர்மீது மிகுந்த மரியாதையைக் கொடுத்தன திருநாவுக்கு.

திருநாவின் அடக்கம், அன்பு, அவருக்கும் பிடித்திருந்தது.

அவர் ஓய்வு பெறுவது திருநாவுக்கு வேதனையாய் இருந்தது. வலது கை இல்லாமல் போனதுபோல் தவிப்பு



ஏற்பட்டது. அதே சமயம் ரிடையரானது அவரைப் பாதிக்கக்கூடாதுஎன்று முனைப்பாய் இருந்தான். சிரிக்கச் சிரிக்கப் பேசினான்.

அன்று மாலை அவர் அவன் சைக்கிள் ஏறி, மெயின் ரோடு போக, சட்டென்று ஒரு தெருவிலிருந்து எழுபது எண்பது சைக்கிள் வந்தன. எல்லாம் தொழிலாளர்கள். அவருடைய சக ஊழியர்கள்.

சட்டென்று நடந்த அந்த ஊர்வலத்தில் அவர் திகைத்துப் போனார்.

"என்னாங்கடா, டேய் என்னாங்கடா. இது"— உணர்ச்சி வசப்பட்டார்.

"தந்தை ஐயாசாமி வாழ்க."

"தலைவர் ஐயாசாமி."

"தச்சுத் தொழில் மாமேதை ஐயாசாமி வாழ்க." கூவினார்கள்.

அவர் நாணமுற்றார்.

தாம்பரம் ஸ்டேஷனில் அவருக்கு மாலையிட்டு, கலர் சோடா உடைத்துக் கொடுத்து, வெள்ளிக் குடத்தை ட்ரேஸ் பேப்பரில் சுற்றிக் கொடுத்தார்கள்.

"ரொம்ப அதிகம். ரொம்ப அதிகம்." கவலைப்பட்டார்.

குடத்துக்குள் யார், யார் எவ்வளவு 'மொய்' எழுதினார்கள் என்கிற லிஸ்ட் இருந்தது.

முதல் பெயர் 'திருநாவுக்கரசு—கார்பெண்டர் ரூபாய் ஆயிரத்து ஒன்று' என்று எழுதப்பட்டிருந்தது.

நாலரை மணி வண்டியில் ஏறி உட்கார்ந்து திருநாவின் கையைப் பிடித்துக் கொண்டு அவர் அழுதார்.

சில சமயம் அழுகை அன்பால் விளைவது, அப்படி அன்பால் விளைந்த கண்ணீர், கன்னம் வழிந்து நிலம் தொட சிநேக நிலம் குளிரும். உறவுப் பூ பூக்கும்.

பூத்தது.

ஃ ஃ ஃ

## 2

நிறைய தொழிலாளர்கள் செங்கல்பட்டில் இறங்குவார்களே தவிர செங்கல்பட்டு ஊராய் இருக்காது. இன்னும் தள்ளி சிறிய டவுனுக்கு, கிராமத்துக்குப் போக வேண்டியிருக்கும்.

திருநாவுக்கரசுக்கு செங்கல்பட்டு பஸ் ஸ்டாண்டுக்கு அருகே வீடு. அவர் இன்னமும் தள்ளி மருத்துவமனை பக்கம் போக வேண்டும்.

''திருநா பெரியவரை வழில வுட்டறாத...வெள்ளிக் குடம், கம்பெனி செக்குன்னு நிறைய வச்சுருக்காரு வீட்ல வுட்டுட்டு வா.''—சக தோழர்கள் கட்டளையிட்டுவிட்டு இறங்கி தத்தம் வீட்டிற்கு ஓடினார்கள்.

அவர் மறுக்க மறுக்க திருநா ஆட்டோ பிடித்தான் அவரை உள்ளே திணித்தான். அவனே குடம், சந்தன மாலை, ரோஜா மாலை எல்லாம் எடுத்துக் கொண்டான். வீட்டில் இறங்கி ஆட்டோவுக்கு காசு கொடுத்து...

சகலமும் திண்ணையில் வவத்துவிட்டு நின்றார்.



கைப்பிடித்து அவனை உள்ளே கூட்டிப் போனார். சூரியன் இன்னும் சாயாத பொழுது அது.

''வெண்ணிலா வாசல்ல குடம் இருக்குது எடுத்தா...''

நடை ரேழி தாண்டி தான் ஹாலுக்குப் போக வேண்டும்.

நடையின்முதலில் அவன் நிற்க, முடிவில் வெண்ணிலா உதயமாயிற்று.

சட்டென்று அவ்வளவு அருகே அழகான பெண்ணைப் பார்த்த ஒரு சந்தோஷத்தில் திருநா திண்டாடிப் போனான்.

''சிறுசு வேலைக்குப் போயிருக்கு'' என்றுதான் பெரியவரும், பெரியவர் மனைவியும் பேசுவார்கள்.

''சின்னது வந்துருச்சா?'' —சில சமயம் வீட்டில் நுழையும்போது அவர் கேட்டதைக் கவனித்திருக்கிறான்.

''தங்கச்சிக்கிட்ட அஞ்சுருவா சில்லறை இருக்கா கேளு'' —பெரிய பெண்ணிடம் ஒருமுறை சொன்னார்.

''ஏன் நான் தரக்கூடாதா, இந்தாங்க அஞ்சு ரூபா.'' பர்சு பிரித்துக் காசு தந்திருக்கிறாள். வாசலுக்கு தங்கச்சி வரவேயில்லை.

இரண்டு வருட சிநேகிதம் வெளியேதான் பழக்கம். வீட்டுக்கு வந்தாலும் வாசலோடு நிற்பதுதான் வழக்கம். தெரிஞ்சவங்க வீட்டுப் பெண்ணைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பது தவறு என்கிற எண்ணம். பெரியவர் உள்ளே அழைக்காது போகக் கூடாது என்கிற திடம்.

இன்று பெரியவர், 'உள்ளே வா' என்று கூப்பிட்டது ஆச்சர்யம். அதைவிட ஆச்சர்யம்-வெண்ணிலா.

''அம்மாடி இது திருநா. நான் அடிக்கடி சொல்வேனே, அந்தத் திருநா-திருநாவுக்கரசு. திருநா கூட ப்ளஸ் டூ தான். உள்ளே வாப்பா.''

வெண்ணிலா லேசாய்ச் சிரித்தாள்.

கும்பிடுவதா வேண்டாமா என்று திருநா குழம்பினான்.

''உள்ள வாங்க'' வெண்ணிலா அழைத்தாள்.

அவளைத் தாண்டிப் போக, பெண்கள் தேய்த்துக் குளிக்கும் பொடி வாசனை மூக்கு நெருடிற்று.

''அடிபட்டது சரியாயிருச்சா?'' அவன் தாண்ட, வெண்ணிலா கேட்டாள்.

''யாருக்கு அடி?'' திருநா திகைத்தான்.

அவள் வெளியே போய் குடம், மாலைகளை வாரிக் கொண்டு வந்தாள்.

''ஏம்பா வெள்ளியா இது?'' கூவினாள். அவள் கூவல் திருநாவுக்குப் பிடித்திருந்தது.

''ம்ம்...''

''ஏதுப்பா, நீ ரிடையரானதுக்குக் கம்பெனில கொடுத்தாங்களா?''

''கம்பெனில தருவாங்களா? வொர்க்கர்ஸ் அன்பளிப்பு.''

''வெள்ளிக்குடம்?''

''திருநா ஆயிரம் ரூபா போட்டிருக்கு. என்னிய கேட்டிருந்தா கூடாதுன்னுட்டுருப்பேன். எனக்கு என்னத்துக்கு வெள்ளிக்குடமும் அதுவும்.''

''உங்களுக்கு வாங்கலை. வீட்டுக்கு வாங்கினது'' திருநா பேசினான்.

பெரியவள் அறைக்குள்ளிருந்து சிறியவளை அழைத்தாள். குடம் அறைக்குள் இழுபட்டது உணர முடிந்தது.



''வாங்க''—ஐயாசாமியின் மனைவி வவேற்றாள். ''என்னடி அங்கே...'' சப்தம் கொடுத்தாள்.

''வெள்ளிக் குடம்மா?''

வீடு முழுவதும் ஹாலில் நின்று உருட்டி உருட்டி குடம் பார்த்தது.

திருநா, வெண்ணிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''இத எடுத்துக்கிட்டுப் போய் நம்மத் தெரு குழாய்ல தண்ணி புடிச்சாப் போரும்...செத்துரும் எல்லா பொம்பளையும்''—இடுப்பில் குடம் வைத்துக் கொண்டு மூத்த பெண் பேசினாள்.

''ச்சீ! தண்ணி புடிக்கவா இது? பூஜை நடந்தா வைக்கிற கலசம்டி!'' அம்மாக்காரி பிடுங்கிக் கொண்டாள் அழகு பார்த்தாள்.

''இது குழாயடில வைக்கறதும் இல்லை. பூஜை செய்யறப்போ வைக்கிறதுக்கும் இல்லை. நல்லா இருந்தா சபைல வைக்கணும். இல்லையா மார்வாடிக் கடைல வைக்கணும்.'' வெண்ணிலா பேசினாள்.

''சீ, இதும் பேச்சைப் பாரு மார்வாடிக் கடையாம்...''

''நான் சொல்றது உனக்குப் புரியவேயில்லை. இது ஆள்ற பொருள் இல்லை. ஆத்திர அவசரத்துக்கு உதவற பொருள். இல்லேப்பா...'' அப்பாவைத் துணைக்கழைத்தாள். ஐயாசாமி சிரித்தார்.

''ஆமாங்க. நீங்க சொல்றது கரெக்ட்''—தன்னையும் மீறி திருநா பதில் சொன்னான்.

ஒருகணம் அவனைப் பார்த்து, சட்டென்று விழி தாழ்த்திக் குடம் பார்த்தாள்.

''காப்பி எடுத்தாரட்டா?'' உள்ளே போனாள்.

அந்த வெட்கம் திருநாவைக் கிறங்க அடித்தது.

''வெண்ணிலா? இரும்மா. பீரோல எவ்வளோ காசு இருக்கு சொல்லு?''

''ஆயிரத்து நானூறு இருக்கும். பால் கார்டுக்கு கொடுக்கணும்... ஏம்பா?''

''தொள்ளாயிரம் எடுத்தா.''

வெண்ணிலா உள்ளே போனாள். ஹாலுக்கு நேர் எதிரே உள்ள அறையில் பீரோ திறப்பது தெரிந்தது. எக்கி மேல் தட்டில் உள்ள பெட்டி எடுத்தது. அந்த எம்பு தலில் இடதுபுற வளைவுகள் அத்தனையும் தெரிந்தன. திருநா தலை குனிந்து கொண்டான். இடதுபுற வளைவு கள் கல்லில் செதுக்கிய சிற்பம் போல மனதில் பதிந்தன.

''அப்ப நான் கிளம்பறேங்க...''

மனதில் பதிந்த வளைவுகளை அவன் இழந்துவிட விரும்பவிலலை. வேறு ஏதும் பேச, வேறு ஏதும் பார்க்க உள்ளே பதிந்தவை அழியலாம். காணாது போகலாம்.

''ஐயோ காப்பி தரேன்னுட்டு...'' அவள் பெட்டியை அப்பாவிடம் கொடுத்துவிட்டு உள்ளே ஓடினாள்.

''காப்பி தரேன்னுட்டு...'' என்று சொன்னது தன் னிடமா அல்லது ஐயாசாமியிடமா? புரியாது திருநாவுக் கரசு தவித்தான்.

ஐயாசாமி தன்னிடம் திணிக்கப்பட்ட பெட்டி திறந் தார். ரப்பர்பேண்ட் போட்டு சுருட்டி வைக்கப்பட்ட நூறு ரூபாய்களைப் பார்த்தார். ஒன்பது எண்ணி இவ னிடம் நீட்டினார்.

''என்னாங்க?'' திருநா கேட்டான்.



''ஒரு ஆள் ரிடையரானா பத்து தருவாங்க இருபது தருவாங்க. ஆயிரத்து ஒண்ணுன்னு போடறது தவறு, அது பெரிய சுமை திருநா.''

''அதுனால...''

''தொள்ளாயிரம் திருப்பிடறேன். ஒன்துட்டு நூறா இருக்கட்டும்.''

திருநா அவரை விநோதமாகப் பார்த்தான்.

''என்மேல எதுனா கோவமா இருந்தா வாத்யாரே பளீர் பளீர்ன்னு கன்னத்துல அடிச்சுடு. நெஞ்சுல அடிக் காதே.''

''பெரிய வார்த்தை பேசாதடா. இது தப்பு. எனக்கு ரொம்ப கஷ்டமாயிருச்சு. ஆயிர ரூபா சும்மா காசா?''

''எனக்கு எவ்வளவு செய்திருக்கிங்க வாத்தியாரே.''

''என்ன செய்தேன்— வேலை கத்து குடுத்தேனா? இல்லை— கம்பெனில வேலை வாங்கிக் கொடுத்தேனா? நீ சர்டிப்கேட் வாங்கி யாரையோ புடிச்சு வந்தே. ஒரே இடம்... மனசுக்குப் பிடிச்சுது பழகினோம். நியாயத்துக்கு தான் மதிப்பு தரணும். ஒரு நாளைப் போல சைக்கிள்ல வச்சு கூட்டிக்கிட்டு போயிருக்கே?''

''எங்கப்பா மாதிரி நீன்னு கூட்டிகிட்டுப்போனேன்.''

''எனக்கும் அப்படித்தான். அட என் புள்ளையா பிறந்திருந்தா இப்படித்தான் செய்யும்ன்னு சந்தோஷமா வந்தேன்.''

''அதே புள்ளை ஆயிரம் ரூவா தரக்கூடாதா?''

''கடனா தரலாம். கைமாத்தா தரலாம். இப்படி இவ்வளவு பெரிய தொகை மொய் எழுதினா எத்தினி கூச்சம் வாங்கறவங்களுக்கு, நான் திருப்பணும். இல்லையா...? உன் கல்யாணத்துக்கு நான் மொய் எழுத வேணாமா? அன்னிக்கு ஆயிரம் இல்லைன்னா எத்தினி கஷ்டம் மனசுக்கு வரும். அதனாலதான் இப்பவே, இருக் கறப்பவே வாங்கிக்கணும்.''

''எழுதினதத் திருப்பி வாங்கறது அவமானம். நீ பதிலுக்கு எழுதணும்னு அவசியமில்லை. அன்னிக்கு நெத்தில மரம் அடிச்சு மயங்கி சரிஞ்சப்ப வாரி போட்டுக் கிட்டு ஆம்புலன்சுல போனியே, யார் செய்வாங்க அப்படி?''

''எவனும் செய்வான். செக்ஷன்ல ஒருத்தனுக்கு அடிபட்டா எல்லோரும் வருவான்... வரணும். அது என் கடமை. வாங்கிக்க.''

''என்னை அவமானப்படுத்தற வாத்தியாரே''

''தப்பு திருநா''

''அசிங்கம். இது கம்பெனிக்குத் தெரிஞ்சுது அடிச்சுக் கிட்டு சிரிப்பாங்க.''

''அங்கேயே தரணும்னு நினைச்சேன். அது கஷ்டமா யிரும்ன்னு யாருக்கும் தெரியாத இப்ப தரேன்.''

''நான் வாங்க மாட்டேன்''

''எம் பேச்சு கேளு திருநா. ஆயிரம் ரூபா பெரிய காசு.''

''நான் சோத்துக்கு இல்லாதவன்னு நினைக்கிறியா?''

''வயசுப் பையன் வாரியடிச்சுச் செலவு பண்ணக் கூடாது.''



''நான் இஷ்டப்பட்டு பிரியமா செலவு பண்ணினேன் இது உன்னுது. மறந்தும் தொடமாட்டேன்.''

''அப்புறம் நான் என்ன சொல்றது? உன்னைப் பார்த் தாலும் பார்க்காத போக வேண்டிருக்கும். சொல் பேச்சு கேட்காத பையன்னு ஒரு நினைப்பு எப்பமும் வரும்''

''சரி, வாத்தியாரே நினைச்சுக்க. நான் வரலை. நீயும் வீட்டாண்ட வராதே? நாளைக்கு கம்பெனில கேட் பாங்க. பொறுப்பா கொண்டு போய் வுட்டியான்னு. அங்க சொல்றேன். நீ செய்யறதை. அவங்க கேட்கட்டும்.'

''திருநா...''

''எனக்கு அப்பா இல்லே வாத்தியாரே. சின்ன வயசுலியே போய்ட்டாரு. அண்ணன் வளர்த்தாரு. உன்னைப் பார்த்த முதல்நாள் உள்ள ஏதோ உறவு மாதிரி ஒரு எண்ணம் சொல்லத் தெரியலை. பல தடவ நீ அன்னி யமா நினைச்சுப் பேசினாப் போதும், சரி பெரியவங்க ஒட்டமாட்டாங்கன்னு நானா வந்து வந்து பேசினேன். ஆனா, இப்படி நரம்பு அறுக்கிற மாதிரி சட்டுன்னு நீ கொடுத்த துட்ட எடுத்துக்கன்னு பேசறதை நான் எதிர் பார்க்கலை, நான் வரேன்''

எழுந்தான்,. சமயலறைப் பக்கம் பார்த்தான் நடந் தான்.

''திருநா, திருநா நான் சொல்றது கேள்... அப்படி ஒரு எண்ணத்துல சொல்லலை. கடன்பட்டா மாதிரி ஒரு எண்ணம்.''

''எப்படி வாத்தியாரே கடன்...? மொய் எழுதறது கடனா...? பதிலுக்கு எழுதணும்னு சட்டமா? தப்பு எம் பேர்ல வாத்தியாரே வேற யாராவது நாலு ஆபீஸர் பேர் போட்டு பகிர்ந்து தந்துருக்கணும். எம்பேர் போட்டது தப்பு. சரி நாம பெரிய தொகையா முதல்ல

போட்டா நாலு பேர்கூடப் போடுவானேன்னு நினைச்சுச் செய்தது அது என்னைப் பார்த்தா உனக்கு கஷ்டம் ஆவும்ன்னா பார்க்க வேணாம். பேச வேணாம். வரேன்.''

வெண்ணிலா காப்பி டம்ளருடன் வெளியே வந்தாள். செருப்பு அணிந்து கொண்டிருந்த திருநாவுக்கரசைப் பார்த்து திகைத்தாள்.

''ஏம்பா போறாரு.''

அப்பா பதில் சொல்லவில்லை, அம்மா சொன்னாள்.

''குடம் வாங்க முதல் ஆளா ஆயிரம் ரூவா போட்டுச் சாம். அத்தினி வேணாம் தொள்ளாயிரம் திருப்பறேன் னார் அப்பா. கோச்சுக்கிட்டு போறாரு.''

''ஏன் தொள்ளாயிரம் திருப்பணும்?''

திருநா படியிறங்கிப் போனான்.

''அது கடன்பட்டா மாதிரி இருக்கு. ஆபீஸில் திருப்புனா அசிங்கம். அதான் இங்க திருப்பினேன். புள்ளை மனசுக்குக் கஷ்டமாயிட்டுப் போவுது.''

''அதுக்கொண்ணும் போவலை. வாங்கினா பேசுவேன். பார்ப்பேன். இல்லைன்னா பேசமாட்டேன், பார்க்க மாட்டேன்னாங்க. சரி, பார்க்கா தீங்கன்னு போறாரு'' மூத்தபெண் குற்றம் சொல்லும் குரலில் பேசினாள்.

''தப்புப்பா. இப்ப காப்பியை என்ன பண்றது?''

''காப்பி கிடக்குடி, மூஞ்சி முறிச்சா மாதிரில அனுப்பிட்டாரு'' மூத்த பெண் பேச,

''ஏய் மனோன்மணி? தெரு தாண்டிருச்சா பாரு''— அம்மா வாசல் பக்கம் போனாள். மனோன்மணியும்கூட ஓடினாள்.



''நிறுத்தக் கூடாதா? என்னடா இது அதிசயமா ஆளை உள்ள கொண்டாந்துக்காரேன்னு பார்த்தேன். விரட்டிட்டாரு.''

''விரட்டலைம்மா, அவன் புரிஞ்சுக்காத போய்ட் டான்.''

''நீ புரிஞ்சுக்கலை. ஒரு அன்புல செஞ்த வேணாம், திருப்பி எடுத்துக்கன்னா, செஞ்சவங்களுக்கு என்ன மரியாதை? இப்ப என்ன பண்றது காப்பிய?''

''நீ குடிடி''—அம்மா சொன்னாள்.

''எனக்கு வேணாம்.''

வீடு அமைதியாய் இருந்தது. குடம் மேஜைமீது யாராலும் சீராட்டப்படாமல் கிடந்தது.

''நான் போய் மொள்ளப்பேசி இட்டாரேன்.'' அம்மா சொன்னாள்.

''இப்ப வேணாம். அது கோபம் குறையட்டும்.''

''நான் போட்டாப்பா'' — வெண்ணிலா கேட்க நினைத்தாள்.

''நீ போனா நானும் வரேண்டி'' மூத்த பெண் மனோன்மணிக்குள் நினைப்பு ஓடியது. ஆனால் எல்லோரும் அமைதியாய் இருந்தார்கள்.

ஒரு வீடு என்பது அந்தக் குடும்பத்தலைவனின் சாயலை அதிகம் கொண்டிருக்கும். குடும்பத்துக்கு முகம் இல்லை. ஆனால் சாயல் உண்டு. அது குணச்சாயல், குடும்பத் தலைவன் குணம் ஆகவே குடும்பத்தின் குணம். ஐயாசாமி அதிகம் பேசாதவர். அதேபோல் அவர் குடும்பமும் அதிகம் பேசாத குடும்பம்.

சட்டென்று எனக்குத் !தெரியும், என்னால் முடியும், என்று, எகிறாத குடும்பம் அது. பெரியவங்க இருக்கச்

சொல்ல தடாபுடான்னு பேசக்கூடாது' என்று பழக்கப் படுத்திய குடும்பம்.

''அவனா வருவான்? நல்ல புள்ளை. ஓடியாடி அவன் தான் ஒரே நாள்ல கலெக்ட் பண்ணி பர்மிஷன் கேட்டுக் கிட்டுப் போய் மாம்பலத்துல எங்கியோ வாங்கியாந் தான்.''

''அத்தினி செய்த புள்ளைய இப்படி சட்டுன்னு ஒரு வாய் காபி கூட கொடுக்காத அனுப்பிட்டோம்.''

''கொஞ்சம் ரோசக்காரன். ஆனா எம்பேர்ல ரொம்ப அபிமானம், நான் வாணாம்டா செய்யாதேன்னா செய்ய மாட்டான்.''

''திருநா திருநான் றீங்க?''

''திருநாவுக்கரசுங்கறது அவம் பேரு. நல்ல வேலைக் காரன். தட்டுப்போடு, சாப்பிட்டுட்டு தூங்கறேன்.''

ஐயாசாமி சாப்பிட, வெண்ணிலா வெள்ளிக் குடத் தைத் தலையில் வைத்தபடி பீரோ கண்ணாடியில் அழகு பார்த்தாள்.

''ஏண்டி வெண்ணிலா, இப்படி யார் ரிட்டார்ட் ஆனாலும் வெள்ளிக்குடம் தருவாங்களா?''

''ரிட்டார்ட் இல்லை. ரிடையர்ட். ரிட்டார்ட்னா பைத்தியம். மூளை வளர்ச்சி இல்லைன்னு அர்த்தம்''— வெண்ணிலா பதில் சொன்னாள்.

''பார்த்தா அப்படித்தான் தெரியுது.''

''அந்தாளுக்கும் பக்குவம் இல்லை. பெரியவரே அப்படி எல்லாம் சொல்லக் கூடாது. நாங்க பிரியமா வாங்கித் தந்ததுன்னு பேசியிருக்கணும். என்னவோ மாப்பிள்ளை மாதிரி கோவிச்சுக்கிட்டும் போய்ட்டான்.''



''திருநா பேர் நல்லாருக்கில்லை''

''அப்பாகிட்ட சொல்லிடுவேன்.''

''சொல்லேன். நான் பேர் நல்லாருக்குன்னுதான் சொன்னேன். வெண்ணிலா குடத்துக்கு முத்தம் கொடுக் கறா. ஏன்னு தெரியலைன்னுடுவேன்.''

''நான் எப்படி முத்தம் கொடுத்தேன்?''

''நான் சொன்னா நம்புவாரு''

''கடவுளே. என்னிக்கு உன்னைய சீக்கிரம் கல்யாணம் கட்டி அனுப்பப் போறாங்களோ தெரியலை.''

''ஏன் உனக்கு இத்தினி கஷ்டம் நான் இருக்கறதுல?''

''ஒரு ஆள் வந்துட்டுக் காப்பி சாப்பிடாத போயி ருக்கான் பேரு நல்லாருக்குன்றியே''

''அப்படிப் போனது நல்லதுன்னு தோணுது. அப்பா மறுபடியும் போய் சமாதானப்படுத்தி கூட்டிக்கிட்டு வரு வாரு''

''ஏய் என்னா பேசறே...?'' வெண்ணிலா விழி விரித் துப் புருவம் உயர்த்தினாள்.

''ஒரு வாய் காபி சாப்புட்டுப் போவாரு. கவலைப் படாதேன்றேன்.''

''இன்னொரு தடவை பார்க்கணும்ன்ற மாதிரி பேசறே.''

''வந்தா, பார்த்து, வாங்கன்னு சொல்லத்தான் சொல்வாங்க.''

''நீ வீட்ல இருக்கற தொட்டுத்தான் அப்பா யாரை யும் உள்ள கூட்டியாராதேயில்லை.''

''அசிங்கமா பேசாதேடி. நான் என்னா பண்றேன் இருங்க காப்பி போடறேன்னு உள்ள ஓடறேனா எல்லாத் துக்கும் முந்தி...''

''அதான் ஆத்திரமா?''

''ஒரு ஆத்திரமும் இல்லை. எவனோ ஒருத்தன் வரு வான். கும்புடுன்னுவாங்க. கும்புடுவேன். கல்யாணம் பேசுவாங்க. புடிச்சிருக்கா மனோன்மணி? புடிக்காதா என்ன, நாம சொன்னா மனோன்மணி சரின்னுடமாட் டாளான்னுவாங்க. மனோன்மணி? நல்ல புள்ளை. வசதி யான இடம். எல்லா விவரமும் சுத்தமா பாத்துட்டோம். சரியா, முடிச்சுட்டா? முடிச்சுடலாம். மனோன்மணிக்கு இஷ்டம்தான்னுவாங்க. அவங்க சொன்ன ஆள் தான் மனோன்மணிக்குப் புருஷன். யாரா இருந்தாலும் என்னா பேரா இருந்தாலும் புருஷன் எனக்கு வைத்தியலிங்கம், குமாரலிங்கம், சிவலிங்கம்ன்னு பேரு இருந்தா புடிக்காது என் அதிர்ஷ்டம், இப்படி யாரோ எவனோ வந்தா என்னா செய்யறது. பேரும் புடிச்சுத்தான் ஆவணும்.''

''இப்ப என்னான்ற?''

''படிச்சுருக்கணும், வுட்டுட்டேன். உன்னை மாதிரி ப்ளஸ் டூவாவது பாஸ் பண்ணியிருக்கணும்! அப்ப தெரி யலை. புதினா அரைக்கிறதும், புள்ளிக் கோலம் போடற துமே பெரிசா போச்சு. எட்டு படிச்சா போதும்னு அப்ப தோணிச்சு. இப்பதான் தெரியுது. எஸ்.எஸ்.எல்.சியே கூட படிப்பே இல்லைன்னு.''

''இப்போ படி.''

''முடியாதுடி. 'தாய்'புக்குல எம்.ஜி.ஆர் கதை போடறான். அதுகூட மனசுல நிக்க மாட்டேன்னுது.''

''உனக்கு திருநா வேணும்றியா?''



''ச்சீ ச்சீ ச்சீ. உடனே இப்படி பேசறதா? யாரோ எவனோ...பேர் நல்லாருந்தது சட்டுன்னு காபி கொண் டாரணும்னு எனக்குத் தோணலையேன்னு வருத்தம். அவரை அனுப்பிச்சது தப்புன்னு நீ பேசினா மாதிரி நான் பேசலையேன்னு ஒரு மனசு கஷ்டம். எனக்கு ஒரு கேள்வி வெண்ணிலா, வெள்ளிக்குடம் வாங்கறதே மார்வாடி கடைல வைக்கத்தானா? வேற உபயோகம் இல்லையா?''

''வேற என்ன சொல்லு. வேற எதுக்கு? யோசனை பண்ணு. அந்த ஆள் மடையன். வேறு எதுனா வாங்கி யிருக்கணும். பீரோ வாங்கியிருக்கலாம். ஒரு சவரன்ல அப்பாவுக்கு மோதிரம் போட்டுருக்கலாம், துட்டாக்கூட கொடுத்திருக்கலாம்.''

''வெள்ளிக்குடம் நல்லா தாண்டி இருந்தது?''

''நல்லாத்தான் இருக்கும், என்ன உபயோகம்? பீரோல துணிக்கு அடியில் கிறல்படாத நசுங்காத பேப்பர் சுத்திப்போட்டு வைக்கணும். எங்க வீட்லயும் வெள்ளிக் குடம் இருக்குன்னு காட்டலாம். இதுக்கு எட்டு டம்ளர் வாங்கியிருந்தா அதுவும் உதவும், உனக்குப் பொண்ணு பார்க்க வரபோது வைக்கலாம் எனக்குப் புடிக்கலை.''

''எதை?''

''வெள்ளிக்குடம், அந்த ஆளு எதையும்.''

''அவன் நல்லவன் இல்லைன்றியா?''

''எவனும், எந்த ஆம்பிளையும் நல்லவன் இல்லை.''

''ஏன்?''

''வெளிய வேலைக்குப் போய்ட்டு வந்தா உனக்கும் தெரியும்.''

''பஸ்ஸுல உரசுறாங்கன்னு சொன்னே.''

''அவன் உத்தமன். இதுக்கு மேல ராட்சஸன் எல்லாம் இருக்கான். இன்னிக்கு படையல் வச்சோம். அம்மன்

கோயில் பிரசாதம்னு மல்லிப் பூச்சரம் மேஜைல வைக்கிறான். பக்கத்து சீட்காரன்கிட்ட, 'நான் பூ கொடுத்தேன். வெண்ணிலா வாங்கிக்கிச்சு, என்ன அர்த்தம் அதுக்கு'ன்னு கேக்கறான்.''

''ஐயோ.''

''பக்கத்து சீட்காரன், 'ஏங்க நான் மிட்டாய் கொடுத்தா வாங்க மாட்டேன்னீங்க. அவரு பூக்கொடுத்தாரு வாங்கிடீங்களேன்னு கேக்கறான்.''

''அப்புறம்.''

''பூவத் தூக்கிக் குப்பைக் கூடைல போட்டுட்டேன். கொடுத்தவன் பார்க்கற மாதிரி...''

''ஏண்டி, வெள்ளிக்குடம் எங்க, கொண்டா. எதிர் வூட்ல போய் காமிச்சுட்டு வரலாம்.'' அம்மா உள்ளவந்து குடம் வாங்கினாள். புடவைத் தலைப்பில் மூடிக்கொண்டு வெளியே போனாள்.

அப்பா பெஞ்சில் தலையணை வைத்து மெல்லச் சாய்ந்தார்.

வெண்ணிலா திரும்பி அக்காவைப் பார்த்தாள். அவள் மனசுக்குள்ளே 'திருநா திருநா' என்று சொல்லிக் கொண்டிருப்பது போல் பட்டது.

''இது வயசுக் கோளாறு, எட்டாவதுக்குப் பிறகு படிப்பு நிறுத்தி, சமையல் வேலை செய்யச் சொல்லி, இருபத்தியிரண்டு வயது வரை எந்த லட்சியமும் எந்த வேலையும் இல்லாது கல்யாணம்தான் இனி வேலை என்று காத்துக் கொண்டிருக்கிற கொடுமை என்று தோன்றியது. நல்ல வேளை, இதில் தான் மாட்டிக் கொள்ளவில்லை என்கிற ஆறுதல் வந்தது.

டென் ஏ ஒன். இரண்டு வருடமா நிரந்தரமில்லாத வேலை. பரிட்சை எழுதியிருக்கிறாள். தேர்வு பெற்றால்



உடனே எங்கேயாவது போடுவார்கள். ஆயிரத்து எண்ணூறு உடனே கிடைக்கும். சென்னையிலோ செங்கல்பட்டிலோ உடனடியாய் நிரந்தர வேலை கிடைக்கும். இப்போது வேலை செய்கிற ஹெல்த் டிபார்ட்மெண்டில் கூட நிரந்தரமாக்கப்படலாம்.

எட்டரை மணி வண்டி பிடித்து ஏதேனும் நாவல் படித்தபடி போகலாம். இப்போதும் அதே வண்டிதான். சில சமயம் நாவல் படிக்கத்தோன்றும். சில சமயம் பாடுகிறார்கள். மாற்றி மாற்றி பழைய, புதிய சினிமா பாட்டுகள் பாடுகிறார்கள். பேசுகிறார்கள். அநேகமாய் எல்லா பெண்களும் பேசுகிறார்கள். பெண்களைப் பற்றித் தான் பேசுகிறார்கள். கற்பு மிக முக்கியம் என்கிறார்கள். ஆனால் கற்பிழந்த கதைகளாய்த்தான் சொல்கிறார்கள். எல்லாம் உண்மைக் கதைகள். பேர் கேட்காதம்மா என்று ஆரம்பித்து கடைசியில் பெயர், ஊர் சம்பந்தப்பட்ட ஆண் எல்லாம் சொல்கிறார்கள்.

சில சமயம் நூறு கதை கேட்டிருப்பாள். கதை கேட்க கதை கேட்க உலகம் புரிந்தது போலவும் இருந்தது புரியாதது போலவும் இருந்தது.

''நாலு குழந்தைகள். மூத்தது பொண். அடுத்தது புள்ளை, அடுத்தது பொண், அடுத்தது புள்ளை முப்பத்தி ஒரு வயசு சட்டுன்னு புருஷன் குழந்தைகள் எல்லாத்தையும் விட்டுட்டு அவளைவிட இரண்டு வயசு சின்னவனோட ஓடிப்போய்ட்டா. டெல்லில குடித்தனம். நல்லாதான் இருக்கா.''

''என் தங்கைக்கு எழுதினேன். இந்த மாதிரி இவ டெல்லிக்கு வந்துருக்கலாம். விசாரிச்சு எழுதுன்னு எழுதினேன். வேகாத வெய்யில்ல என் தங்கை போயிருக்கா, உள்ள கூப்பிட்டு லெமன் ஜூஸ் கொடுத்துப் பேசினாளாம். பெரிய வீடாம். ஆறு ஏழு வேலைக்காரனாம்.

ரொம்ப நன்னா வச்சுண்டுருக்கானாம். குழந்தைகளைப் பற்றி பேசவேயில்லையாம்.''

ரயில் சத்தம் கூட காதில் ஏறாது. கதை மட்டும் விழும் மனசில் புரளும்.

ஓடிப்போய்க் கெட்டழிந்த கதையும் சொல்வார்கள்.

எது உத்தமம் ஓடிப்போவதா? இல்லையா என்று நிர்ணயிக்கவே முடியாது.

ஆனால் எது செய்தாலும் ஒரு தடவைக்கு நூறு தடவை யோசித்தால் சரி என்பது தெரிந்தது.

எவனாவது 'லவ்யூ' என்றால், சட்டென்று இளகக் கூடாது என்பது புரிந்தது. அப்படி இளகியவர்கள் எல்லாம் அழிந்திருக்கிறார்கள் என்பது புரிந்தது.

லவ் செய்யலாம். யார், என்ன, எதனால் லவ் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

வெண்ணிலா முற்றிலும் உலர்ந்த துணிகளை எடுத்து மடித்தாள். நாளை மறுநாள் வேலைக்கும் போக வேண்டும். நடுவே நாலுநாள் கம்பல்ஸரி லீவு. வேலைத் தொடர்ச்சி இல்லாத லீவு உலர்ந்த புடவைகளை அயர்னிங் கொடுக்க வேண்டும். மடித்த மூன்று புடவை களைச் சுருட்டிக் கொண்டு மனோன்மணியிடம் சொல்லி விட்டுப் படியிறங்கினாள்.

ஒரு மூலையில் சலவை செய்யும் கடை இருந்தது.

வாசலில் கரி குவித்து நெருப்புப் போட்டிருந்தார்கள். உள்ளே பெட்டி போடும் மேஜையில் தாளம் தட்டியபடி திருநா பாடிக் கொண்டிருந்தான்.

''ஆற்றங்கரை மேட்டினிலே ஆடி நிற்கும் நாணலது
காற்று வந்தால் சாய்வதில்லை.
கனிந்த மரம் வீழ்வதில்லை''



எதிர் மேஜை மீது இரண்டு இளைஞர்கள் அவன் பாடுவதைக் கேட்டபடி இருந்தார்கள்.

அவள் வர, பாட்டு நின்றது.

''சந்தானம்...வாத்தியார் மக வந்திருக்குது பாரு'' திருநா எழுந்து குரல் கொடுத்தான்.

''கை கரியா இருக்குது திருநா. வாங்கி அப்படி வையேன்.''

திருநா அவள் புடவைகளை வாங்கினான். அவளுக்கு வெட்கமாய் இருந்தது.

# 3

''நீங்க என்னா செய்யறீங்க இங்க?'' வெண்ணிலா வியப்போடு கேட்டாள்.

ஆண்களுக்குப் பல முகங்கள் இருப்பதாய் அவளுக்குத் தோன்றியது. தனது வீட்டில் வெகு சாதுவாய் உட்கார்ந் திருந்த திருநாவுக்கரசு இங்கே ரொம்ப அலட்டலாய் இருப்பதுபோல் பட்டது.

''சும்மா ஒன் அவர் உட்கார்ந்திருப்பேன். கடைல என் சலவைத் துணி எடுக்கணும், உடனே வுடமாட்டாரு, உட்கார்ந்து போலாம்னு சொல்லிருவாரு ரொம்ப சிநேகிதம்.'' திருநா தயக்கமாய் பதில் சொன்னான்.

''தடால்னு போய்ட்டீங்க. அப்பா ரொம்ப வருத் தப்பட்டாரு. ரிடையர் ஆன அன்னிக்கு இப்படித்தான் நடந்துக்குவாங்களா?''

''கேளு சந்தானம். இப்பதாங்க கடை முதலாளி கிட்ட சொல்லி வருத்தப்பட்டேன். ஆயிரம் ரூபாய்ல தொள்ளாயிரம் திருப்பித்தராரு, வாங்க மாட்டேன்னா, பேசமாட்டேன்னு சொல்லிருக்கேன். சொல்லுப்பா சந்தானம்.''

''ரொம்பநாளா ஐயாசாமி முதலியாரு எனக்குத் தெரியும்'' சந்தானம் என்கிற சலவைக்கடை ஆள் நிதானமாய் பேசினான். ''யாரண்டையும் ஒட்ட மாட்டாரு. பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தைதான் பதில் வரும். இதுக்கு கோச்சிக்கினு வரதான்னு சொன்னேன்.''

''ஏம்பா அவரு செஞ்சுது நியாயம்?''

''தப்புதான். சந்தோஷமா துட்டு மொய் எழுதினா அது திருப்பி தரேன்றது அவ்வளோ அழகில்லை. ஏன்னா அவரு ஒன்னு கேட்டாருன்றியே பதிலுக்கு எனக்கு எழுத முடியலைன்னா என்னா செய்வேன்னு கேட்டாருன்றியே?''

''அப்படி கேட்பாங்களாப்பா யாராவது?'' திருநா கொஞ்சம் கோபமாய் கேட்டான்.

வெண்ணிலாவுக்குக் கொஞ்சம் உட்கார்ந்து பேச வேண்டும் போல் இருந்தது.

''கரி வெடிக்கும் தங்கச்சி கொஞ்சம் தள்ளி போயிரு உப்புக்கரியா இருக்குது.''

''உள்ளே வந்துருங்க வெண்ணிலா'' திருநா தான் உட்கார்ந்திருந்த ஸ்டூலை எடுத்துக் கடைக்குள்ளேயே வாசல் பக்கமாக நகர்த்தினான், வெண்ணிலா அமர்ந்தாள்.



''மூணு புடவையும் இப்பவே வேணுமா?''

''ஒண்ணு வேணும். காலைல வெளியே போறேன்.''

''கொஞ்சம் உட்காருங்க. போட்டுகொடுத்திடறேன். ஐயாசாமி மாதிரி மனுஷன் ஆப்புடறது கஷ்டம். நாம தான் பொறுமையா போணும் ஆனா திருநா ஒருமாதிரி ஆயிட்டான் வந்தது தப்பா? பேசினது தப்பான்னு புலம்பிட்டான்.''

''வந்தது தப்பு.''

''தொள்ளாயிரம் வாங்கினு வந்திருக்கணும்றீங்களா? இந்த முறை இடது பக்க வளைவுகள் தெரியவில்லை. இருந்து தோள சரிவும் கன்னமும் உதடுகளும் அவனைச் சுண்டியிழுத்தன.

''நாளைக்கு வந்து வாங்கிக்கறேன்னு சொல்லி இரண்டு நாள் வராத இருந்தா தானா புரிஞ்சுக்குவாரு. ஒரு விருந்தாளி சட்டுன்னு எழுந்து போனது எல்லோருக்கும் கஷ்டமா இருந்தது.''

''எனக்கும் இஷ்டமில்லீங்க. இத்தோட போச்சா? கம்பெனில இவரு கட்டின சீட்டு பணம், இன்ஷூரன்ஸ் இந்த மாசத்துச் சம்பளம் நிறைய இருக்குது. அவ்வளவு தொலைவு இவரு வரவேணாம். நானே உங்ககிட்ட வந்து தரேன்னு சொல்லியிருந்தேன். இப்ப என்ன செய்யறதுன்னே தெரியலை.''

''நீ சின்ன பையன் உனக்கு என்னடா வெட்கம். போய் நாளைக்குச் சாயந்திரம் எதுனா சொல்லிவிட்டு வாசல்ல நில்லு. நீ அடிச்சுத் துரத்தனாலும் வாத்தியாரே என்னால வராத இருக்க முடியலைன்னு சொல்லு.''

''நேரம் ஆவுங்களா?'' வெண்ணிலா எரியும் கரி குவியல் பார்த்துக் கேட்டாள்.

''கரி சரியா பத்தலை தாயி, ஒன்னுதானே வேணும் நான் கொண்டாந்து தரேன் அரை அவர்ல. நீ போ.''

''நீங்க அப்பா பேச்சு பார்க்காத வாங்க.''

''வெள்ளிக்குடம் புடிச்சிருந்ததா?''

''ம்ம். என்னைய கேட்டா இரும்பு பீரோ எதுனா வாங்கியிருக்கலாம்.''

''வெள்ளி மதிப்புங்க. இப்ப வாங்கன பீரோ ஒரு மாசம் கழிச்சு இருந்தா நூறு ரூவா குறையும், வெள்ளி அப்படியா, இரண்டு வருஷத்துல அதே கொடம் இரட்டை விலைக்குப் போகும். அம்மாவுக்குகூட புடிக்கலையா?''

''அம்மாக்கு புடிச்சது...''

''அவங்களுக்கு வெள்ளி உபயோகம் தெரியும். வெள்ளி வீட்ல இருக்கறது என்னிக்கும் லாபம்.''

''வெண்ணிலாவுக்கு அந்த உண்மையை ஆமாம் என்று ஏற்றுக் கொள்ளத் தோன்றியது. ஆனால் செய்யவில்லை.

''இந்தப் புடவை அயர்ன் பண்ணி கொண்டாந்துருங்க. நாளைக்கு தேனாம்பேட்டை போய் வரணும்''

''லீவுல இருக்கீங்களா?''

''இல்லீங்க, ஊஸ் அவுட் செய்துட்டாங்க. மூணு மாசத்துக்கு ஒரு தடவை சர்வீஸ் கட் ஆவும்.''

''எப்ப பர்மனென்ட்?''



''பரிட்சை எழுதியிருக்கேன். ரிசல்ட் வரணும்.''

''கவர்மெண்ட் வேலைக்கு இப்ப லஞ்சம் பத்தாயிரம் பதினைஞ்சாயிரம் கேட்கறாங்கப்பா'' சந்தானம் இடையில் புகுந்தான்.

''அதெல்லாம் இருக்காது நாங்க பேக்வேர்ட் முதலியாரு. நியாயத்துக்கு கிடைக்கணும்.'' வெண்ணிலா கடைக்கு வெளியே நகர்ந்தாள். திருநாவைப் பார்த்தாள். ''அப்பாகிட்ட நீங்க வர்றதா சொல்லட்டா...''

''வாணாங்க. நானே வரேன்,'' திருநா எழுந்து வழியனுப்பினான்.

இந்த முறை பின்பக்க சுழிவும், இடுப்பு சரிவும் மனதை இழுத்தன.

சந்தானம் கரியை வெங்கல இஸ்திரிப் பெட்டியில் கொட்டி அதன் மீது தெருவில் குவிந்திருந்த நெருப்பைக் கொட்டினான். அடித்து மூடினான். லாக் போட்டான்.

வெண்ணிலா எவ்வளவு தூரம் போனாள் என்பதைப் பார்த்துக் கொண்டான்.

''ஏண்டா உங்க வாத்தியார் பொண்ணுதானே அது?''

''ஆமா ஏன்?''

''ஏன் அப்படி உத்து உத்து பார்க்கற...?''

''நான் பார்க்கலையேப்பா.''

''டேய் நானும் உன்னைய மாதிரி வயசு பையனா இருந்தவன் தான். அதுக்கோசரம் தெரிஞ்சவங்க வூட்டுப் பொண்ணை இப்படி பார்க்கறது தப்பு.''

''அதுவா கிளம்பி போயிருச்சு. நானும் சரின்னு அனுப்பிட்டேன். கடைக்கு வர கஸ்டமரை இப்படி பார்த்தா என் கதி என்னா ஆவரது.''

''இல்ல சந்தானம் நான் சாதாரணமா பார்த்தேன்.''

''த்தோ பார், உன் வயசுக்கு பார்வை அப்படித்தான் போவும். இடம், தராதரம் வேணும். வாத்தியார் உன்னை வேணும்னுதான் துரத்திட்டார்ன்னு நினைக்கிறேன்.''

''இல்லே சந்தானம்.''

''ஆமா. உன் பார்வை தப்பு.''

''நான் உன் கடைக்கு வரலே போய்யா''

''உனக்கு நல்லது சொன்னா எடுக்காது, வாத்யார் பொண்ணை இஷ்டப்படறேன்னு சொல்லு. கட்டிக்க ஆசைப்படறேன்னு சொல்லு. அது வேறு விதம்.. சும்மா துண்டுபீடி பசங்க மாதிரி நடக்கக் கூடாது.''

''இரண்டு வருஷமா வாத்தியார் தெரியும். இவ்வளவு அழகா அவருக்கு பொண்ணு இருக்குன்னு தெரியாது.''

''அதான் வாத்யார் எல்லார்கிட்டவும் ஒதுங்கின மாதிரி பழகறாரு. பொண்ணு பெத்தவன் கவலை பெரிய கவலை திருநா. அதுவும் பார்க்க பளிச்சுன்னு குத்து விளக்காட்டம் பொண்ணு இருந்தா அப்பனுக்கு எப்பவும் கவலைதான்.''

''நாம என்ன தப்பா செய்யப் போறம் சந்தானம்?''

''செய்துட்டா? செய்துட்டா உனக்கு அவமானமா? அவருக்கு அவமானமா? நீ நல்லபடியா இரண்டு தடவ உள்ளே போய் வெளியவருவ. எதிர் வூட்டுக்காரி யார் அது? எதிர்வூட்டுக்கு ஒரு மொட்டை பையன் அடிக்கடி



வந்துட்டுப் போறான்னுவா. அவனா எனக்குத் தெரியும்னு இன்னொருத்தி சொல்லுவா.''

''இப்ப என்னன்றே நீ?''

''ரொம்ப வழியாதே''

''அந்தப் பொண்ணே நல்லாத்தான் பேசுது.''

''மொறி படற வரைக்கும் பொண்ணுங்களுக்குத் தெரியாது. மொறி பட்டது யாரைப் பார்த்தாலும் மிரளும். உனக்கு என்ன வயசு?''

''இருபத்தி அஞ்சு.''

''இரண்டு வருஷம் ஆச்சா வேலைக்குப் போய்.''

''மூணு வருஷம்?''

''பேசாத கல்யாணம் கட்டிக்க.''

''வாத்தியார் பொண்ணையா?'' திருநா வாயைப் பிளந்தான்.

சந்தானம் அவனை வெறித்துப் பார்த்தான்.

''மொட்டை பையன்றது எவ்வளவு தெளிவா காட்டிட்டப் பார்.''

''ஏன் சந்தானம்?'' திருநா குரலில் தோல்வி தெரிந்தது.

''உனக்கு வாத்தியார் பொண்ணு மேல இஷ்டமாயிருச்சா?''

''அப்படியில்லை.''

''ஆமான்னா ஆமான்னு சொல்லு. இல்லைன்னா இல்லைன்னு சொல்லு.''

''ஆமா.''

"வீட்டாண்ட எதுவும் வெச்சுக்காதே. எந்தப் பொண்ணும் இஷ்டப்படாது. சும்மா எதுனா சொல்லி அது வேலை செய்யற இடத்துக்குப் போ" அத்தினி பதறாது."

"ஏன் வந்தேன்னு கேக்க மாட்டாங்களா?"

"எங்க வேலை செய்யுது வெண்ணிலா?"

"சரியா தெரியலை. தேனாம்பேட்டைன்னு சொல்லிச்சே."

"உனக்கு வாத்தியார் பொண்ணுமேல இஷ்டம் தானே."

"இல்லைன்னு சொல்ல முடியாது."

"நேர் பதிலா சொல்லு. வெண்ணிலாவ கட்டிக் கிறியா?"

"சரின்னா கட்டிக்குவேன்."

"என்ன சம்பளம் வாங்கறே?"

"இரண்டாயிரத்து இருநூறு."

"உன் விஷயத்தை என்கிட்ட வுடு."

"வராத இங்கெல்லாம்னு சொல்லிட்டா."

"சொல்லாதபடி உனக்கு வேலை சொல்லித் தரேன்."

"நிசம்தானா சந்தானம்"

"நான் லவ் பண்ணி கட்டினவன். எனக்கு சூசகம் தெரியும். இன்னொருத்தன் லவ் பண்றதுல எனக்கு சந்தோஷம்."

"எப்ப வந்து உன்னைப் பார்க்கறது?"

"நா எங்க போறேன். எனக்கு இதுதான் இடம். எப்பவேணா வா. ஆனா ஒண்ணு சும்மா டகல் பாஜி



வேலையா எதுனா செய்தே எனக்கு கோவம் வந்துரும். பொண்ணுங்களை ஏமாத்தறவனை எனக்குப் புடிக்காது"

"நான் ஏன் ஏமாத்தறேன்?"

"உங்க வீட்ல ஏத்துக்குவாங்களா."

"நீ யாரை வேணா கட்டிக்க, ஐயர் பொண்ணை மட்டும் இட்டாராதேன்னுச்சு மதனி."

"ஏனாம்?"

"பிரிச்சுருவாளாம்."

"அது கரெக்ட். இந்தப் புடவை அயர்ன் போட்டு நானே போறேன். நீ சாப்புட்டு கடை அடைக்கற நேரத்துக்குவா, பேசலாம்."

ஆண் பெண்ணால் ஈர்க்கப்படுவதும் பெண் ஆணால் ஈர்க்கப்படுவதும் இயற்கை, இயல்பு. இந்த இயல்பை இயல்பாய் இந்த நேரத்தில் வெளிப்படுத்த முடியாததுதான் சோகம். காதல் என்பது வேட்டையாடுதல் போலவும், ராஜதந்திரம் மிக்க செயல் போலவும், திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டிய விதம் போலவும் யாரால் மாற்றப்பட்டது என்பது தெரியவில்லை. காதல் சூழ்ச்சியற்றது. எங்கே சூழ்ச்சியில்லையோ அங்கே விளைவது. ஆனால் இங்கே எல்லா ஜனங்களும் சூழ்ச்சியின் நடுவே சூழ்ச்சியாய், சூழ்ச்சிக்காக வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சூழ்ச்சியுடன் இருக்க ஆசைப்படுகிறார்கள்.

சலவை சந்தானம் வெண்ணிலா மீது எந்த ஈடுபாடும் இல்லாதவன். ஆனால் சூழ்ச்சியில் ஈடுபாடு உள்ளவன். மக்களுக்கு அரசியல் சூழ்ச்சி, விளம்பரம் சூழ்ச்சி, செய்தொழில் சூழ்ச்சி, உறவினர் சூழ்ச்சி, செய்தொழிலும்

ஸ்டாண்ட் போட்டு வைத்த சைக்கிள் அடிவாரத்தில் தெரியும்.

அதோபார் அதோபார் என் சைக்கிள், சிவப்பு சீட்டு. சில்வர் கேரியர் பளிச்சுன்னு தெரியுதில்லை. அத்தனையும் விட்டு அந்த சைக்கிளையே கொஞ்ச நேரம் பார்க்கத் தோன்றும். இதுவரை ஒரு சைக்கிளை அப்படி பார்த்திருக்கவே மாட்டார்கள். காரணம் என்ன—? உயரம் போனதால்.

சென்னையிலிருந்து இரண்டு வருடம் ஊர் விட்டுப் போய் சென்னை திரும்ப, சென்ட்ரலை நேசிக்கமுடியும் மவுண்ட்ரோட் மனதைச் சொக்கவும், தன் பேட்டைக்கு வர சகலமும் ஆவலாய் கவனிக்க முடியும். தன் வீட்டு வாசலை மிதிக்க அந்த இடம் சொர்க்கமாய் தெரியும். இது ஏன் விலகிப் போனதால்.

காதலிக்க உயர்ந்த புத்தியும் விலகல் உள்ள மனசும் வேண்டும். நேர்மை அங்கே தானாய் வரும்.

அனுபவிச்சவன் இப்படி பிரிச்சுப்பிரிச்சு பார்க்கலாம். அறியாதவன் மாட்டினா அவனுக்குத் தெரியுமா?

அனுபவித்தவனைப்படி அனுபவி கேள். தெளிவாகப் படித்ததையும் கேட்டதையும் தனித்து அமர்ந்து யோசி. காதல் என்றால் என்ன? கேள்வி கேள். எவரையும் இல்லை. உன்னையே. உன் நெஞ்சையே.

ஆனால் திருநாவுக்கு அவசரம். அட அழகா இருக்குதே ஐயாசாமி பொண்ணு என்று வியந்தது உண்மை, இயற்கை, இயல்பு, அதுதான் காதல் என்று கொண்டது பிசகு. இது காதல் தானா என்று தன்னைக் கேட்டுக் கொள்ளாதது பிசகு.

உத்து உத்துப் பார்க்கற என்னா என்கிற சலவை சந்தானம் அதட்டியதும் ஆமாம் என்றது அவசரம்.



நானும் லவ் பண்ணவன்தாம்மா. எனக்குத் தெரியும். என்கிட்ட விடு. மெய்ப்பொருள் காண்பதறிவு... திருக்குறள் பரிட்சை எழுத மட்டுமே மனனம் செய்த பிழை. பஸ்ஸில் படித்து விட்டுப் புரியலையே என்று முகம் திருப்பிக் கொள்கிறதால் வந்தவினை. யோசிப்பதே யில்லை.

தன் காதலைப் பிறரிடம் ஒப்படைத்துவிட்டு குப்புறப் படுத்துத் தூங்குவதில் லாபமில்லை. ஆனால் திருநா இது எதுவும் தெரியாமல் செய்தான்.

மடித்த புடவையோடு சந்தானம் முதலியார் வீட்டு வாசலில் சுத்த, வெண்ணிலா கதவு திறந்தாள். முறுவலித்தாள்.

''கொண்டாந்துட்டீங்களா? ரொம்ப தேங்க்ஸ். எவ்வளோ தரணும்?''

''நாளைக்கு பாக்கி ரெண்டையும் தேச்சு கொடுத்துட்டு வாங்கிக்கறேன். எங்கியோ போணம்னியேன்னு கொண்டாந்தேன். அப்பா இல்லையா? முருகா, ஒரு சொம்பு தண்ணி கொண்டாம்மா—''

திண்ணையில் உட்கார்ந்தான்.

''அப்பா திருப்புகழ் படிக்கறாரு கூப்புடட்டா?''

''வேணாம் தப்பு. அந்த மாதிரி நாலுபேர் நல்லது படிக்கறதாலதான் மழையே செய்யுது. இந்த தடவ நல்ல மழை செங்கல்பட்டுல. உங்க கிணறு ரொம்பிச்சா.''

''மழை பெஞ்சபோது எட்டி எடுத்துறலாம். இப்ப குறைஞ்சுடுச்சு. பாதி கிணறு இருக்கும், இருங்க தண்ணி எடுத்தாரேன்.''

''யாருடி?'' மனோன்மணி கேட்டாள்.

''லாண்ட்ரிக்காரர். புடவை அவசரமா கேட்டேன் எடுத்தாந்திருக்காரு.'' சொம்பு நீருடன் ஹால் கடந்தாள் வெளியே வந்தாள்.

''நான் கடைல லேடீஸ் யாரையும் உட்கார வைக்க மாட்டேன். சட்டுன்னு திருப்பி அனுப்பிடுவேன். திருநா தான் இருக்கான்னு வுட்டுட்டேன். அதும் தவிர அப்பத் தான் உங்களைப் பத்தி பேசிகிட்டு இருந்தோம்.''

''என்னைய பத்தியா'' வெண்ணிலா வியந்தாள்.

அந்த வியப்பிலிருந்து அவளுக்கு சந்தோஷமா, பயமா என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

''உங்களைன்னா நீங்களா? உங்க அம்மாவைப் பற்றி உங்க வீட்டப்பற்றி''

''எங்க வீட்டைப் பற்றி பேச என்ன இருக்கு?''

''மூணு வருஷமா வாத்தியாரு பழக்கம். ஒரே தட்டுல சாப்பிடற மாதிரி பழக்கம். ஆனா இன்னிக்குத்தான் முத முத வூட்டுக்குள்ளே போனேன். அவங்க இரண்டாவது மகளை இன்னிக்குத்தான் பார்க்கறேன். வீடே நல்ல மாதிரியா தெரிஞ்சுது, உட்கார்ந்து பேசறதுக்குள்ள கோச்சுக்கிட்டு வந்துட்டேன்னு வருத்தப்பட்டான்.''

''அவரு பண்ணது தப்பு.''

''நல்ல புள்ளைம்மா. பெரிய மனசு அவனுக்கு ஒரு தடவை இஸ்திரி பொட்டி கங்கு கீழே கொட்டி மெறிச்சுட் டேன். நிக்க முடியலை. இருவதுபுடவை உடனே கொடுத் தாவணும். இவன்தான் போட்டுக் கொடுத்தான். உனக் கேண்டா தலையெழுத்துன்னேன். இதுல ஒரு தப்பும் இல்லைன்னு உதவி செஞ்சான். இப்பகூட உங்க புடவையை...''

''அவர்தான் இஸ்திரி போட்டாரா?'' வெண்ணிலா உளறினாள்.



சந்தானம் விழித்துக் கொண்டான்.

''நான் இருக்கேனே. புடவை அவன்கிட்ட கொடுத்து அனுப்பலாம்ன்னு நினைச்சேன். அவனுக்கு வெட்கம். நானே கொணாந்துட்டேன்.''

''அப்பாவும் அப்படி தொள்ளாயிர ரூபா எடுத்து கொடுத்திருக்க வேணாம். யார் வாங்கிப்பாங்க.''

''நல்ல புள்ளை. ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. கொஞ்சம் படபடப்பு. உங்க அப்பா பேர் சொன்னா போதும் எழுந்து நிக்கறான். காப்பி கொணாந்திங்க ளாமே நீங்க...குடிக்காத வந்துட்டேன். நினைச்சுக்குவாங் களோ என்னவோன்னு வருத்தம்.''

''அதெல்லாம் ஒண்ணும் நினைக்கல்லேன்னு சொல்லுங்க.''

''சொல்றேன். வெள்ளிக் குடத்துக்கு பேர்பாதி காசு தான்கொடுத்திருக்கான். நாளைக்குப்போய் மீதி கொடுக் கணும்.''

''ஏன் அவ்வளோ கலெக்ஷன் ஆவலையா?''

''ஆயிருச்சு. வொர்க்கர்ஸ் உடனே காசு தருவாங் களா? ஒன்னாந்தேதி ஆவும். இவன் கைதுட்டு போட்டு பின்னாடி கலெக்ஷன் பண்ணனும். மதனிகிட்டேயும் கை மாத்தா வாங்கியிருக்கான்.''

''எத்தினி அண்ணன்?''

''ஒரு அண்ணன், ஒரு தங்கச்சி. தங்கச்சி மெட்ராஸ்ல இருக்கு. அண்ணன் பத்துவயசு பெரியவரு. அவரு வளர்த்த புள்ளைதான் இவன். ரொம்ப மரியாதை அண்ணன் பேர்ல. மதனியும் திருநா திருநான்னு பிரியமா இருக்கும்''

''எங்க வீடு அவருக்கு?''

''பஸ் ஸ்டான்ட் எதிர் தெரு—நாலாவது வீடு. நீங்க நாளைக்கு எப்ப போறீங்க வெளியே?''

''ஏன்?'' வெண்ணிலா சொல்லத் தயங்கினாள்.

''இது இருமல் மருந்துங்க. வீட்ல லேடீஸ்க்கு இருமல். இங்கன ஸ்டாக் இல்லையாம். நீங்க வாங்கியார முடியுமா, ரூபா கொண்டாந்து தரட்டா? திருநாகிட்ட சொன்னேன் மறந்துட்டான். தாம்பரத்திலியும் கிடைக்காது போல...''

''கொண்டாங்க நான் வாங்கிட்டு வரேன், காசு அப்புறம் பார்த்துக்கலாம்'' வாங்கினாள்.

''எப்பன்னு சொன்னா பணம் கொண்டாந்துடு வேனே. எட்டு எட்டரைக்குத்தான் போறீங்க.''

''ஒன்பதுக்கு ஸ்டேஷன்ல இருப்பேன். ஆபீஸ் போணும். மத்யானமே திரும்பிடலாம்.''

''ஏங்க?''

''நாளை மறுநாதான் ட்யூட்டி?''

''என்ன வேலைங்க?

''ஹெல்த் டிபார்ட்மெண்ட் குமாஸ்தா''

''யாருடி வாசல்ல?'' அம்மா இந்த முறை கேட்டாள்.

''சலவைக்காரரும்மா. மருந்து வாங்கிட்டு வரச் சொல்றாரு'' உள்ளே நோக்கி குரல்கொடுத்தாள். ''மதனி தவிர வேறு யாரு அவர் வீட்ல?''

''அம்மா, அப்பா இல்லீங்க. சித்தி ஒண்ணு அவங்களோடேயே இருக்கு. சின்ன வயசுலயே வீணாய்ட்டா போல''

''பாவம்''



''நாளைக்கு மீதிப்புடைவையை கொடுத்துடறம்மா, வரட்டா.''

''போய மறுபடி பாட்டு கேட்பீங்களா?''

''என்ன பாட்டு?''

''ஏதோ சினிமா பாட்டு பாடிக்கிட்டு இருந்தாரே, அது கேட்கறேன்''

''அவன் தூக்கம் வருதுன்னு போய்ட்டான். எப்பனா வந்தா பாடிக்கிட்டு இருப்பான். ரொம்ப நல்லா பாடு தான். ஏம்மா?''

''கேட்டேன்''

செம்பு தண்ணீரைத் தாகம் இன்றி சந்தானம் குடித்துத் தீர்த்தான். விடை பெற்றுக் கடைக்கு வந்தான். வெண்ணிலாவுக்கும் கரிசனம் இருக்கிறது, திருநாவின் பேரில் என்று தோன்றியது. மாட்டிச்சுன்னா நல்ல ஜோடி. கல்யாணத்தன்று அருகே நின்று போட்டோ எடுத்துக் கொள்ளலாம். இவர்களுக்கு நான்தான் கல்யாணம் செஞ்சு வச்சேன் என்று பெருமைப்படலாம்.

தெருவோடு போகிற ஆளை, திருநா வீட்டுப்பக்கம் திரும்பி உடனே வரச் சொன்னதாய் சொல்லச் சொன்னான்.

அவனுள் திட்டம் விரிந்தது.

சந்தானம் தவறானவன் இல்லை. கெட்டவன் இல்லை, விருப்பப்பட்ட ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைப்பது நல்ல காரியம் என்ற நினைப்பு உள்ளவன். அதில் கர்வம் அடைபவன். இப்படிச் செய்ய நிறைய மூளை வேண்டும் என்பதாய் நினைப்பவன். அப்படிப்பட்ட மூளை தன்னிடம் இருக்கிறது என்று கருது

பவன். ஆனால் காதல் என்பது ஒட்டு மாஞ்செடியல்ல. மேலும் ஒட்டு மாஞ்செடி கர்வத்தில் வளராது. கவனம் வேண்டும். மிகுந்த அக்கறை வேண்டும். அக்கறை என் பதும் அன்பு என்பதும் ஒன்றே. சந்தானம் அக்கறை உள்ளவனோ அன்பு உள்ளவனோ இல்லை. கர்வம் உள்ளவன்.

''உன்மேல அதுக்குப் பிரியம் இருக்குது திருநா.''

''உண்மையாவா சந்தானம்''

''எனக்குத் தெரிஞ்சுது அப்படி. உன் வீடு பற்றி கேட்டுது. உன் பாட்டு பற்றி கேட்டுது''

''என்னா சொன்ன?''

''நிறைய சொன்னேன். நாளைக் காலை ஒன்பது மணிக்கு ஸ்டேஷன்ல இருக்குமாம்''

''என்னை வரச் சொல்லிச்சா?''

அப்படிச் சொல்லலை. சும்மா சொல்லிச்சு''

''என்ன பண்றது சந்தானம்''

''போ. போய் பாரு. பக்குவமா பேசு. இதெல்லாமா சொல்லித் தரணும்?''

''என்ன பேசறதுன்னு தெரியலையே''

''இருவது ரூபா தரேன். அதுகிட்ட கொடுத்து சந்தானம் தந்தாருன்னு பேச ஆரம்பி.''

''என்ன இருவது?''

''மருந்து வாங்கியாற சொன்னேன், மெட்ராஸ் லேர்ந்து.''

''இங்கக் கிடைக்காத மருந்தா.''



''கிடைக்கும்பா. உனக்காகச் சொன்னேன்.''

''ரொம்ப தேங்க்ஸ் சந்தானம்.''

''கல்யாணத்துல முத பத்திரிகை எனக்குத்தான் சரியா?'' சந்தானம் பல் தெரியச் சிரித்தான்.

''நிச்சயமா'' திருநா வெட்கப்பட்டான்.

இரண்டுமே ஆபாசமாய் இருந்தன.

# 5

**ஆ**பாசம் என்பது காட்சியாய் செயலாய் இருக்கும் போதுதான் கண்டனம் தூள் பறக்கிறது. சிந்தனையில் ஆபாசம்தான் வெளிப்பாடுக்குக் காரணம். யோசிப்பிலேயே நிதானம் வேண்டியிருக்கிறது, தந்திரம் தவிர்க்க வேண்டியிருக்கிறது.

உடுத்திக்கொண்டு காலை எட்டரைக்கே ஸ்டேஷனுக்கு திருநா போனான். எடை பார்க்கும் மிஷினில் முகம் பார்த்தான்.

''ஏங்க சும்மா சும்மா அதில ஏறி நின்னுட்டு, எடை பார்க்கிற மிஷனா இல்லை, சலூன் கடைகண்ணாடியா?'' பக்கத்துக் கடைக்காரன் அதட்ட, திருநாவுக்கு கோபம் வந்தது.

''கண்ணாடி தேஞ்சா போச்சு?''

''கண்ணாடி தேயாது. மிசின் தேயும். நாலணா போட முடியலை பேச்சு வேற....''

''இந்தா நாலணா தேச்சுக்க.'' காசு எடுத்து மிட்டாய் டப்பாவில் திருநா அடித்து வைத்தான். கடை அடியில் குலுங்கியது.

''எதுனா அறிவிருக்காடா உனக்கு? மிஷினை தேய்க்கிறியேன்னா துட்டை எடுத்து என் கடைல அடிக்கிற?''

''நீதான கேட்ட... உங்க வீட்டு மிஷின் மாதிரி.''

''துட்டா கேட்டேன்?'' காசு தரையில் எறியப்பட்டது.

''உன்னுது இல்லேல்ல மிஷினு? முன்னையும் பின்னையும் பொத்திகிட்டு சும்மா இரு. நாலணா எடு.''

''எது நாலணா?''

''இங்க வச்சுத் தூக்கி அடிச்ச இல்லை... அந்த நாலணா.''

''போய் பொறுக்கிக்க.''

''எட்டி ஒரு உதவுட்டா உன் கடை மொத்தமும் ப்ளாட்பாரத்ல வுழும். நீதான் பொறுக்க வேண்டியிருக்கும்.''

''உதைடா பார்க்கலாம்.''

''டான்னா சொன்ன, பீடி விக்கிற நாயே'' உதைக்க திருநா தயாரானான். அடுத்து இருந்தவர்கள் சுற்றிக் கொண்டார்கள். ''வுடுங்க ப்ரதர்'' என்று சமாதானப்படுத்தினார்கள். எவனோ ஒருவன் நாலாணாவை பொறுக்கிக் கொடுத்து திருநாவைப் படுவேகமாய் தள்ளிக் கொண்டு போனான்.

என்ன நடக்கிறது என்று பார்ப்பதில் திருநாவை நிறைய பேர் உற்று கவனித்தார்கள்.

காதல் கர்வம் தரும், கர்வம் அலட்டல் தரும் அலட்டல் பிறருக்கு எரிச்சல் மூட்டும். எரிச்சலில் சண்டை வரும். சண்டையில் துன்பம் வளரும். துன்பம் எப்போது வேண்டுமானாலும் தலையில் வெட்டுக்கத்தியாய் இறங்கும். அந்த வெட்டுக் கத்தி காதலைக் காயப்படுத்தும்.



திருநா மறுபடி எடை மிஷில் ஏறி தலைவாரிக் கொண்டான், நிறைய பேருக்கு அது எரிச்சலைக் கொடுத்தது.

ஒன்பது மணிக்கு தவிப்பு உச்சக் கட்டத்திற்கு வந்தது. வரக்காணமே என்கிற வேதனை நெஞ்சம் உரித்தது. சண்டை போடறபோது வுட்டுட்டமோ பயம் வந்தது. இந்த தேவீடியா பையன் வம்புச் சண்டைக்கு கூப்புட்டு... ச்சே நானும் சண்டை போட்டுருக்கக்கூடாது குரங்கு மாதிரி ஆயிடுச்சு... மலர்ச்சியா சாந்தமா இருக்கணும், முயற்சித்தான். முகம் இன்னும் விகாரமானது போல் பட்டது.

ஒன்பது பத்து வரவில்லை.

ஸ்டேஷனின் வாசல் பார்த்தான். கிழிறங்கி படியேறி இரண்டு ப்ளாட்பாரம் முழுவதும் அலைந்தான்.

இரண்டு மின் வண்டிகள் கடந்தன. கூட்டம் அதிகம் இருந்தது. உற்று உற்று அவளா அவளா என்று பார்க்க வேண்டியிருந்தது.

மறுபடி நேரா அவா வீட்டாண்டையே போய் பாத்துடுவோமோ?

கிளம்பி படியேறுகையில் எதிர்ப்படியில் அவள் இறங்குவது தெரிந்தது.

என்னங்க என்று மனசு கூவி பின்னே ஓட முயற்சித்த போது அது தவறு என்று தோன்ற, மேலே ஓடியவன் நின்று கீழே இறங்கி ஓடியபோது நாலுபேர் இடிபட்டார்கள்.

''ஸ்டேஷன்ல கண்ணாமுச்சி ஆட றானுங்க காலங்காத்தால...'' யாரோ கிழவர் இடிபட்ட தோளைத் தடவிக் கொண்டார்.

திருநா, ப்ளாட்பாரம் போய் சாதாரணமாய் நின்று கொண்டான்.

அவள் திரும்பி வண்டி வருகிறதா என்று எட்டிப் பார்த்தாள். நிழலாய் சுவரோடு ஒட்டிக் கொண்டாள். தலையில் மஞ்சள் ரோஸ் இருந்தது. புடவையும் மஞ்சள் ரவிக்கையும் மஞ்சள், ரேஸூம் மஞ்சள்.

''மஞ்சள் முகமே வருக'' பாட்டு ஓடியது. நிறுத்தினான்.

'மங்கல விளக்கே வருக' மனசு தொடர்ந்து பாடியது. சும்மா இரு. அதட்டினான்.

அவளை நோக்கி நடந்தான்.

சிரித்தான்.

அவள் பாதி சிரித்துவிட்டு அடக்கிக் கொண்டாள். இரண்டு பக்கமும் பரபரக்க நோட்டமிட்டாள்.

''இங்க வேணாங்க. மாம்பலத்துல இறங்கி பேசுவோம்'' என்றாள்.

வண்டி வர, பதில் சொல்லாது லேடீஸ் கம்பார்ட்மெண்டில் ஏறினாள்.

நகர்ந்த வண்டியில் தாவி ஏறி, படியில் நின்ற வண்ணம் அவள் கோச்சையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தாம்பரம் இறங்கினான். அவள் இறங்குவதைப்பார்த்தான். மின்வண்டி தொடர்ந்தது. அவள் மாற அவனும் மாறினான். வண்டி வாசற்படியில் வந்த பயணம் தலை கலைந்திருப்பது தெரிந்தது. மறுபடி கண்ணாடி பார்க்க எண்ணம் வந்தது நிழலில் தலைபார்த்துக் கொண்டான். இருபது கெஜ இடைவெளி விட்டு மின் வண்டிக்காகக் காத்திருந்தார்கள்.



மின் வண்டிவர, அவள் ஜெனரல் கம்பார்ட்மெண்டில் ஏறினாள். அவனும் அதே இடத்தில் நுழைந்தான்.

சிரித்தான்.

கிறங்கினான்.

பேச வேண்டாம் என்று சைகை செய்தாள்.

மாட்டேன் என்று வேகமாய் தலையசைத்தான்.

மனசு பாடியது.
'கண்ணாலே நான் கண்ட கனவே-உயிர்
காதல் கொண்டே தென் மனமே'

உள்ளே மனசு துள்ளியது. கண்கள் அவளையே பார்க்க விரும்பியது. சந்தானம் ஜெயிச்சுட்டேன் என்று கூவத் தோன்றியது. ஜெயிச்சுட்டோமா என்று சந்தேகம் வந்தது.

மாம்பலம் சீக்கிரம் வர வேண்டுமே என்கிற தவிப்பு வந்தது. மாம்பலம் வர எட்டிப் பார்த்தான். அவளைப் பார்த்தான்.

இங்க இறங்க வேண்டாம். சைகையில் சொன்னாள்.

ஏன்? சைகையில் கேட்டான்.

அடுத்த ஸ்டேஷன் என்றாள்.

சரி என்று தலையசைத்தான். அவள் என்ன சொன்னாலும் செய்யத் தயாராய் இருந்தான்.

இதுதான் ஆண். காதலின் ஆரம்பத்தில் காதலிக்காக ஆண் எதுவும் செய்வான். ஆனால் ஏன் மாம்பலத்திலும் இறங்கவில்லை என்ன காரணம் என்று புருவம் சுருக்கி யோசித்தான்.

அவள் மறுபடி அவன் யோசனையைப் பார்த்துவிட்டு சிரித்தாள். அவன் சிணுங்கினான்.

நுங்கம்பாக்கத்தில் இறங்கினார்கள். இரண்டு பக்கமும் கவனமாய்ப் பார்த்தாள். மாடிப்படி அருகே போய் நின்று கொண்டாள்.

''எதுக்கு கூப்புட்டீங்க?'' என்று கேட்டாள்.

இந்தக் கேள்வி கேட்க இத்தனை தூரம் பயணப்பட வேண்டுமா என்று அவனுக்கு ஒரு கணம் தோன்றியது. தலையை உலுக்கி கேள்வி மறந்தான்.

''சந்தானம் இருவது ரூவா கொடுத்தாருங்க.''

''எதுக்கு?''

''மருந்து வாங்கச் சொன்னாராமே.''

''நான் போட்டு வாங்க மாட்டேனா, இதுக்குப் போய் உங்களை ஏன் அனுப்பணும்?''

''ராத்திரி பேசிக்கிட்டு இருந்தோம். அப்ப கொடுத்தாரு''

''என்னைப் பத்தியா?''

''எல்லாம்தான்... பேசினோம்.''

''நீங்க நல்லா பாடுவீங்களாமே, ராத்திரி புடவை கொண்டாந்து தந்தபோது பேசினாரு. இன்னிக்கு வேலைக்கு போலை?''

''லீவு. குடத்துக்கு பேர் பாதி காசு கொடுத்தேன். மீதி கொடுக்கணும்.''

''கை துட்டு போட்டு ஏன் இத்தின கஷ்டம்?''

''முதல் தேதி கிடைக்கும். வாத்தியார் பேர்ல ஒரு பிரியம்.''



''இப்ப போய் மருந்து வாங்கிடலாமா? எடுத்துட்டுப் போறீங்களா?''

''மருந்துனா மாம்பலத்துல இறங்கியிருக்கணும். நுங்கம்பாக்கத்துல கிடைக்குமா தெரியலையே?''

''மாம்பலத்துல தினம் இறங்குற இடமா, யாரும் பார்த்துட்டா? அதான் தாண்டிருவோம்னேன்.''

''அப்ப ஒண்ணு செய்வோம், மாம்பலம் வேணாம். எக்மோர்ல இறங்கி, மருந்து வாங்கிட்டு அப்படியே உங்க ஆபீஸ் போய்...''

''ஐயோ ஆபீஸ் எல்லாம் வராதீங்க.''

''நான் உள்ள வரலைங்க. வெளிய நிக்கறேன்.''

''வேணாம்பா வம்பு.''

''நீங்க சொன்ன மாதிரி எக்மோர்ல இறங்கிருவோம் அடுத்த வண்டி வருது. நான் லேடீஸ்லே ஏறிக்கிறேன்.'' ஏறினாள்.

அவன் ஏமாற்றமானான். பொறுத்துக் கொண்டான்.

மருந்து வாங்கினார்கள். பதிமூணு நாப்பது போக சில்லறையை அவனிடம் நீட்டினாள்.

''தாகமா இல்லையா? எதுனா குடிக்கிறீங்களா?''

''நீங்க எங்க போகணும்? மாம்பலம் வந்தேன். மாம்பலம் கிட்டதான் வெள்ளிக்கடை இருக்கு.''

''வாங்க பஸ்ல போயிடலாம்.''

''ஆபீஸ்.''

''நாளைக்குப் போயிக்கிறேன்.''

பஸ்ஸுக்கு காத்திருந்தார்கள்.

''உங்க மதினிக்கு குழந்தைங்க இருக்கா?''

''இரண்டு பையன்ங்க.''

''சித்தி யாரோ இருக்காங்களாமே?''

''எங்கம்மா தங்கச்சி. சின்ன வயதிலியே விடோ வாயிட்டாங்க. வேற யாரும் துணையில்லை.''

''அவங்களுக்கு பசங்க இருக்கா?''

''இருக்கு. ஒரு பையன்.''

''பெரிய குடும்பம் இல்லை.''

''அம்மா, சித்தி, அண்ணன், அண்ணி, பசங்க மூணு. பெரிசு நாலும் இல்லை.''

''தங்கச்சி?''

''மெட்ராஸ்ல இருக்கு''

''எந்த பக்கம்?''

''அபிராமபுரம், அத்தான் போர்ட் ட்ரஸ்ட்ல வேலை பார்க்கறாரு.''

''அவருக்கு பசங்க இருக்கா?''

''ஒரு பொண்ணு.''

''உங்களுக்கு கல்யாணத்துக்கு பார்க்கறாங்களா?''

''இல்லை. ஆனா வூட்ல பேசறாங்க. நான் இப்ப வேணாம்னுட்டேன்.''

''சொந்தக்காரப் பொண்ணு இருக்கா?''

''இல்லைங்க. வீட்ல கூட சொந்தம் வேணாம்ன் னாங்க.''



பஸ் வந்தது. ஏறிக் கொண்டார்கள். பஸ் காலியாக இருந்தது. அவள் லேடீஸ் ஸீட்டும், அவன் ஆண்கள் பக்க மும் உட்கார்ந்தார்கள்.

அவன்தான் டிக்கெட் வாங்கினான். பஸ் எத்திராஜ் காலேஜ் அருகே வரும்போது பெண்கள் கூட்டம் திபு திபு என்று ஏற அவள் சட்டென்று எழுந்து அவனைத் தாண்டி அவன் அருகே உட்கார்ந்து கொண்டாள்.

திருநாவுக்கு ஒரு கணம் மூச்சு நின்று போயிற்று. புடவை தலைப்பு முகம் தடவியது. பவுடர் வாசனை மூக்கு உரசியது. அவள் முழங்கையும் இடுப்பும் இடித்தன. மரியாதையாய் விலகி உட்கார்ந்தான்.

மாணவிகள் தேவையில்லாது சிரித்தார்கள். ஆங்கிலத் தில் பேசினார்கள். பஸ் முழுவதும் மாணவிகள். அவள் அவனையே உற்றுப் பார்த்தாள். அவன் எந்த மாணவி யையும் ஏறிட்டுப் பார்க்காது தலைகுனிந்து கொண் டான்.

''தினம் பாடுவீங்களா சலவை கடைல?''

''எப்பன்னா?''

''குடம் ரொம்ப நல்லாருந்தது நீங்க சொன்னமாதிரி விலை உயரும்.''

''இன்னிக்கு அப்பாவ பார்க்க வரணும்.''

''எப்ப வரீங்க?''

''ஆறு மணிக்கு.''

''வந்து, வந்து எதுனா உளறப் போறீங்க.''

''மாட்டேன்.''

''எந்தக் கடைல குடம் வாங்கினது?''

''லலிதா ஜுவல்லர்ஸ்.''

''நானும் வரட்டா. சும்மா நகை பார்க்கலாம்.''

அவன் கடையில் காசு கட்டினான். அவள் அவனை விட்டு நகர்ந்து மோதிரங்கள் பார்க்கத் துவங்கினாள். அவள் பார்வையில் ஏக்கம் இருந்தது. அந்த ஏக்கம் அவனை வாட்டியது.

'என்னாங்க எதுனா மோதிரம் வேணுமா—? கேட்க ஆசைப்பட்டான். அடக்கிக் கொண்டான். ஆம் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று பயந்தான்.

வெளியே வந்தார்கள்.

இப்போது என்ன என்று யோசித்தார்கள்.

''நாளைக்கு ட்யூட்டி உண்டா?'' கேட்டாள்.

''போணும், நாலு மணிக்கு முடியும்.''

''எனக்கு அஞ்சே முக்கா ஆறு பத்து மாம்பலத்தில் ஏறுவேன். ஏழே முக்கா எட்டாயிடும் வீடு வர.''

''நான் மாம்பலம் வரட்டா?''

''நாளைக்கா?''

''ஆமாம்.''

''கஷ்டம் உங்களுக்கு''

''ஒரு கஷ்டமும் இல்லை. நீ வான்னு சொல்லு வரேன்'' முதன் முறையாக ஒருமையில் அழைத்தான்.

''வாங்களேன்'' அவள் சிரித்தாள்.

இறங்கினான். கோல்ட் ஸ்பாட் குடித்தார்கள். அவள் காசு கொடுத்தாள்.

மாம்பலத்தில் விசேஷமாய் தள்ளி தள்ளி நின்றார்கள். செங்கல்பட்டில் பிரிந்து நடந்தார்கள்



''வெண்ணிலா வானில்வரும் வேளையில் நான் விழித்திருந்தேன்.''

இரண்டு மணி வெய்யிலில் பாடியபடி சலவைக் கடைக்கு நடந்தான்.

உடம்பும் மனசும் கிறங்கிக் கிடந்தன.

''என்னடா என்ன ஆச்சு?'' சந்தானம் வியப்புடன் கேட்க,

ரொம்ப அடக்கமாய்,

''ஜெயிச்சுட்டேன் தலைவா'' என்றான்.

வெற்றி என்பது என்னவென்று அறியாது, வெற்றி பெற்றதாய் நினைப்பது தோல்விக்குச் சமம். இதையெல்லாம் இந்த நிலையில் யார் சொன்னாலும் திருநாவுக்கு ஏறாது.

## 6

''வெண்ணிலாவை நானே லவ் பண்ணமாதிரி இருக்குது போயேன். தப்பா நினைச்சுக்காதே, ஒரு சந்தோஷத்துல சொன்னேன்; நான் போட்ட கணக்கு தப்பா வரவே வராது. வாழ்க வளர்க மேற்கொண்டு...''

''வெண்ணிலா என்னைய லவ் பண்ணுதுன்றியா; சந்தானம்?''

''கடவுளே, இவன் எடத்துல என்னைய வைக்காது போயிட்டியே என்னா கேள்விடா இது. உன்னைய லவ் பண்ணாத பொண்ணா உன் பக்கத்துல வந்து உட்கார்ந்து....''

''வாயா வார்த்தையா சொல்லலை சந்தானம்''

''பாண்டு பத்திரம் எடுத்துக்கினுபோய் கேளேன். உனக்கு சொல்லணும். வாயா வார்த்தையா சொல்லணும். அவ்வளவுதானே. முதல்லே இரண்டு டீ சொல்லு''

டீக்கு ஆர்டர் தந்து விட்டு வர,

''நாளைக்கு பார்க்கப் போறியோ''

''கம்பெனி முடிஞ்சதும் மாம்பலம் வரேன்னேன் சரின்னுச்சு.''

''வெரிகுட், வெறும் கையோட போவாத''

''பூ வாங்கிட்டு போட்டுமா?''

''ஏன் தாலி கட்டிட்டீங்க, தலைல பூ முடிக்கிறதுக்கு முண்டம். என் பேச்சைக் கேளு. நல்லதா ஒரு பரிசுப் பொருள் வாங்கிக் கொண்டு போய், கடைல பார்த்தேன், உன் ஞாபகம் வந்துச்சுன்னு.''

''துண்ற பொருளா?''

''நீ பலான வீட்டுக்குப் போறவன் மாதிரி பேசறடா. அப்படியில்லை. பரிசுப்பொருள். உதாரணமா கியூடெக்ஸ் வேணாம்ன்ற பொண்ணு ரொம்ப குறைவு. உசத்தியா பதினாறு பதினேழு ரூபாய்க்கு ஏகப்பட்ட கலர்ல கிடைக்கும். அதும் விரலுக்கு ஏத்த கலரா எடு. கொடு. சும்மா தொட்டுக் கொடுக்காதே. அப்படி தள்ளிஇது உனக்குன்னு வை.''

திருநா மறுநாள் இருவதுரூபாய் கியூடெக்ஸ் வாங்கிக் கொண்டு போய் வெண்ணிலா உட்கார்ந்த பெஞ்சுக்கு அருகே வைத்தான்.

''இதப் பார்த்ததும் உன் விரல் நினைப்பு வந்துச்சு வெண்ணிலா''



''ஐயோ இந்த ஷேட் ஏன் வாங்கினீங்க? நானே கருப்பு இந்த டார்க் கலர் எனக்கு சூட் ஆகுமா? எங்க வாங்கினீங்க?...''

''தாம்பரத்துல'',

''லைட் பிங்க் எனக்குப் பிடிக்குங்க. பரவாயில்லை. இருக்கட்டும். நேற்று என்ன பாடினீங்க, சலைவைக் கடைல''

''வெண்ணிலா வானில் வரும் வேளையில் நான் விழித்திருந்தேன்''

''நல்ல பாட்டு, சந்தானம் ஏதும் கேட்கலையா?''

''கேட்கமாட்டாரு—''

''அவருக்குச் சொல்லிடாதீங்க''

''எது''

''நாம பேசறது''

''மாட்டேன்''

''வண்டி வருது. தாம்பரத்தில் கூட பேச வேணாம் யாரும் பார்த்தா கஷ்டம்''

''சனிக்கிழமை ஆபீஸ் உண்டா வெண்ணிலா?''

''லீவுங்க''

''எனக்கு அரை நாள்''

''போய்ட்டு வாங்க, ட்யூட்டி முக்கியம்.'' வண்டி வந்தது பிரிந்தனர்.

''அவசரப்படாதே, திருநா. வேகம் காட்டினா உடைஞ்சிடும்''

''நாளைக்கு மாம்பலத்துல ஏறு. சைதாப்பேட்டைல எதிர்வண்டி பிடிச்சு மறுபடி மாம்பலம் போ. உங்க சந்துல ஒரு பாய் எனக்கு வேண்டியவன். கல்லு தோடு வச்சிருப்பவன், ஒரு ஜதை இருவது, இருவத்தஞ்சு சொல்வான். ஆறு ஜதை வாங்கிக்க, மாம்பலத்துல பக்கத்துல உட்கார்ந்து ஒவ்வொன்னா எடுத்துவுடு.

''எல்லாத்தையும் ஒரே பாக்கெட்ல வைக்காதே இடது ஒண்ணு வலது ஒண்ணு மேல்சட்டைப் பாக்கெட் பர்ஸ்ல ஒன்னுன்னு வை. ஒவ்வொன்னா எடுத்து வுடு. எல்லா காது தோடும் ஒன்னை ஒன்னு மிஞ்சணும். என்னாங்க இதுன்னு கேட்கும். உனக்கு எது சரியா இருக்கும்னு தெரியலை. இதுக்கு முன்னாடி இந்தப் பொருள் எதுவும் வாங்கிப் பழக்கமில்லை. கியூடெக்ஸ் போல ஆவக்கூடாதுன்னு ஆறு ஜதையா பிடுச்சுக்கிட்டு வந்தேன், வேணுங்கறதை எடுத்துக்க. வேணாங்கறத தாம்பரம்தாண்டி காட்டாங்குளத்தூர் ஏரி வரப்போ வீசி போட்டுடுன்னு சொல்லு''

''போடுமா''

''போடாதுடா எளுதித் தரேன். தோடு வாங்கின அட்டை கூட தூக்கிப் போட்டுடாது''

தாமரையாய் ஒரு தோடு. ஒற்றைக்கல் பெரும் சிகப்பு மாங்காய் ஸ்டட். ப்ளூவைச் சுற்றி சிறிய வெள்ளை, முத்துக்கு நடுவே பச்சை. தங்கம்தான் என்கிற மாதிரி கவரிங் தோடு ஒரு ஜதை. எடுத்து ஒவ்வொன்றாக வைத்தான்.

''என்னாங்க இது?''

''உனக்கு எது நல்லா இருக்கும்னு தெரியலை. உன் முகம் வாடக் கூடாதுன்னு கவலை. நல்லாருக்குன்னு நீ சொல்லணுமேன்னு ஆசை''



''எல்லா நல்லாருக்கு திருநா. ஐயோ இது வாங்கணும்னு ரொம்ப நாளா ஆசை. எப்படி உங்களுக்குத் தெரிஞ்சுது''—வாரி பர்ஸில் போட்டுக் கொண்டாள்.

''இன்னிக்கு என்னா பாடுவீங்க திருநா?''

''நீ எது சொல்றியோ இது''

''கண்மணி நீ வரக் காத்திருந்தேன், தெரியுமா?''

''தெரியும். வருவியா?''

''ரெண்டு புடவை அயர்ன் பண்ணணும்.''

சலவைக் கடைக்கு அருகே உள்ள வீட்டில் சிறிய வராண்டா இருந்தது. புடவையைக் கொடுத்துவிட்டு உள்ளே போனாள்.

''உட்காரும்மா, ஐயாசாமி பொண்ணுதானே?''

''ஆமாம், அது ஹிண்டு பேப்பரா?''

''இதுவா நேத்திது''

''பரவாயில்லை. புடவை கொடுத்தேன் தேய்க்கறதுக்கு''

''ஆவட்டும் உட்காரு''

''அந்திப்பகல் என்னருகே வா'' அவன் குரல் கேட்டது. கேட்டபடி ஹிண்டு படித்தாள். உள்ளே புடவை சுழல ஆடினாள். புடவை வாங்கிச் சிரித்தாள். வீடு திரும்பினாள்.

''திருநா...உன் ஐடியா என்னா?''

''புரியலை சந்தானம்''

''அந்தப் பொண்ணை விரும்பற இல்லே?''

''நிச்சயமா''

''கட்டிக்கணும்னு ஆசை இருக்குல்ல?''

''நிச்சயமா''

''இதுவரைக்கும் வாத்தியார போய் பார்க்கல இல்லே?''

''இல்ல சந்தானம்.''

''இப்ப போய் பார்''

கதவு தட்டினான். வெண்ணிலா திறந்து டப்பென்று மூடினாள்.

''என்னடி அது. யாரு வாசல்ல?'' அம்மாக்காரி குரல் கேட்டது.

''த்தே திருநாவுக்கரசு.... என்னவோ பேய் பார்த்தாப் பல ஓடி வரியே, வாப்பா வழி தெரிஞ்சுதா?''

''வாத்தியாரு இல்லீங்களா?''

''இப்பக்கூட கொஞ்சம் முந்தி இங்க உன்னப்பத்தி தான் பேச்சு. புள்ள வரவேல்லை பார்ன்னு வா,''

''திருநா நல்லாருக்கியா? ஐயாசாமி சிரிப்புடன் வந்தார்.

குனிந்து பாதம் தொட்டான். ''எனக்கு மனசே சரியில்ல வாத்தியாரே. பார்க்கக்கூடாது, பார்க்கக்கூடாதுன்னு நினைச்சேன். மனசு ஒப்பல வந்துட்டேன்.''

''நான் என்னா சண்டையா போட்டேன்?''

''சண்டையில்ல ஒரு வருத்தம். என் அன்பு புரிஞ்சுக்கலையேன்னு''

''புரிஞ்சு போச்சு. வா, காப்பி சாப்பிடறியா?''

''வெண்ணிலா குரல் கொடுக்க...''



''நான் போடறேன்மா,'' மனோன்மணி சமையலறைக்கு ஓடினாள். வெண்ணிலா பீரோ கதவை லேசாய் திறந்து ஹாலில் உள்ளவனைப் பார்க்கும்படி வைத்துக் கொண்டாள்.

கம்பெனி விஷயம் பேசினார்கள். அரசியல் பேசினார்கள். கோவில்குளம் பற்றி பேசினார்கள். இன்சூரன்ஸ் செக் வந்துவிட்டதாம். மொத்த கணக்கு எழுவதாயிரமாம் பெரியவளுக்கு வரன் பார்க்கறேன். திருநா உனக்குத் தெரிஞ்சுது சொல். இரண்டு வரன் வந்திருக்கு. பேசிக்கிட்டு இருக்கோம். ஒன்று அநேகமா படிஞ்சுடும்.

''சொல்றேன், வாத்தியாரே வரட்டா....''

''எதிர் ஹாலில் பளிச்சென்று விளக்கெரிந்தது வெண்ணிலா கையசைத்தாள்.''

''அவங்க, வெண்ணிலா வேலைக்குப் போயிட்டாங்களா!''

வெண்ணிலா வாம்மா, வேலைக்குப் போய் வந்துடுச்சு நம்ம திருநா தெரியும் இல்லே.''

''தெரியும்மா நல்லாயிருக்கீங்களா?''

''இருக்கேன் வறேன்'' வெளியேறினான்.

''திருநா, பேசாத நான் சொல்றத கேள். நீ பார்த்து சமாதானமாய்ட்ட இல்ல. உங்க வீட்ல விவரம் சொல்லி அனுப்பு.''

''ஐயோ''

''என்னடா ஐயோ''

''வீட்டுல ஒத்துக்குவாங்களா தெரியலையே''

''ஆம்பளைதானடா நீ. கட்டினா வாத்தியார் பொண்ணு, இல்லைன்னா கல்யாணமே வேணாம்னு அடம்புடி. சோறு தின்னாத''

''பசிக்குமே''

''இரண்டு பொட்டலம் பிரியாணி புடிச்சுட்டு வா, உட்கார்ந்து நாம சாப்பிடலாம்''

''அப்படியும் முடியாதுன்னட்டா?''

''நான் இருக்கேண்டா''

''என்னது?''

''வீட்டை விட்டு வெளியே ஓடிப்போய் கல்யாணம் கட்டி, மாலையும், கழுத்துமா இந்த செங்கல்பட்டிலே நான் நிறுத்தறேன்.''

''சந்தானம், கூடப்புறந்தவன்கூட செய்யமாட்டாங்க இப்படி ஒரு உதவியை'' திருநாவின் குரல் தழுதழுத்தது.

''நண்பன் செய்வான் திருநா. லவ் பண்ணி ஜெயிச்சவன் செய்வான். ஆக ஆறப்போடாத, சூட்டோட சூடா முடிச்சுடு''

''லவ் யூன்னு சொல்லவேயில்லை வெண்ணிலா இது வரை''

''அட போக்கத்தவனே, இன்னமா உனக்குச் சந்தேகம்?''

''சந்தேகமில்லை. சந்தானம். பாடச் சொல்லி கேட்டுட்டுப் போவுது, பிரியமா பேசுது. வாயா வார்த்தையா''

''அடுத்த தடவ வெண்ணிலா வரப்போ சொல்லிடட்டுமா. சந்தேகப்படறான் உன்னைன்னு சொல்லிட்டா''

''ஐயோ வேணாம்''

''வீட்டுக்குப் போ. வேலையை ஆரம்பி. போமுதல்ல. சூடு ஆறின பொட்டில துணிபடியாது. சூட்டோட சூட்டா அழுத்து. சகலமும் படியும். படியாதது எல்லாம் படியும். வாழ்க வளர்க.''



ஆனால் தன் மனச்சூடு வீட்டில் யாருக்காவது புரியுமா என்கிற சந்தேகம் திருநாவிடம் இருந்தது.

''அண்ணி உங்களாண்ட பேசணும் தனியா''

''துட்டு கேட்காதப்பா, ஏற்கனவே ஏழரை ரூவா பாக்கி நீ.'' மதனி சோறு அள்ளி தட்டில் வைத்தாள்.

''துட்டு பாக்கிய இப்பகொடுத்துடறேன், நான் வேற பேசணும்''

''என்னாது?''

''எனக்கு கல்யாணம் பண்ணி வை.''

''என்னா?''

''எனக்கு...கல்யாணம்...பண்ணி வை?''

''என்னடா ஆச்சு உனக்கு, இழுத்துப்பிடிச்சு என்னய உட்கார வச்சு சட்டுன்னு பேசற''

''முடியாதுன்னா முடியாதுன்னு சொல்லு''

''ஏன் முடியாது? அததுஅப்பப்ப நடக்க வேண்டியது தானே. ஏங்க உங்களைத்தானே'' குரல் எழுப்பினாள்.

''சும்மா இருங்க அண்ணி'' திருநா அதட்டினான்.

மதனி கலவரமானாள்.

''தெருவுல போறவளையா கட்டி வைன்னு சொன்னேன், எங்கண்ணனை ஏன் கூப்புடறே?''

''ஏன் அவரு தெருவுல போறவளை கட்டிவச்சுரு வாரா உனக்கு, எப்ப சொன்னாரு?''

''எனக்குப் புடிச்ச பொண்ணா பார்த்து கட்டி வை''

அத்த சொல்லுடா மவராசான்னான். ஆனா ஒன்னு சொல்லிட்டேன். ஐயரு பொண்ணு, ஐயங்காரு பொண்ணு பேசினே...உன் இஷ்டம் செய்துக்கப்பான்னு ஒதுங்கிக்குவேன்... நீ இருக்கிற திசைகூட திரும்பமாட்டேன்.

''இது நம்ம ஜாதிப் பொண்ணுதான்''

''யாரு?''

''வெண்ணிலா''

''வெண்ணிலாவா? இது என்னடா நக்கி தின்ற பேரா இருக்கு. நம்ம ஜாதின்னு வேற சொல்றே?''

''வெண்ணிலா-நிலா இல்லை அது''

''எங்கித்துப் பொண்ணு''

''எங்க வாத்யார் பொண்ணு''

''ஐயாசாமியா. ஆஸ்பத்திரியாண்ட திண்ணைவூடு இருக்குமே...''

''ஆமா''

''ஒண்ணுமில்லாத குடிந்தனமாச்சேடா. ஓடு மாத்தி மாமாங்கம் ஆயிருக்குமே. அந்தத் தெருவிலேயே அதான் பழைய வீடு''

''பொண்ணு நல்லாயிருக்கும்''

''லவ்வா?''

''பழக்கம்''

''அதான் லவ்வான்றேன்?''

''பழக்கம்ன்னு சொல்றேன் இல்லே''

''எங்க புடிச்ச, சினிமா கொட்டகையிலா, பீச்சுலயா? எங்க...''



''ரயில்வே ஸ்டேசன்லே...''

''என்ன பண்ணுவீங்க ஸ்டேசன்லே?''

''ஒண்ணும் பண்ணமாட்டோம், பேசுவோம்''

''என்ன பேசுவீங்க?''

''சும்மா எதுனா?''

''நான் பார்த்ததில்லையே, அந்த வீட்டு பொம்பள கூட வெளி வாசல்லே வராது''

''நல்ல குடும்பம்''

''உங்க அண்ணன்கிட்ட சொல்லணுமே?''

''சொல்லு''

''மாட்டேனுட்டா?''

''ஊட்ல தங்கமாட்டேன்''

''அடி செருப்பால''

''அப்பவும் அதான் பதில்''

''இது வம்பு சமாசாரம். எனக்குத் தெரியாது?''

''அப்படின்னா சோறு வேணாம்'' தட்டை நகர்த்தினான்.

''இருடா போக்கத்தவனே, குளத்துகிட்ட கோவிச்சிக்கிட்டு என்னவோ செய்தானம் மாதிரி, இரு. நான் பேசி பார்க்கறேன். கூப்புட்டு கேப்பாரு. ஸ்டேசன்ல பார்த்தோம், சிரிச்சோம், பேசினோம்னு சொல்லாத, அண்ணனுக்குப் பிடிக்காது. அந்தப் பொண்ணு நல்லாருக்கு, எனக்குப் புடிச்சுதுன்னு சொல்லு.''

''சரி''

''ஏற்கனவே உங்க ஆத்தா என்னை எல்லாத்துக்கும் கரிச்சு கொட்டும். நீ வேற இதை என் தலையில அழுத்திட்டியா. உருட்டி எடுத்துரும் என்னை''

''உன்பாடு''

''சாப்பிடுடா முதல்லே''

இரண்டு நாட்கள் வீடு உருண்டது. யாரும் அவனை எதுவும் கேட்கவில்லை. திருநா கவலைப்பட்டான்.

மாம்பலம் ஸ்டேஷனில் அவளைப் பார்த்தான். பேச ஆரம்பித்தான்.

''இந்தாங்க இத வாங்கிக்கிங்க முதல்ல''

''என்ன?''

''சாக்லேட்''

''ஏன் எதுக்கு?''

''எனக்கு வேலை கன்ஃபார்ம் ஆயிருச்சு. நேத்து ரிசல்ட் வந்தது. எங்க ஆபீஸ்லேயே என்னை எடுத்துகிட்டாங்க, ஆனா வேற இடம்''

''ஐயனாவரம் ஈ எஸ் ஐ டிஸ்பென்சரி''

''கிளார்க் வேலைதானே?''

''பின்ன நர்ஸூ வேலையா? இன்னும் லேட்டாவும் வர. நான் மெட்ராசிலேயே கொஞ்ச நாள் தங்கப் போறேன், செங்கல்பட்டு கேட்கப் போறேன்''

''நடக்குமா?''

''ட்ரை பண்ணனும். அப்பா! கவர்மெண்ட் வேலை கடைசி மட்டும் கவலை இல்லை.''



''நான் எங்க வீட்டில பேசினேன்''

''ஆயிரத்து எழுநூறு வரும், எடுத்தவுடனே. எங்கம்மாவுக்கு மாத்திரை மருந்து எதுவும் துட்டு கொடுத்து வாங்க வேணாம். ரொம்ப நல்லமாதிரி டாக்டர் சார். இனிமே மாம்பலம் வரவேணாம்''

''ஏன்?''

''பார்க்லே ஏறி வண்டி மாத்தலாம் இல்லை... சென்ட்ரல்ல பஸ் பிடிச்சும் வரலாம். ஒண்ணரை மணி நேரத்துல கொண்டாந்து உட்டுறும் பஸ்ஸூ. யப்பா எவ்வளவோ சந்தோஷம் தெரியுமா?''

''கடையாண்ட வருவியா?''

''இல்லைங்க கோவில் போணும். எப்ப நேர்ந்துகிட்டது தெரியுமா?''

''வெண்ணிலா''

''ம்ம்...''

''ஐ லவ் யூ...''

''நான் கூடத்தான். வண்டி வருது. அப்புறம் பார்க்கலாம். எனக்கு வேலை கன்பார்ம் ஆனது அப்படியே றெக்கைகட்டி பறக்கறாப்லே... இனி கடைசி வரைக்கும் கஷ்டமில்லை. கவர்மெண்ட் வேலை''

வண்டி அவளை வாரிக்கொண்டு போயிற்று. அவன் சந்தோஷப்பட்டான். கொஞ்சம் கவலையும் பட்டான். அடுத்த பஸ் பிடித்து செங்கல்பட்டு போனான். சலைவைக் கடையில் பாடினான். இரவு சாப்பிட வீட்டுக்குப் போனான்.

''வாடா, போய் கை, கால் கழுவிட்டு வா''

''எங்க அண்ணி?''

''நானும் அண்ணனும் போயிருந்தோம்''

''எங்கே?'' திடுக்கிட்டு வினவினான்.

''உங்க வாத்தியார் விட்டுக்கு''

''என்ன ஆச்சு?''

''விழுந்து கும்பிடு''

''யாரை?''

''என்னை, உங்க அண்ணனை''

''என்ன அண்ணி, என்ன சொல்றீங்க?''

''வாத்தியார்கிட்ட பேசினோம். சரின்னாரு''

''நிசமாவா?''

''எட்டு சவரன் தான் போடுவாராம்?''

''போதும் அண்ணி''

''பத்து போடுங்கன்னு சொல்லிட்டு வந்துருக்கேன்''

''பார்த்திங்களா?''

''வெண்ணிலா தானே? பார்த்தேன். நல்லா இருக்கு ரொம்ப லட்சணம். முகத்துல அழகு, அமைதி எல்லாம் இருக்கு. கியூடெக்ஸ்தான் அதும் கலருக்கு சரிவரலை''

''நான் வாங்கிக் கொடுத்தது அண்ணி''

''அது வேறயா? போய் உன் அண்ணன் கிட்ட பேசு''

''தப்பான குடும்பம் இல்லை, அது போதும் எனக்கு. கல்யாணம் எப்படிச் செய்வாங்கன்னு தெரியலை'' அண்ணன் நிதானமா பேசினார்.

''சுமாரா செய்தா போதும் அண்ணே''



''அப்படி சொன்னா சரியாய்டுமா? நாலு தலை முறையா செங்கல்பட்டுல இருக்கும். ஊரு கூப்புட வேணாமா, நானூறு, ஐநூறு இலை விழுமே?''

''பேர்பாதி நான் ஏத்துக்கறேன், பேங்குல ஆறாயிரம் இருக்கு. சொசைட்டி லோன் நாலாயிரம் கிடைக்கும்...''

''பார்த்துக்கலாம், வர்ற வெள்ளி பாக்குவத்தலை மாத்திக்கலாம்னு பேச்சு''

''சரி அண்ணே''

''அதுக்கு முன்னாடி அங்க போயிட்டு வர்றது, அந்த வீட்டு வாசலாண்ட நிக்கறது... அப்புறம் லாண்டரி கடைல பாட்டு பாடறது வேணாம்''

''சரி அண்ணே''

''ஸ்டேசன்ல பேசறது கூட தப்புதான்.'' அண்ணி குறுக்கே பூந்து பேசினாள்.

தலையாட்டினான்.

''என்னிக்குப் பாக்குவத்தலை மாத்தறீங்கன்னு சொன்னா லீவு போட சௌகர்யம்''

''நீ வரக்கூடாது. அது பொண்ணு பார்க்கறப்ப. இது பொண்ணு பார்த்து நாங்க சமாச்சாரம் பேசற விஷயம். அது படிஞ்சா பாக்கு வெத்தல மாத்துவோம். நீ கூடாது.''

''சரி''

அவளைத் தேடினான். ஸ்டேஷன் முழுவதும் சுற்றினான் காணவில்லை.

ஐயனாவரம் ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு தாம்பரத்திலிருந்து போன் செய்தான்.

''ஹலோ வெண்ணிலா ஹியர்''

''என்ன காணம், நான் திருநா பேசறேன்''

''நான் மெட்ராஸ்ல எங்க சித்தப்பா வீட்டில தங்கிட்டேன், எப்படியிருக்கீங்க?''

''எதுனா நியூஸ் தெரிஞ்சுதா.''

''தெரிஞ்சுது. வரவாரம் நல்லபடியா முடியும்''

''செலவுபத்தி கவலைப்படாதே நான் இருக்கேன்.''

''அந்த தைரியம்தான் எனக்கு. போன் வச்சுருவா? பக்கத்துல டாக்டர் இருக்காங்க''

வைத்து விட்டாள்.

''என்ன வெண்ணிலா யாரு?'' அவளைக் கேட்டார்கள்.

''இரண்டாயிரம் தரது கஷ்டமில்லை மேடம். எனக்கு தெரிஞ்சவரு, செலவு பற்றி கவலையில்லைன்னுட்டாரு, எப்படியாவது செங்கல்பட்டு மாத்திக் கொடுங்க''

''இப்பதானே வந்துருக்கே பதினஞ்சு நாள் வேலை செய். பிறகு பேசலாம்''

''வரவாரம் முடிஞ்சுரும் நல்லபடியான்னு சொன்னேன்''

''மாற்றல் அவ்வளவு சீக்கிரம் கிடைக்காதும்மா. பதினைஞ்சு நாள் ஆகும்.''

''ஆவட்டும், மாறினா சரி''

# 7

நாள் மாறியது, நிலவு மாறியது. பாக்கு வெத்தலை மாறியது.

ஆறு பெரியவர்கள், ஊரில் உயர்ந்தவர்கள் வாத்தியார் பக்கம் நிற்க, இன்னுமொரு ஆறுபேர் திருநா அண்ணன் பக்கம் நிற்க—

எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு நானாகிய ஐயாசாமி முதலியாருக்கும், சரஸ்வதி அம்மாளுக்கும் பிறந்த மூத்த மகளான தர்மாம்பாள் என்ற மனோன்மணியை, காலம் சென்ற வரதராச முதலியாருக்கும், அவர் துணைவியார் பட்டமாளுக்கும் பிறந்த இளைய மகனான திருநாவுக்கரசுக்கு, வரும் ஆனி மாதம் பதினைந்தாம் தேதி, மீன லக்னத்தில், உத்திர நட்சத்திரத்தில் பெரியோர்கள் நிச்சயித்த வண்ணம் கன்னிகா தானம் செய்து வைப்பதாய் உறுதி கொள்கிறேன்.

நானும் அவ்வண்ணமே உறுதி கூறுகிறேன். திருநாவுக்கரசின் அண்ணன் கையெழுத்திட்டார். பலர் சாட்சியிட்டார்கள்.

''வாங்க இப்ப கை நனையுங்க. இலை போடும்மா. சொல்லி அனுப்பினேன். வெண்ணிலா வரமுடியலைப் பான்னுருச்சு. இது என் தம்பி, மெட்ராஸ்ல இருக்கான். அவன் வீட்டிலதான் வெண்ணிலா தங்கி வேலைக்குப் போவுது.''

அண்ணி விழித்தாள். மௌனமானாள்.

அண்ணனுக்கு வெண்ணிலா-மனோன்மணி எதுவும் புரியவில்லை. ஐயாசாமி பொண்ண கட்டிக்கணும்னான்

தம்பி. கட்டி கொடுக்க ஏற்பாடு செய்துட்டேன் என்று சந்தோஷத்தில் இருந்தார்.

புலவு பரிமாறினார்கள்.

வீட்டில் திருநா நாக்கைக் கடித்துக் கொண்டான். வெண்ணிலா நினைக்குது என்றான்.

அண்ணி பாதி விருந்தில் வீட்டுக்கு ஓடிவந்தாள்.

''திருநா அந்தப் பொண்ணு பேரு என்ன?''

''வெண்ணிலா ஏன்?''

''தப்பு நடந்து போச்சுடா.''

''ஏன் மாட்டேன்னுட்டாங்களா?''

''இல்லைடா தப்பு நடந்து போச்சு.''

''என்ன அண்ணி?''

''மனோன்மணிக்கு நிச்சயம் பண்ணிட்டோம்.''

''ஐயோ''

''கூவாதே. தயவு செய்து கூவாதே''

''அண்ணி நான் சொன்னது வெண்ணிலா.''

''மூத்த பொண்ணு இருக்கேடா. எப்படி இரண்டாவதுக்கு தருவாங்க. வெண்ணிலான்னு கூப்பிட்டபோது அதான் வந்தது.''

''வெட்டிருவாரு அண்ணன், விளையாடுறியா?''

''ஐயோ நான் முடியாது. இப்பபோய்.''



'நில்லு உங்கப்பா மேல ஆணை நில்லு. எம்மேல ஆணை நில்லு. உன் பன்னெண்டு வயசுலேர்ந்து இந்தக் கையால உனக்குச் சோறு போட்டது நிசம்னா நில்லு.''

''எப்படி அண்ணி?''

''தப்புத்தாண்டா. இரண்டாவது மகள்னு ஒரு வார்த்தை சொன்னியா?''

''வெண்ணிலான்னு பேர் சொன்னேனே?''

''முண்டம், இரண்டாவது பொண்ணைக் கொடுன்னு எப்படி படியேறிக் கேட்பாங்க, இந்தப் பொண்ணும் நல்லாதான் இருக்கு.''

''நான் இவளை லவ் பண்ணல.''

''இனிமே பண்ணு.''

''வெண்ணிலா செத்துடும்''

''அக்கா நல்லா இருக்கறது தெரிஞ்சா, என் தங்கச்சி சாவமாட்டா.''

''நான் செத்துருவேன் அண்ணி.''

''அதுக்கு முன்னாடி நான் செத்துருவேன்'' பாதி சோத்துல தட்டு தள்ளினியே, அந்த மாதிரி இல்ல. கயிறு கழுத்துல மாட்டி நாற்காலி உதைச்சுருவேன், நான் சொல்றதைக் கேளு.''

''என்னைப் பாழாக்கிட்டிங்களே.''

''இல்லை எல்லாம் நல்லதுக்குத்தான். உனக்கு இவதான் சரி. அது வேலைக்குப் போற பொண்ணு நமக்கு சரிப்படாது.

''ஐயோ வெண்ணிலா''

''நிறுத்துடா.''

''நான் அண்ணன்கிட்ட சொல்லி...''

''போ... போய் சொல்லு— பிரியாணி சாப்பிட்டுக் கிட்டு இருக்காங்க, போய் சொல்லு. வரபோது கையோட ஒத்தை மோளத்துக்கு சொல்லிட்டு வரச் சொல்லு.'' வெட்டியானுக்கு காசு கொடுத்துட்டு வரச் சொல்லு.''

''அண்ணி அண்ணி'' திருநா அழுதான். அண்ணியும் அழுதாள். நான் கால்வச்ச நாள்லேர்ந்து இந்த வீட்டுல எதுவும் கெட்டுபோலடா. உன் வாழ்க்கையும் கெட்டுப் போவாது. என் பேச்சு கேளு'' அவள் தலை கோதி விட்டாள். அழுதாள்.

அவன் மாடிக்குப் போய் தனியாக அழுதான்.

அண்ணன் கூப்பிட்ட போது துண்டால் முகம் துடைத்துக் கொண்டு வந்தான்.

''திருநா, பத்துப் பவுனுக்கு ஒத்துக்கிட்டாங்க. பாதி சாப்பாடு செலவு நம்முடையது. இன்னிலேர்ந்து இருவத்தியோராவது நாள் கல்யாணம் சரிதானா?''

பேசாதிருந்தான்.

''சொல்லுடா, துட்டுக்கு ஏற்பாடு பண்ணணுமே இரண்டு நாள்ல தரதா சொல்லிருக்கேன்.''

''என்னாடி ஆச்சு அவனுக்கு?''

''தலைநோவுதுன்னான்'' அண்ணி பரிதாபமாய் அவனைப் பார்த்தாள்.

''இங்கே வாடா வெளிச்சத்துக்கு வா'' அவன் வெளி வர திடுக்கிட்டார்.



''அழுதியா? ஏன் முகம் வீங்கியிருக்கு?''

''அவனுக்குப் பிடிக்கலை.''

''என்னது பிடிக்கலை.''

''பொண்ணு பிடிக்கலை.''

''ஏய் என்னாடி என்னா சொல்றே?'' அண்ணன் பதறினார். அம்மா வாரிக் கொண்டு எழுந்திருந்தாள்.

''அவன் சொன்னது சின்னப் பொண்ணு, அது பேர் தான் வெண்ணிலா''

''சின்னப் பொண்ணா, ஏண்டி விளையாடறீங்களா இரண்டு பேரும்?''

''இந்தப் பொண்ணு பேருதான் வெண்ணிலான்னு நான் நினைச்சுகிட்டு...''

''பிச்சு உதறிடுவேன்'' வேட்டியை மடித்துக்கொண்டு அண்ணியை அடிக்க கை ஓங்கினார். அண்ணி பயத்துடன் பின் வாங்கினாள்.

''கல்யாணம் பண்ணிவைன்னே, உடனே செஞ்சோம், பாக்கு வெத்தலை மாத்தின பிறகு சின்னப் பொண்ணு, பெரிய பொண்ணுன்னா...''

''அவளைத்தான் நான் லவ் பண்ணினேன்'' திருநா மூக்குறிஞ்சிப் பேசினான்.

''என்னது லவ்வா?''

''ஸ்டேசன்லே பார்த்துப் பேசுவானாம்.''

''எந்த ஸ்டேசன்லே?''

''தெரியலை?''

''ஒனக்கு அதெல்லாம் தெரியாது. பாக்கு வெத்தலை மாத்தின பொண்ணு. அது பேர் என்னா மனோன் மணியா''

''அதான் கட்டணும்.''

''முடியாது.''

''வெட்டிருவேன், அப்ப ஏன்னா மயித்துக்குடா என்ன அனுப்பினே?''

''நான் தவறு பண்ணிட்டேங்க.''

''நாரமுண்டை...'' பாய்ந்து போய் அவள் தலை முடியை கொத்தாய் பிடித்து முகத்தில் அறைந்தார் சுருண்டு விழுந்தவளை எட்டி உதைத்தார்.

''அடேய், அடேய் நிறுத்துடா.'' அம்மா அலறினாள் குழந்தைகள் விழித்து கதறின.

அண்ணனை திருநா தடுத்து நிறுத்தினான்.

''விடறா கையை.''

''மாட்டேன்''

''வுடறான்னா...''

''வேணாம் வா.''

''என்னா சொல்ற நீ.''

''நான் போய் வாத்தியார்கிட்ட பேசறேன்.''

''முடியாது. நீ பேசிட்டா முடிஞ்சுருமா. அப்ப என்னாமயிருக்கு என்ன பாக்கு வெத்தலை மாத்த அனுப்பின, இந்த லவ்வு கிவ்வெல்லாம் நம்ம வூட்ல நடக்காது.''

''கத்தாத அண்ணே.''



''டேய் முறைப்புக் காட்டி பேசறியா, பாக்குவெத்தல மாத்தின பொண்ணை கட்டறதாயிருந்தா கட்டிக்க, இல்ல போய்ட்டே இரு வெளியே.''

''அவன் போனா சரியாய்டுமா?''

''நீ பேசாதடி நாயே.'' மறுபடி அண்ணிக்கு அடி விழுந்தது.

''லவ்வுன்றத என்கிட்ட சொல்லியிருந்தா சனியன் பிடிச்சதுல இறங்கியிருக்க மாட்டேன். வூட்ல பெரிய பொண்ணை வெச்சுக்கிட்டு சின்னப் பொண்ணைக் கொடுன்னு எப்படி கேட்கறது? அதுவும் இத்தினி ஆயிட்ட பிறகு எப்படி பேசறது?''

''நான் சொல்லிட்டேன்.''

''என்னா சொல்றான்?''

''அழுவுறான்.''

''அழுவட்டும். அழுது இரண்டு நாள்ல அடங்கட்டும். கல்யாணம்னா அது பெரிய பொண்ணோடதான். நாலுபேர் பார்க்க எழுதிட்டு சின்னப் பொண்ணை கொடுன்னா ஊரைக் கூட்டி சிரிக்க மாட்டான்? நியாயமா அது? பெரியவ கதி என்னா? எவன் கட்டுவான்? இருந்து இருந்து பொண்ணு சாபம் வரணுமா வூட்டுக்கு?''

''நான் சொல்லிட்டேன்.''

''இதப்பத்தி இனிமே நீ பேசினா வெட்டி கூறு போட்டுறுவேன்.''

வீடு கலங்கி படுத்தது.

திருநா கடைக்குப் போய் சந்தானத்தைத் தேடினான். இல்லை, வீட்டிற்குப் போய் எழுப்பினான்.

''என்னாடா?''

''தப்பு நடந்து போச்சு.''

''ஐயோ வெண்ணிலாவை எதுனா செய்துட்டியா?''

''அது இல்ல சந்தானம். வேற பொண்ணைப் பேசி முடிச்சுட்டாங்க.''

''யாரு?''

''வெண்ணிலாவோட அக்கா மனோன்மணி?''

''வீட்டுக்கு அனுப்பினதா சொல்லவேயில்லையே நீ''

''அண்ணிகிட்டே சொன்னேன். இரண்டு தடவை போய் பேசிச்சு. இன்னி காலைல பாக்குவெத்தல மாத்திட்டாங்க.''

''ஐயோ என்னாடா இது?''

''அண்ணன்கிட்டே சொன்னேன் அண்ணிய போட்டு அடிக்கறாரு. இதான் நடக்கும்ன்னாரு.''

''வெண்ணிலாவுக்குத் தெரியுமா?''

''அது ஊர்ல சித்தப்பா வீட்ல இருக்கு. சித்தப்பா மட்டும் வந்தாரு?''

''இந்நேரம் தெரிஞ்சுக்கணுமே!''

''தெரிஞ்சிருக்கும். அதான் போய் சித்தப்பா வீடு தேடி...''

''தப்புடா இந்த ராத்திரியில''

''மணி பத்துதானே ஆவுது.''

''இல்ல. இது தப்பு.''

''எது?''



''அப்ப மனோன்மணி கதி''

''மனோன்மணியவா நான் லவ் பண்ணினேன்?''

''சரி, பாக்குவெத்தலை மாத்திட்டாங்களே?''

''வா. போய் வெண்ணிலாவைப் பார்க்கலாம்''

''சரியா வராது''

''ஏன்?''

''அக்கா கல்யாணத்தைத் தங்கச்சி எப்படி நிறுத்துவா?''

''நான் அவளைக் கூட்டிக்கிட்டு ஓடிப்போறேன் என் கைல தொழில் இருக்கு.''

''அவ வரலைன்னா?''

''காலைல வைகை போவும், அதுல தலை கொடுத்துடுவேன்.''

''திருநா என்னா பேசற நீ?''

''எனக்கு வேற வழி தெரியலை சந்தானம்''

''நீ வீட்டுக்குப் போ. காலைல போலாம்''

''இப்ப வா''

''தப்பு. காலை ஏழு மணிக்கு கிளம்பிடலாம். வா''

''நிச்சயம் வரணும்''

''வரேன் போய் தூங்கு''

தூக்கம் என்பது மனதின் அமைதி. மனது விழித்து வெந்தால் எப்படி தூங்கமுடியும்? கொட்ட கொட்ட

விழித்திருந்த திருநா, விடிந்த பிறகு குளித்துவிட்டு சந்தானம் வீட்டுக்குப் போனான்.

வண்டி ஏறினார்கள். வீட்டுக்குப் போகவேண்டாம். அயனாவரம் ஈ எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு போகலாம் என்று திட்டம் மாற்றினார்கள். வாசலில் காத்திருந்தார்கள்.

பத்துமணிக்கு வெண்ணிலா பஸ் இறங்கினாள். அவள் முகமும் வாடியிருந்தது.

''வெண்ணிலா'' திருநா அழைத்தான். வெண்ணிலா நின்றாள். சிரித்தாள். சிரிப்பில் வெறுமை இருந்தது.

''தப்பு நடந்து போச்சு வெண்ணிலா''

''முட்டாள்தனம்''

''எது?''

''யாரைக்கேட்டு உங்க வீட்டில பொண்ணு பார்க்க அனுப்பினீங்க? என்கிட்ட ஏன் பேசலை?''

''பேசட்ரை பண்ணினேன், நீ கன்பார்ம் ஆயிருச்சுன்னு சந்தோஷமா போயிட்டே''

''இதுவும் கன்பார்ம் ஆயிருச்சு, இப்ப என்ன பண்ணறது?''

''ஓடிறலாம் வெண்ணிலா''

''எங்க?''

''எங்கவேணா...''

''முடியாது எனக்கு வேலை பெரிது''

''நான் உனக்கு வேற இடத்துல வேலை...''

''கவர்மெண்ட் வேலை வேற எங்கியும், எப்படியும் வாங்கித்தர முடியாது.''



''அப்ப என்ன செய்யறது?''

''எங்க அக்காவையே கட்டிக்குங்க''

''முடியாது''

''எங்க அக்கா செத்துரும். எங்கப்பா தூக்குல தொங்குவாரு. எங்கம்மா கிணத்துல குதிச்சுடும். இத்தினி போன பிறகு நான் உசிரோட இருப்பேனா?''

''லவ் யூன்னு சொன்னியே?''

''ஆமாம்''

''மனசு மாத்திக்கிட்டியா இப்ப?''

''வேற வழி?''

''என்னால மாற முடியாது''

''உங்க இஷ்டம். ஆழம் தெரியாத காலை விட்டுட்டு ஆள் தெரியாம பாக்கு வெத்தலை மாத்திக்கிட்டு பொறுப்பில்லாம ஓடிடலாம்ன்னா எங்க ஓடறது? நான் வரலை''

''நான் மனோன்மணிய கட்டமாட்டேன்''

''உங்க இஷ்டம். நாங்க வரலை. உங்க வீடு வந்தது இப்ப கட்டமாட்டேன்னா ஊரு கேள்வி கேட்கும். எங்க குடும்பமே செத்துப் போவும்.''

''என்னா சொலற...''

''மனோன்மணிய கட்டிக்கிங்க''

''நீ''

''வேற எவனுக்காவது பாக்குவெத்தலை மாத்தி கட்டித் தருவாங்க''

''எம்பேர்ல லவ்வே இல்லையா?''

''இருந்தது. இப்ப இல்லை''

''ஏன்?''

''அக்காளை கொண்ட அத்தானை லவ் பண்றது தப்பு துரோகம்''

''நான் சாவறேன், அப்ப எல்லார்க்கும் நிம்மதி''

''இல்லை அப்பவும் எனக்கு முடிவு சாவுதான். அவமானம்தான்''

''உன்னை லவ் பண்ணிவிட்டு, மனோன்மணியை எப்படி—''

''அவள் பத்தாவது படிச்சவதான், ஆனா நல்லவ எதிர்த்து பேசாது, நல்லா சமைக்கும். வகை வகையா கோலம் போடும் ஒண்ணு தெரியுமா, எங்கக்கா நல்லா பாடும். நிறைய சினிமா பாட்டு வரும்.''

''ச்சே துரோகி''

''நானா, நெஞ்சுல கைவச்சு சொல்லுங்க. என்னா துரோகம்ன்னு சொல்லுங்க. முத பொண்ணு வீட்டுல இருக்கு. ரெண்டாவது பொண்ணை லவ் பண்ணற ஆள், பொறுமையாயில்ல இருக்கணும்? உடனே பொண்ணு கேட்டு அனுப்பி, முட்டாள்தனம் பண்ணது நீங்க. இப்ப உங்க கைல எங்க குடும்ப மானம் இருக்கு. நாம லவ் பண்ணது யாருக்கும் தெரியாது, சந்தானம்-தவிர. அவரு சொல்லட்டும், என்னா செய்யறதுன்னு?''

''வரவழியெல்லாம் மனோன்மணி தாண்டா சரி, தவறுக்கு மேல தவறு பண்ணிடாதேன்னு சொல்லிக்கிட்டுதாம்மா வரேன்'' சந்தானம் பேசினான்.

''இது ரோடு, வீடா இருந்தா கால்ல விழுந்திருப்பேன். என்னைப் பத்தி கவலைப்படாதீங்க. நல்ல



வேலை. நல்ல சம்பளம், சாவற மட்டும், கடைசி மட்டும் கவலையில்லை. எங்க அக்காவைக் கொன்னுடாதீங்க ப்ளீஸ்''

அவன் மறுபடி செங்கல்பட்டு திரும்பினான். கம்பெனிக்கு போனான். வேலை செய்தான். தனிமையில் அழுதான்.

''கண்களே கண்களே காதல் செய்வதை விட்டு விடுங்கள்'' என்று பாடினான்.

அண்ணி தொந்தரவு செய்ய, சொன்னபடி லோன் வாங்கினான். வீட்டில் வீசியெறிந்தான். சந்தானம் அவன் பழைய சட்டையை எடுத்து அளவுகொடுக்க புதிது தைக்கப்பட்டன.

''மோதிரம் அளவு கேட்கறாங்கடா, கை நீட்டுடா,'' சந்தானம் வலுக்கட்டாயமாய் அளவு எடுத்துக்கொண்டு போனான்.

கல்யாணத்திற்கு நாலு நாட்கள் இருந்தன. இன்னும் யாருக்கும் பத்திரிகை வைக்கவேயில்லை.

சந்தானம் கடையில் சாப்பிட்டான். தூங்கினான். இஸ்திரிபோடும் டேபிளில் தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந்தான். பெட்டி நெருப்பு அணைக்கப்பட்டு, கடைக் கதவு ஒருக்களித்து மூடப்பட்டிருந்தது.

மெல்ல கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

''சந்தானம்? இல்லீங்க, நான்தான்'' பெண் குரல் கேட்டது.

திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

மனோன்மணி தலைநிறைய பூவும், நெற்றிபொட்டும் வைர மூக்குத்தியுமாய் நின்றிருந்தாள்.

''என்னா,'' அதட்டினான்.

''வெண்ணிலா எல்லாம் சொல்லிச்சுங்க. நீங்க அவளை லவ் பண்ணினது எனக்குத் தெரியாது''

''தெரிஞ்சிருந்தா...?''

''உங்களை எனக்குப் பிடிக்கலைன்னு சொல்லியிருப்பேன்''

''இப்ப சொல்றது.''

''முடியாதுங்க. என்னை யாரும் பிடிச்சுருக்குதான்னு கேட்கல. சொல்லியிருந்தா நானாதான் சொல்லியிருக்கணும். இனிமே ஒன்னும் எடுபடாது.''

''சரி என்னா இப்போ?''

''ரொம்ப துக்கம்னாங்க, சாப்பிடறதே இல்லையாம்''

''ஆமா, என்னா இப்ப?''

''மனசு தளராத கல்யாணத்துக்கு வந்துருங்க, நான் வேற ஏற்பாடு பண்றேன்''

''என்னா?''

''தாம்பரம் குடிபோய்டலாம். உங்க வெண்ணிலாவை வரவழைச்சு...''

''ம்ம்...''

''அவளையும் கட்டிக்குங்க''

''வெண்ணிலா சொல்லிச்சா?''

''நான் சொல்றேன்''

''ஏன்?''

''கல்யாணம் நிறுத்திட்டா எனக்கு வேற இடத்துல கல்யாணம் நடக்காது. கஷ்டம். அவமானம், சாவறதை தவிர வேற வழியில்லை. அதனால சாவறதைவிட உங்களுக்கும கஷ்டமில்லாத எனக்கும் கஷ்டமில்லாத''... அவள் கண்ணில் நீர் வழிந்து கன்னமிறங்கி, புடவை நனைந்தது.

''நான் யாருக்கும், எப்பவும் எந்தக் கெடுதலும் பண்ணதில்லைங்க. என்னமோ இப்படி ஒரு சோதனை. நீங்க சரியா சாப்பிடறதில்லைன்னு சந்தானம் சொன்னாரு. ரொம்ப கஷ்டமாயிடிச்சு. அதான் இட்லியும் மீன் துவையலும் கொடுத்துட்டு சமாதானமா பேசிட்டுப் போகலாம்னு...''

''வெண்ணிலா ஒத்துக்குமா இதுக்கு.''

''நான் ஒத்துக்க வைக்கறேன். கடவுள் மேல சத்தியமா நான் உங்களுக்கு—''

அவன் திகைத்து நின்றான்.

''ஏங்க''

''எனக்கு நீ போதும்.''

''லவ் பண்ணிட்டு கஷ்டங்க.''

''இல்லை ஒரு கஷ்டமும் இல்லை.''

''ஏன் திடீர்ன்னு?''

''திடீர்ன்னுதான் லவ் பண்ணேன். திடீர்ன்னுதான் காணாத போச்சு. போகட்டும். அதுக்காக தாம்பரத்துல குடித்தனம் போட்டு அதெல்லாம் சரியா வராது.''

''வருங்க. நான் ஏற்பாடு...''

''சும்மா இரு. என்னா மீன்''

''நெத்திலி. ஏரி மீன்.''

''என்னைய பிடிச்சுருக்கா உனக்கு''—நிதானமாய் கேட்டான்.

''அன்னிக்கு காப்பி கொண்டாந்து குடுத்தேனே மறந்து போச்சா?''

''நான் உன்னை எங்கே பார்த்தேன். இப்பதான் நேர பார்க்கறேன்.''

''யாரு இருக்கறது வாசல்ல.''

''சந்தானம்''

''மயிராண்டி. அவருதான் இட்டாந்தார?''

''நானா வந்தேன் பேசலாம்ன்னு.''

''யாரு பேச கத்துக் கொடுத்தது?''

''கோலம் போடறதுலேர்ந்து சமைக்கற வரைக்கும் நானா கத்துக்கிட்டதுதான்.''

''பாடுவியா?''

''நல்லா வராது. ரேடியோகூட பாடுவேன்.''

''இப்படியெல்லாம் இருட்ல வரலாமா?''

''வராது போனா பெரும் கஷ்டம் வந்துடுமேன்னு தோணிச்சு.''

''வந்த வரைக்கும் போதும். சந்தோஷம், இட்லி வச்சுட்டு போ. பசிக்குது.''

''எம் பேர்ல கோவமா?''

''உம் பேர்லியா? பாவம் நீ என்ன பண்ணுவே.''

''நீங்களும் பாவம்தான். இடிஞ்சு போயிருக்கீங்க.''

''சரியாய்டுச்சு. டக்குன்னு வந்து தங்கச்சியையும் கட்டித் தரேன்னு...வேணாம் மனோன்மணி நீ போதும். இதுதான் லவ். இது போதும். செங்கல்பட்டிலியே எங்க



வீட்டிலியே மாடில ரூம் கட்டி...அது நான் கவனிச்சுக் கறேன் நீ கிளம்பு.''

''டிபன் பாக்ஸ்...?''

''இரு'' பிரித்து பசியோடு இட்லியும் மீன்துவையலும் சாப்பிட்டான். பானையில் தண்ணீர் மொண்டு குடித் தான்.

''உட்காரேன்''

''ஐயோ வீட்ல தேடுவாங்க.''

''உட்கார்.''

ஸ்டூலில் அமர்ந்தாள்.

''வெண்ணிலாகிட்ட சாரின்னு நான் சொன்னதா சொல்லிரு. நீயும் பயப்பட வேணாம். உங்க வீட்ல மைனர் செயின் போடறாங்களா எனக்கு.''

''ஆமா இரண்டரை சவரன்.''

''இது நாலு. இது நான் போடறேன் உனக்கு. இந்தா எடுத்துக்கிட்டு போய் பத்திரமா வச்சுக்க. கல்யாணத் தன்னிக்கு போட்டுக்க. யாருக்கும் சொல்லாத. ஏது ஏதுன்னு கேட்கட்டும். வாயே திறக்காத. வெண்ணிலா வுக்குக்கூட சொல்லவேணாம்.''

''ஐயோ வெறும் கழுத்தா இருக்கே?''

''நாலு நாளில உங்க வீட்டு செயின் வந்துருமில்ல. வேற செயின் கழுத்துல இருந்தா புதுசு போட்டது எடுக்குமா? அதான் வெறும் கழுத்தா...உங்க வீட்டு செயின் போடறதுக்கு வாட்டமா.''

''புரியுதுங்க. நான் வேண்டாத தெய்வம் இல்லை''—மறுபடி அவள் கண்ணில் நீர் திரண்டது. ''நீங்க சொல் றது புரியது''

''ச்சு அழாதே. நான் நேசிக்கிற பொண்டாட்டி கண்ல தண்ணிவுடக் கூடாது. அது தப்பு.''

அவள் துடைத்துக் கொண்டாள்.

''ஒரு பாட்டு கேட்கறியா?'' கேட்டான்.

சிரித்தாள்.

காதல் வெண்ணிலா கண்ணில் வந்தது

ஆசை பரிபாஷை

பரிமாறிக் கொண்டது.

மனசுவிட்டு பாடினான். வெண்ணிலா என்பதற்கு இப்போது வேறு அர்த்தம் அவன் மனசில் வந்தது.

''டேய் உங்க அண்ணா உன்னை தேடிக்கிட்டு வரார். திருநா உங்கண்ணன் வாரர்'' வெளியே சந்தானத்தின் பரபரப்பு குரல் கேட்டது. அவள் எழுந்தாள்.

''உட்கார் நான் உன் கூட இருக்க சொல்ல நீ யாருக்கும் பயப்பட வேணாம். உட்கார்.''

அவன் தொடர்ந்து பாடினான்.

அவள் தொடர்ந்து கேட்டாள்.

அண்ணனுக்கு பாட்டு கேட்டது. அவர் லேசாய் தலையில் அடித்துக்கொண்டு திரும்பிப் போனார்.

காதல் என்பது என்ன என்று அவருக்குப் புரியவில்லை.

திருநாவுக்கு புரிந்துவிட்டது.

முற்றும்

# என் அன்புக் காதலா

## 1

சமுத்திரம் பேக் கிரவுண்டா வெச்சு நீ அதுக்கு முன்னால நின்னினா நல்லாருக்காது''

''ம்ம்ம்''

''அப்படி அஸால்டா திரும்பி அப்படியே ஃப்ரீஸாயி நில்லு.''

''இப்படியா''

''முதுகு காட்டினா...பக்கவாட்டா நிக்கணும்''

''சரியா''

''அசையாதே''

''ம்ம்''

''சரி''

''ம்ம்''

''ரைட்லுக் கொடு''

''ச்சீ போ...'' அவள் நகர அவன் குமிழ் அழுத்த கேமிரா வெளிச்சம் உமிழ அந்தப் படம் ஏடாகூடமாய் கேமிராவுக்குள் பதிவாயிற்று.

''எரும்மாடு பொறுமையே கிடையாது உனக்கு. ஒரு படம் வேஸ்ட்'' அவன் கத்தினான்.

அவள் அலட்சியமாய் அவனை தோக்கி நடந்து வந்தாள்.

''எரும்மாடா நானா? ஒரு டப்பா கேமிரா வச்சுக்கிட்டு இப்படி நில்லு அப்படி நில்லுன்னு அலட்டறே?''

''இது டப்பா கேமிரா எழுநூத்தி ஐம்பது ரூவா ஆட்டோமேடிக்''

''மயிரு''

''ஏய் கெட்ட வார்த்தை பேசினா எனக்கு பொல்லாத கோவம் வரும்''

''மயிரு''

''அதான் அப்பமே பெரியவங்க பாட்டு எழுதி வச்சுட்டாங்களே''

''என்னா பாட்டு?''

''நீரளவே ஆகுமாம் நீராம்பல்''

''அப்படின்னா''

''குலத்தளவே ஆகுமாம் குணம்''

''ஜாதி பேசாதேன்னு சொல்லிருக்கேனில்லை உனக்கு'' அவனை அடிக்க அருகே ஓட அவன் கேமிராவை இறுக்கிக்கொண்டு அவளிடம் இருந்து தப்பித்தான்.

அவள் நின்றாள்.

''ஓடறியா...ஓடு பார்க்கலாம்'' கால் செருப்பு வளையம் கழட்டி உதறினாள். மிடியும் பேகி ஷர்ட்டும் பறக்க, அவனை நோக்கி பிசாசு மாதிரி ஓடினாள். மிதிக்க முடியாத கொழுத்த நண்டு போல் அவன் வளைந்து வளைந்து ஓடினான். இடைவெளி அதிகரித்தான்.



அவள் சற்று நிதானித்து அவன் வளைந்து ஓடுவதைக் கவனித்தாள். மறுபடி வேகம் எடுத்தாள். அவன் இன்ன திசை நோக்கி திரும்புவான் என்பதை கணக்கிட்டு தாவினாள். முழுபலத்துடன் அவன் மீது விழுந்து அவன் காலரை கொத்தாய் பற்றினாள்.

அவளை இப்பவும் அவனால் உதற முடியும். ஆனால் மல்லாந்து மூச்சிரைக்க மவுனமாய் இருந்தான், அவள் எச்சில் விழுங்கினாள். நெற்றி வியர்த்து பொங்கியது.

''எவ்வளவோ இந்த கேமிரா விலை'' வெடுக்கென்று பிடுங்கினாள்.

''எழுநூத்தி ஐம்பது ரூபாய்'' பிடுங்கப்பட்ட கேமிராவுக்கு கை நீட்டினான்.

அவள் பட்டையாய், கருப்பாய் ப்ளாஷ் இணைந்த கேமிராவை ஒரு முறை புரட்டிப் பார்த்துவிட்டு தூர வீசினாள். கேமிரா பறந்து மணலில் சொத்தென்று விழுந்தது.

அவன் அவளை உதறினான்.

அவள் மல்லாக்க விழ எழுந்து கேமிரா நோக்கி ஓடினான். கேமிரா மணலில் அனாதையாய் கிடந்தது. எடுத்து மணல் ஊதினான். விழுந்து கிடந்த அவளைத் தொலைவிலிருந்து கேமிரா வழியாகப் பார்த்தான். வேலை செய்கிறதா? என்று கவலையுடன் பட்டனை மெல்ல அழுத்தினான். கண் வைத்த இடத்தில் கேமிரா சிறிய சிகப்பு வெளிச்சம் காட்டி தயார் என்றது. ஒரு கால் உயர்த்தி ஒரு கால் நீட்டி சற்று தலை தூக்கி பேகி ஷர்ட் கலைந்து இரண்டு விரல் இடுப்புத் தெரிய கிடந்தவளை பட்டன் முழுவதும் அழுத்தி கிளிக் செய்தான். வெளிச்சம் உமிழ்ந்து கேமிரா சர்ரென்று அடுத்த பிலிம் கொண்டு வந்து சேர்த்தது.

நல்லவேளை கெட்டுப் போகவில்லை. இம்போர்டட் கேமிரா அதனால் இத்தனை தொலைவு விசிறியும் தாங்குகிறது. சனியன் எவ்வளவு திமிரு இவளுக்கு. உள்ளுக்குள் பொருமினான்.

அவள் எழுந்து செருப்புகளை நோக்கிப் போனாள்.

''ஏய் எங்க போற?''

''என்னைவிட, கேமிரா முக்கியமா. உன்னை லவ் பண்றதுக்கு அதோ அந்த ஆளை லவ் பண்ணலாம்.'' யாரோ தொலைவில் நடந்து போகிறவனை கை காட்டினாள்.

''யாரு அது?''

''சுண்டல் விக்கிறவன்.''

''பைத்தியமே?''

''பசிக்குது அவனை லவ் பண்ணா மொத்த சுண்டலையும் கொடுத்துருவானில்லே.''

''கெட்ட ஜாதி''

''ஜாதி பேசாதே ஜாதி பேசாதே'' கொத்து மணலை குனிந்து எடுத்து அவன் மீது வீசினாள். அவன் குனிந்து முகம் புறம் திரும்பிக் கொண்டான். மணல் முதுகு, கழுத்து எல்லாவற்றிலும் படர்ந்தது.

நிமிர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கடலை வெறித்துக் கொண்டிருந்தாள். கேசம் காற்றில் பறந்தது. முன்பக்க முடிவெட்டிக் கொண்டிருந்தது. அடங்காமல் ஆடியது. பின்பக்க போனிடெயில் பிரிபிரியாய் பறந்தது. மிடி சுழன்று இறுக்கிக் கொண்டது. பேகிஷர்ட் காற்றில் கோணாய் இருந்தது. முதுகு முழுவதும் சூர்யவெளிச்சம் வெள்ளை சட்டை



செப்பு மிடி கோதுமை உடைத்த நிறமாய் பின்னங்கால் தசை. இடுப்பில் கைவைத்து நின்றிருந்தாள். வலது கையால் முடி கோதி அவனை நோக்கித் திரும்பினாள்.

சிரித்தாள்.

'கிளிக்' என்று போட்டோ எடுத்தான். பட்டன் அழுத்திய நேரம் கடல் அலை எகிறி வெள்ளையாய் கேமிராவுக்குள் விழுந்தது.

''டக்கர் போட்டோ, வினோதினி.''

''யார் போஸ் கொடுக்கறது இந்த வினோதினியில்லையா. எவன் போட்டோ எடுத்தாலும் நல்லா வரும். ஆமா எதுக்கு போட்டோ எடுக்கறே?''

''சும்மா. காமிரா வாங்கினேன்.''

''பவர் ஷூ கூடத்தான் வாங்கினே.''

''அதான் ஓட்டம் ஓடி பார்த்துட்டேனே.''

''சென்ட் வாங்கினாப் போல ஞாபகம்''

''போட்டுக்கிட்டு இருக்கேனே.''

''இந்தக் காலத்துல போய் மரிக்கொழுந்து சென்ட் வாங்கறவன் நீ ஒரு ஆள்தான்.''

''மரிக்கொழுந்து இல்லை. சந்தனம்.''

''அதான் புளிச்ச வாசனை வருது.''

''ஏய் சந்தன வாசனை.''

''கிட்டவா மோந்து பார்க்கலாம்.''

அவன் அருகே வந்து தோள்பட்டை காட்ட பளிச் சென்று மல்லாக்கத் தள்ளினாள்.

இந்த முறை அவன் அந்த விளையாட்டை ரசிக்கவில்லை. தன்னை அளவுக்கு மீறி அவள் சோதிப்பதாய் நினைத்தான். கேமிரா மண்ணில் விழாதிருக்க செய்த எத்தனத்தில் முதுகு பலமாய் அடிபட்டது.

இவளைக் காதலித்தது பிசகோ என்று தோன்றியது. ஆனால் இப்போதே இந்த இடத்திலேயே அவளிடம் சொல்வதில் லாபமில்லை. இதற்குப்போய் அழுவதும், இதைஅவமானம் என்று நினைப்பதும் ஆணுக்கு அழகல்ல. இவளை வேறு விதமாய் வெறுப்பேற்ற வேண்டும் தந்திரமாய் அழவைக்க வேண்டும். தள்ளியது யார் என்று தெரியாமல் தள்ள வேண்டும்.

மீசை முளைத்த ஆண் பிள்ளையை ஒரு பெண் மல்லாக்கத் தள்ளும் திமிர் இருப்பின் அது அடக்கப்பட வேண்டும்.

ஆணுக்கு எவ்வளவுதிமிர் இருக்கும் என்பதைக்காட்ட வேண்டும். அவன் கால்சட்டை மணல்களை தட்டிவிட்டபடியே யோசிக்கத் துவங்கினான். என்ன செய்தால் அவளைப் பதிலுக்கு அழ வைக்கலாம் என்று கணக்குப் போட்டான்.

முகத்தில் கோபமில்லை. வருத்தமில்லை, சட்டென்று அவன் மவுனமானது அவளுக்கு லேசாய் ஒரு பயத்தைக் கொடுத்தது கொஞ்சம் லூசுத்தனமான ஆள். அத்து மீறலாம் என்று விளையாடினாள். வலித்து விட்டது போலிருக்கிறது. ஒன்னரை நிமிஷத்தில் சமாதானம் செய்து விடலாம். பெரிய விஷயமில்லை. எதுக்கு சமாதானம் செய்யணும்? எத்தனை ஆண்கள் எத்தனை பெண்களை அழ வைத்திருக்கிறார்கள். அவமானப் படுத்தியிருக்கிறார்கள். இவன் என்ன பெரிய கொம்பனா? வெறும் பி. ஏ. அப்பா காசில், டிகிரி படிக்கிறேன் என்று அளந்தான்.



அண்ணன் தம்பி நாலு பேர் ஒட்டு மொத்தமாய் சேர்ந்து துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு கொள்முதல் செய்து விற்கிறார்கள்.

"சேலத்துல பெரிய விழா நடத்துவம் வருஷா வருஷம் போட்டோகிராபர் நல்ல ஆளா பட்டணத்துலேர்ந்து அனுப்பணும்னாங்க, அதான் வந்தேன். ரவி இல்லிங்களா?" நாலு முறை அண்ணனைத்தேடி வந்ததில் பரிச்சயமாயிற்று.

"சேலத்துல இல்லாத போட்டோகிராபரா? யாரும்மா அது, நான் வரலைன்னு சொல்லி அனுப்பு"

அண்ணன் மறுத்து விட்டது.

"போகவரட்ரெய்ன் சார்ஜ், அங்க லாட்ஜுல தங்கற சாப்பிட வசதி அது தவிர எடுத்த எல்லா போட்டோக்கும் அண்ணன் என்ன சொல்றாரோ அதான் ரேட்டு, இதோ பாருங்க இதுபோன தடவை மாரியம்மன் கோவில் விழாவுல எடுத்த போட்டோ."

ஆல்பம் காட்டினான்.

விழா என்றால் மாலை ஆரம்பித்து நள்ளிரவு வரை நடக்குமாம். "பட்டிமன்றம், கவியரங்கம் லோக்கல் டிராமா பிறகு வெளியூர் டிராமா. லூஸ் மோகன், பக்கோடா காதர் அவங்க வொய்ப் எல்லாம் வந்தாங்க போன தடவ. இந்த தடவ டெல்லி கணேஷ் ட்ரை பண்றோம். அண்ணன் வந்து எல்லாத்தையும் போட்டோ எடுக்கணும்."

"யார் அவன். அந்தாளை நம்பி எப்படி சேலம் போறது? ஒரு கிளிக்குக்கு அஞ்சு ரூபா. அது தவிர

டெவலப்பிங், பிரின்டிங் சார்ஜ், பர்ஸ்ட் கிளாஸ் ட்ரெயின் காசு, போக வர கைல தரணும் சொல்லிரு.''

அண்ணன் இருக்கும்போது அவன் வருவதில்லை. அவன் வரும்போது அண்ணன் இருப்பதில்லை.

சகலமும் ஒத்துக்கொண்டு ஆயிரத்து ஐநூறு கொடுத்ததும் அண்ணன் ஆச்சர்யப்பட்டுப் போயிற்று.

''பெரிய பார்ட்டிதான் போல. என்னிக்குன்னு கேட்டு சொல்லு. இந்தா நீ இருநூறு வெச்சுக்க. ஒரு பிசினஸ் பிடிச்சு கொடுத்தியே''

மறுபடி அவன் வர தேதி கேட்டு இன்விடேஷன் வாங்கி விலாசம் வாங்கி அண்ணன் நிச்சயம் வரும் என்று உறுதி சொல்லி அனுப்பினாள்.

''நீங்களும் வேணா வாங்களேன்'' என்று அவன் அழைத்தபோது விழித்துக் கொண்டாள்.

வழிகிறானோ தன்னைக் கவர இந்த போட்டோ நாடகமோ.

அறியும் ஆவல் அதிகரித்தது.

அண்ணன் பேசச் சொல்லியிருக்கும் தைரியத்தில் அதிகம் பேசினாள்.

''அண்ணன் கொன்னு போட்டுறும் சேலத்துக்கு எப்படி வர்றது. இங்க இருக்கற புதுப் படத்துக்கு போறதுக்கே வுடாது''

''எந்தப் படங்க''

பெயர் சொன்னாள்.

மறுநாள் இரண்டு டிக்கெட் கொண்டு வந்து கொடுத்தான்.



''ஒன்னு உங்களுக்கு. ஒன்னு உங்க சிநேகிதி யாருக்காவது. நான் வருவேன்னு பயந்துராதீங்க அதெல்லாம் தப்பு'' உளறினான்.

அவள் டிக்கெட் வாங்கி, வீட்டில் ஏதோ பொய் சொல்லி படம் போனாள். அவன் வேறு ஏதாவது சீட்டில் இருக்கிறானா! என்று பார்த்தாள். இல்லை. கண்ணுக்குத் தெரிந்தவரை இல்லை நிம்மதி. சிநேகிதி காதோடு தான் டிக்கெட் வாங்கிய விஷயம் சொல்லி சிரித்தாள்.

''நாளைக்கு கிளம்பணுங்க. அண்ணனுக்கு நினைவு படுத்திட்டு போலாம்னு வந்தேன். படம் நல்லா இருந்துச்சா. உங்களுக்கு ரெட் கலர் தாவணி நல்லா இருக்குங்க''

''நீங்க வந்தீங்களா படத்துக்கு''

''இல்லிங்க''

''நீ வரபோது வாசல்ல ஓரமா நின்று பார்த்தேன். திரும்பிட்டேன்''

''நல்லவேளை. வந்து இளிச்சிருந்தே அப்ப தெரிஞ்சிருக்கும் சேதி. மனசுக்குள் கோபப்பட்டாள்.

அண்ணன் சேலம் போய் விட்டு வந்து ஆஹா ஓஹோ என்று சொன்னது வாணவேடிக்கைப் படமே பதினாறு இருந்தது. கரகாட்டம், ஒயிலாட்டம், பட்டிமன்றம் என்னன்னவோ படங்கள். முகங்கள் முகங்களாய் போட்டோக்கள். போட்டோ என்றதும் எல்லா ஜனங்களும் பல் தெரிய சிரித்து விரைப்பாய் நின்றிருந்தார்கள்.

அண்ணன் வந்தவுடன் ஒருமுறை போட்டோ வாங்க மறுமுறை, கூடுதல் போட்டோவுக்கு இன்னொரு முறை

மூவாயிரத்து சொச்சம் சலவை நோட்டாய் எண்ணி தந்தது.

''அடுத்த தடவ என்ன விழான்னாலும் நீங்கதான் போட்டோ. சேலத்துல பலபேர் உங்க அட்ரஸ் கேட்கறாங்க. வருவீங்களா?''

''பார்ப்பம்'' அண்ணன் அசிரத்தையாய் பேசினார்.

''நல்ல பார்ட்டி இல்லையாண்ணே அது?''

''தத்தி பார்ட்டிம்மா. அர்த்தமில்லாத போட்டோ எடுக்கறாங்க காசுதான். பேஜார் வேலை, அடுத்த தடவ வேற எவனையாவது காமிரா கொடுத்து அனுப்பிடலாம். நான் போவணும்னு அவசியமில்லை. மறுபடி வந்தா விடாத'' போக வர பர்ஸ்ட் கிளாஸ் செலவு முதல்லகேள், அண்ணன் பஸ்ஸில் போய் பஸ்சில் வந்திருக்கிறது செலவு மட்டும் முதல் வகுப்பு ரெயில், அது தத்தி பார்ட்டிதான்.

அவளுக்கு தத்திகளைப் பிடிக்கும். ஆண் தத்தியாய் இருந்தால் மிகவும் பிடிக்கும். அவள் வீட்டில் எந்த ஆணும் தத்தியில்லை. அப்பா, அம்மா, அண்ணன், ஏன் மதினி, அக்கா மாதிரி பெண்கள்கூட தத்தியில்லை.

''ஏய் என்ன புதுப்படத்து பாட்டு பாடறே அடிக்கடி'' அக்கா அதட்டினாள்.

''ரேடியோல கேட்டது ஏன்?''

''ரேடியோல கேட்டியா, படமே பார்த்துட்டியா?''

''இல்லையே ஏன்?''

''வெறும் பாட்டு பாடினா பரவாயில்லை. ஆனா ஹீரோயின் முன்னையும் பின்னையும் நடக்கற மாதிரியே பண்றியே அது எப்படி?''



''நீ பார்த்துட்டியா''

''நான் என் புருஷன் கூட போனேன்டி''

''நான் என் சிநேகிதி கூட போனேன்''

''வீட்ல சொல்லாதியா?''

''எதுக்கு சொல்லணும்''

''நான் சொல்றேன்'' அக்கா விழித்துப் பார்த்தாள்.

வேறு வழியில்லாது சரணடைய வேண்டியிருந்தது. சரண் அடைந்தது அவமானமாய் இருந்தது. அண்ணன் கொடுத்த இருநூறில் நூறு பங்கு போட வேண்டியிருந்தது.

நல்லவேளை, துவரம்பருப்பு டிக்கெட் கொடுத்து போனது அக்காவுக்குத் தெரியவில்லை. மறுபடி துவரம் பருப்பு பெரிய சைஸ் போட்டோ கேட்டு வந்தபோது ஒரு துண்டு காகிதத்தில் வேறு புதுப்படம் பெயர் எழுதி, தேதி காட்சி போட்டு டிக்கெட் ப்ளீஸ் என்று எழுதித் தந்தாள்.

துவரம்பருப்பு, நான் வரட்டுங்களா? என்று ரகசியமாய் கேட்க, சட்டென்று கடிதம் பிடுங்கிக் கொண்டாள். கிழித்துப் போட்டாள்.

துவரம்பருப்பு டிக்கெட் கொண்டு வந்து கொடுத்து விட்டு அமைதியாய் போயிற்று.

அன்று சிகப்பு ஆடையும், நீல ஜீன்சுமாய் போனாள். சிகப்பு துவரம் பருப்புக்கு பிடிக்குமே. அதே சிநேகிதி வேறு படம் ஆனால் இந்த முறை துவரம்பருப்பு முன் சீட்டில் பேசாமல் உட்கார்ந்திருந்தது. பார்த்தவுடன் சொரேர் என்கிற பயம் வந்தது. கடைசிவரை பருப்பு பேசாதது பிடிச்சிருந்தது.

''எவனோ தடிதடியா பசங்க உன்னைத் தேடிகிட்டு வரான். நீ இவளை பேச சொல்றே நல்லாவா இருக்கு'' அம்மா கத்தினாள்.

அண்ணன் அவனை போன் செய்துவிட்டு வரச் சொன்னான். மறுநாள் துவரம்பருப்பு போன் செய்தது. அவள்தான் பேசினாள்.

''ரவி இருக்காரா. நான் சத்திவேலு பேசறேன்''

''நான் அவரு தங்கச்சி என்ன வேணும் சொல் லுங்க''

''நீங்கதான் வேணும்'' சொல்லிவிட்டுப் போன் வைத்து விட்டான்.

அவள் சிரித்தாள். லேசாய் கிறங்கினாள். யாருக்கும் தெரியாது பேசினால் என்ன? இவனோடு சினிமா போனால் என்ன? யோசித்தாள்.

பேசினாள். போனாள்.

அவள் அண்ணன் ரவியிடம் எட்டு கேமிராக்கள் இருந்தன. ஆறு வகை ஸூம் லென்ஸ்கள் இருந்தன.

''வினோதினி, என்கூட படிச்சானே சுரேந்திரபாபு அவன் கேமிரா வேணும்னு வருவான். நான் வெளியே போணம், இந்தபாக்சை அவன்கிட்ட அப்படியே கொடுத் துரு ஜாக்கிரதை, ஸூம் லென்ஸ் தனியா இருக்கு உள்ளே. சுரேந்திரபாபு வந்தா கொடு. வேறு யார் வந்தாலும் தர வேணாம்''

அவள் உடுத்திக்கொண்டு கடற்கரைக்குப் போக தயாராக இருந்தாள். சுரேந்திரபாபு வந்தான். கேமி ராவை வாங்கிப் பிரித்துப் பார்த்தான். கொண்டு வந்த பிலிம் லோட் செய்தான்.



''சிஸ்டர் அப்படியே இருங்க. பேட்டரி சரியா இருக்கா பார்த்துக்கறேன்'' கூடத்தில் அவளை நிற்க வைத்து தலை திரும்பச் சொல்லி முதல் பிலிமை கிளிக் செய்தான். திருப்தி ஆக கேமிரா பையை எடுத்து இரண்டு நாள்ல தரேன் என்று வெளியேறினான்.

அவள் ஏதோ பொய் சொல்லிவிட்டு கடற்கரைக்கு வந்தாள். இது நாலாவது முறை துவரம் பருப்போடு வெளியே போவது. இந்த முறை சீண்டத் திட்டமிட்டு சீண்டினாள்.

கடைசி வரை தள்ளியதற்கு மன்னிப்பு கேட்காமல் வீட்டுக்கு வந்தாள்.

''எங்கடி போய்ட்டு வரே?'' அம்மா கேட்டாள்.

' பாஸ்கட் பால் விளையாடிட்டு வரேன்''

''பீச்சு மணலா இருக்கு''

''பாஸ்கட் பால் கோர்ட்ல மணல் இருக்கும்''

''குளிச்சிட்டு வாடி'' அவள் மிடியை கழற்றி, துணிக் கூடையில் வீசிவிட்டு குளிக்கப் போனாள்.

துவரம்பருப்பு கம்ப்யூட்டரில் பிலிம் கொடுத்து பிரிண்ட் போட்டது. அதில் இரண்டு படங்களை அவள் பீச்சில் கால் ஆட்டி கடலுக்கு பின்னே நிற்பதை கவரில் சொருகி அவள் வீட்டு விலாசம் எழுதி போஸ்ட் செய்தது.

''என்னையா மண்ணுலயா தள்றே? சாவுடி நாயே'' என்று மனசுக்குள் திட்டி சந்தோஷப்பட்டது.

## 2

காரின் பின்சீட்டில் அமர்ந்தபடி சுரேந்திரபாபு வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தான். இரண்டு பக்கமும் பாழ்நிலம் பின்னோக்கி ஓடிக்கொண்டு இருந்தது, ஒரு மழைக்காக பூமி ஏங்கித் தவிப்பது பார்த்தவுடனே தெரிந்தது. வேலிக்கருவையின் பச்சை தவிர மற்ற எல்லா இடங்களிலும் பூமி கருப்பேறிக் கிடந்தது. அடுத்த மாசம் மழை வரலாம், வரவேண்டும். போன முறை பெய்த சுமாரான மழை மாதிரி இல்லாது பலத்த மழை வேண்டும். நகரத்து ஜனங்கள் போன வருடம் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அம்மாகூட 'இடுப்பே வுட்டுப்போவுது தண்ணிக்கு அலைஞ்சு' என்று நொந்து கொண்டாள். சுரேந்திரபாபுகூட நாலு மணிக்கு எழுந்து தண்ணீர் பிடிக்கப் போயிருக்கிறான்.

மெர்க்குரி ஒளியும், வீடிகாலை இருளுமான நேரத்தில் சாக்கடை நாற்றத்துக்கு அருகில் உரத்த குரலில் பேசும் பெண்களுக்கு அருகே நின்றபடி இரண்டு பெரிய தவலை தண்ணீர் பிடித்து இருக்கிறான்—

விடிகாலை நேரத்தில் தண்ணீர் பிடிக்க வரும் பெண்கள் ஒரு தனி சப்ஜெக்ட், 'தண்ணீர் பெண்கள்' என்று டைட்டில் கூட தரலாம். கருப்பு, வெள்ளையில் நூறு போட்டோ எடுக்கலாம். டபுள் கிளிக், மினோல்டா உபயோகப்படுத்தலாம். ஒரு கிளிக்கில் இரண்டு போட்டோ கிடைக்கும் இரண்டு நெகடிவ் வரும். அப்படி மினோல்டா இல்லையெனில் நிக்கான் போதும். ஆனால் ஸூம்லென்ஸ் இருக்க வேண்டும். தண்ணீர் குழாய்விட்டு தொலை தூரம் போய் அமர்ந்து லென்ஸ் திருகி மிக அருகில் பெண்களைப் பார்த்து சில போஸ்களை போட்டோ எடுக்க வேண்டும்.



முன்பெல்லாம் வேலைக்காரி போன்றவர்கள்தான் காலைத் தண்ணீருக்கு வருவார்கள். இப்போது அப்படியில்லை. டீச்சரம்மா, நர்ஸ் அரசு பதவியில் உள்ள பெண்கள், பெரிய கம்பெனி டைப்பிஸ்டுகள் எல்லோரும் காலையில் தண்ணீர் பிடிக்க வருகிறார்கள். பள்ளிக்கூடம் போகிற சிறுசுகளும் நைட்டியோடு வந்துவிடுகிறார்கள். இடப்பக்கம் முழுவதும் ஈரமாகிவிட்டாலும் கவலைப்படாது தண்ணீரை தூக்கிப் போகிறார்கள்.

'தண்ணீர் பெண்கள்...' செமை சப்ஜெக்ட் அது. இருளும், ஒளியும் கலந்த சப்ஜெக்ட்.

இன்று காலை கூட ஒரு பெண் ரவிக்கையின் கீழ்ப் பகுதி பட்டன் இரண்டு போடாமல் தண்ணீர் தூக்க சட்டென்று கனத்த மாநிற மார்புகள் தெரிந்தன. புடவையை சொருகியிருந்த விதத்தில் அலட்சியம் தெரிந்தது. இரண்டு ஆட்கள் தூக்கக்கூடிய தவலையை அவள் ஒருத்தியே தூக்கி கோணலாய் நடந்து மார்பைக் கூட சரியாய் மூடாமல் போனாள்.

குனிந்து நீர் பிடிக்க பல பேரின் பக்கவாட்டுத் தோற்றம் கிடைக்கிறது. முதுகின் வளைவு, தண்டுக் குழிவு. இடுப்பு தசையில் திரட்சி தெரிகிறது. காலை நாலு மணிக்கு இரண்டு குழந்தைகளை அங்கேயே ஒரு தாயார் குளிப்பாட்டினாள். கொச கொசவென்று சோப்பு போட்டு ஜிலீரென்று தலையில் நீர் விட்டு அலசினாள். பல்கிட்டி தந்தியடிக்க இரண்டு குழந்தைகளையும் துண்டால் போர்த்தி ஓடிப் போகச் சொல்லிவிட்டு, துணி துவைக்க உட்கார்ந்தாள்.

குழாய் மேடையில் ஹார்ட்டை வரைந்து அம்புபோட்டு இருக்கிறது. பள்ளிக்கூட பெண்களைக் கவர ஏதேனும் பலசரக்குக் கடைப்பையன் வரைந்து இருக்க வேண்டும். எவள் இருதயமாவது துளைத்திருக்க வேண்டும்.

சில சமயம் காது துளைக்கும் சண்டையும் நடக்கிறது. தலைமயிரைப் பிடித்து அடித்துக் கொள்வதும் ஏற்படுகிறது. அதைக் கூட போட்டோ எடுக்கலாம். பின்புற விடியலை வைத்து முன்புறம் தலைமுடியைப் பிடித்துக்கொண்டு இருக்கிற பெண்கள். கீழே உருண்ட தவலைகள் என்று போட்டோ எடுக்கலாம்.

போட்டோவில் கலர் அபத்தம். ப்ளாக் அண்ட் ஒயிட்டே உத்தமம்.

ஆனால் நிறைய பேர் கலர் படத்துக்குத்தான் ஆசைப்படுகிறார்கள். போன வாரம் ஒரு கிரகப் பிரவேச போட்டோவுக்குப் போயிருந்தபோதுகூட கலர் கலராய் உடுத்தி நீல சுவர் பின்னணியில் பல முகங்கள் விறைப்பாய் நின்றதைத்தான் எடுக்க முடிந்தது. ஒரே ஒரு போட்டோ, பின்பக்கம் வெளிச்சமிருக்க, முன்பக்கம் சில் அவுட்டில் வீட்டைப் படமெடுத்து தந்தபோது வீட்டு சொந்தக்காரன் கத்தினான். மொத மொத வூடு கட்டியிருக்கிறேன் வூடு இருண்ட மாதிரி படம் புடிச்சிருக்கிறியே. சனியனாட்டம். இந்தப்படத்துக்கு துட்டு கிடையாது போ-என்று தள்ளி விட்டான். பாராட்டாது போனாலும் பரவாயில்லை. சில் அவுட் படத்தை சனியனாட்டம் என்றது கோபம் தந்தது.

"அது என் டேஸ்ட்டுக்கு எடுத்த படங்க. நீங்க துட்டு தர வேணாம்" என்று அந்த போட்டோவைக் கொண்டு வந்து தன் துணி ஷெல்பில் வைத்துக் கொண்டான். அம்மா, "என்னடா அது?" என்று கேட்டாள்.

"வூடும்மா. நான் சம்பாதிச்சு இந்த மாதிரி ஒரு வீடு கட்டணும். சுத்தி தோட்டத்தோட சிறுசா, அழகா ஒரு சொந்த வீடு கட்டணும்"

"சொந்த வூடா. முதல்ல சோத்துக்கு குறைவில்லாத இருக்கிற வழியப்பாரு. ஒரு வாரம் நாலரை ரூபா அரிசி.



ஒரு வாரம் மூணற ரூபா அரிசி.... என்னிக்கு மூட்டை அரிசியா வாங்கிப் போடறப் போற..."

வறுமைதான் பிரச்சினை. மிகப் பெரிய பிரச்சினை. எல்லா கலைஞனையும் உருக்கி உருத் தெரியாது அடிக்கிற பிரச்சினை.

அம்மா அப்படி அரிசி பற்றி பேசுகிறபோது வயிறு கலவரத்தில் கலங்கும். யாராவது போட்டோ எடுக்கக் கூப்பிட மாட்டார்களா? என்று ஏங்கும். நண்பர்கள் யாருக்காவது கல்யாணம் ஆகாதா, யார் வீட்டிலாவது விசேஷம் வராதா என்று தவிப்பு வரும். நெருங்கின நண்பனாய் இருந்தாலும் கறாராய் காசு கேட்டு வாங்கி ஒரு போட்டோவுக்கு இரண்டரை ரூபாய் லாபம் வைத்து ஐயோ இவ்வளவா என்பவனுக்கு ஏதாவது சமாதானம் சொல்ல, "சுரேந்திரபாபு நல்லா படம எடுக்கறான். ஆனா கன்னாபின்னான்னுசார்ஜ் பண்றாம்பா" நெருங்கிய நண்பர்கள் விலகிப் போனார்கள். நட்புக்கும் காசு முக்கியமாய் இருந்தது.

ஆனால் இதோ இந்த நண்பர்கள் நிறைய காசு கொடுக்கிறார்கள். இதற்கு முன்பும் நிறைய கொடுத்து இருக்கிறார்கள். போட்டோகிராபர் என்று சொல்கிறாய், ஏன் இவ்வளவு மெலிந்து இருக்கிறாய் என்று கேள்வி கேட்பார்கள். சாப்பாடு சரியாக இல்லை என்றுதான் பதில் சொல்ல முடிந்தது. "வா சாப்பிடலாம்" என்று முதலில் கூப்பிட்டார்கள், விதவிதமான அசைவ உணவு ஆர்டர் செய்தார்கள். அவர்கள் சாப்பிடுவது போல் அவனால் சாப்பிட முடியவில்லை. ஒரு பிளேட் பிரியாணியும், ஆறு பரோட்டாவும், இரண்டு வேக வைத்த முட்டையும் சாப்பிடுகிற ஆளை வாழ்க்கையில் முதல் முதலாக இப்பொழுதுதான் பார்க்கிறான். அப்படி சாப்பிட்ட அறிவரசன் இதோ முன் சீட்டில் உட்கார்ந்து இருக்கிறான். கிட்டத்தட்ட அவன் அளவு

சாப்பிட்ட ரமா, சுரேந்திரபாபு அருகில் உட்கார்ந்து இருக்கிற அனுராதா இன்று காலைதான் பழக்கமானாள். கோவிலூர் கூட்டத்திற்குப் போக வேண்டும் என்று சொல்லி கூட்டிக் கொண்டு வந்து இருக்கிறார்கள். தலைவரைச் சந்தித்து மாலை போட வேண்டுமாம். ஈழ அகதிகள் சார்பாய் மனு தர வேண்டுமாம்.

போட்டோ எடுக்கச் சொல்வதிலேயே மிக உயர்ந்த பார்ட்டி அரசியல் பார்ட்டிதான். அடுத்த பெட்டர் பார்ட்டி விழா பார்ட்டி. அதற்குப் பிறகுதான் கல்யாணம், காதுகுத்தல் முதலிய சமாச்சாரங்கள். ஒரு காது குத்தல் பார்ட்டிக்குப் போய் நாற்பத்தி இரண்டு படங்கள் எடுத்து காசு வாங்குவதற்குள் நாக்கு அறுந்து விட்டது. எந்தக் கல்யாண பார்ட்டியும் அழாமல் காசு தராது. அரசியல் பார்ட்டி சில போட்டோவுக்கு மகிழ்ந்து போய் நூறு ரூபாய் கூடக்கொடுத்து இருக்கிறது. இவர்கள் அகதிகளாக இருந்தாலும் அரசியல் பார்ட்டிகள்போலத்தான். வேறு தேசத்தில் இருந்து தமிழ்நாட்டுக்குத் தஞ்சம் புகுந்தாலும் இவர்கள் வேகமாக நாடுவது அரசியல்வாதிகளின் ஆதரவைத்தான். இந்தப் பெண் நிலப்பட்டாவோ, மருத்துவக் கல்லூரிக்கு தனித்த விண்ணப்பமோ தருவாள் போலிருக்கிறது. ''கிட்டுமா அண்ணன் கிட்டுமா அண்ணன்'' என்று முன் சீட்டில் இருந்தவனை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தாள். முன்சீட்டில் இருந்தவன் ''ஓம்...ஓம்...'' என்று பதில் சொல்லிக் கொண்டிருந்தான். முன்சீட்டில் இருந்த அறிவரசனுக்கும், சுரேந்திரபாபுவுக்கு அருகிலிருக்கிற ரமாவுக்கும் நெருங்கினநட்பு இருக்கிறது போலும். அது நட்பா, காதலா புரியவில்லை இரண்டுமாகவும் இருக்கலாம்.

''ரமா அந்த வீடு பார்த்தாயா?'' அறிவரசன் மரங்கள் சூழ்ந்த ஒரு வீட்டை சுட்டிக் காட்டினான்.



''என்ற வீடு மாதிரி'' ரமா பதில் சொன்னாள். அவன் திரும்பி சிரித்து விட்டு எதிர்பக்கம் பார்த்தான். அந்தச் சிரிப்பில் காதல் இருந்தது. சிறிது தூரம் போன பிறகு அறிவரசன் திடீரென்று திரும்பி, ''அது என்ன கேமிரா'' என்று கேட்டான்.

''நிக்கான்''என்றி சுரேந்திரபாபு பதில் சொன்னான்.

''உங்கள் கேமிராவா?''

''இல்லீங்க நம்ம ஸ்நேகிதரோடது''

''ஸ்நேகிதர் யாரு?''

''ரவின்னு பேருங்க. அடையார்ல இருக்காரு''

''ஸ்நேகிதருக்கு நாம போற இடம் தெரியுமா?''

''தெரியாதுங்க. ஒரு வேலை வந்திருக்குன்னு கேட்டேன். குடுத்துட்டான்.''

''சுரேந்திரபாபுவுக்கு நல்லதொரு கேமிரா பிரசண்ட் பண்ணணும்'' ரமா இடையில் புகுந்து பேசினாள்.

''தம்பி கோவிலூருக்கு முன்னாடி போயிருக்கா?'' ரமா, சுரேந்திரபாபுவிடம் திரும்பிக் கேட்டாள்.

''எப்பவோ சின்ன வயசில போனதுங்க'' பாபு பதில் சொன்னான்.

கோவிலூர் விளிம்பில் போலீஸ் கெடுபிடி அதிகமிருந்தது. கூட்டம் நடத்துகிற இடத்திற்கு முன்னே வண்டியை நிறுத்தினார்கள். அறிவரசன் காரோட்டியிடம் ஏதோ சொல்ல, கார் கூட்டம் கடந்து போய் நின்றது. சகலரும் கீழே இறங்கி உடைகளைச் சரி செய்து கொண்டார்கள். அனுவும், ரமாவும் சரளைக்கல் பாதையில் இறங்கிப் (போனார்கள். சற்று மேடான இடத்தில் நின்று அறிவரசன் மொத்த கூட்டம் சுத்திப் பார்த்தான்.

''மேடையை போட்டோ எடுக்கணுமாங்க'' சுரேந்திரபாபு அவனை நெருங்கிக் கேட்டான்.

'எடேன்.' அறிவரசன் எங்கோ கவனமாய்ச் சொன்னான்.

கூட்டத்திற்கு எதிரே நின்ற ஒரு அழகாள பெண் ரமாவை எதிர் கொண்டு அழைத்து உள்ளே கூட்டிக் கொண்டு போனாள். அனு மாலையோடு மேடை பக்கம் போனாள். தலைவர் வர இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் என்று சொன்னார்கள். சுரேந்திரபாபு மேடைக்கு அருகே போனான். பத்திரிகை போட்டோகிராபர் என்கிற அடையாள அட்டையைக் காட்டிவிட்டு மேடையில் ஏறினான். முதல் இரண்டு பிலிமைத் தள்ளிவிடத் தீர் மானித்தான். ஸூம் லென்ஸ் பொருத்தி ஸூம் வழியே ரமாவையும், அந்த புதுப் பொண்ணையும் ஒரு முறை 'கிளிக்' செய்தான். இன்னும் தள்ளி நின்ற அறிவரசனை ஸூம் திருகி நெருக்கமாய் பார்த்தான். மறுபடி 'கிளிக்' செய்தான்.

ஸூம் வெண்ணெய் மாதிரி இயங்கியது. மறுபடி ஸூம் இயக்கி ரமாவையும், அந்த அழகிய பெண்ணையும் இன்னொரு போட்டோ எடுத்தான். தனக்கு கேமிரா வாங்கித் தர வேண்டும் என்று சொன்ன ரமாவுக்கு இந்த போட்டாக்களை காபினட் சைசில் பிரிண்ட் போட்டு பரிசு மாதிரி அளிக்க வேண்டும். இவர்கள் காசிலேயே பில் போட்டுக் கொடுத்து விட்டு இதை அன்பளிப்பு என்று தர வேண்டும். இந்த அன்பளிப்பைக் கொடுத்து அவர்கள் அன்பளிப்பாய் ஒரு நல்ல கேமிரா வாங்க வேண்டும், ஒரு நல்ல கேமிரா இருந்து விட்டால் போதும் மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியும். இரண்டாயிரம் ரூபாயில் நானூறு ரூபாய் செலவு செய்து சுமாரான அரிசி ஒரு மூட்டை வாங்கி விடலாம். அரிசி மூட்டை வாங்கிப் போட்டு விட்டு அவ்வப்போது காசு



கொடுத்தால் அம்மா திட்டாது. குடித்து விட்டு வந்தால் கூட ஏன் என்று கேட்காது. எங்கேயாவது ஒரு சின்ன ஸ்டுடியோ போட்டு விட்டால் மாதம் நாலாயிரம் வரும். நாலாயிரம் வந்தால் திருமணம் செய்து கொள்ளலாம். அப்படித் திருமணம் செய்து கொண்டால் ரமா மாதிரி அதிகம் பேசாத பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஒரு போட்டோ கிராபருக்கு நல்ல கேமிரா வேண்டும். சிறிய ஸ்டுடியோ வேண்டும், அன்பான மனைவி வேண்டும். பெருமாளே இவையெல்லாம் எனக்குக் கிடைக்க வேண்டும். இது கிடைத்தால் போதும் ஓடி, ஓடி நிறைய வேலை செய்யலாம். யார் எப்போது கூப்பிட்டாலும் போகலாம். பார்ட்டி கொடுக்கிற பணத்தில் பிலிமை கவனமாய் மிச்சம் பண்ணி அழகான சீனெரிகள் எடுக்கலாம். நல்ல சீனெரி படத்தை சுாலண்டர் கம்பெனிக்கு விற்கலாம், போட்டோவுக்குக் கீழே எஸ். பாபு என்று போட்டுக் கொள்ளலாம். எந்த பெரிய நிகழ்ச்சியானாலும் பாபுவைக் கூப்பிடுப்பா என்று பெயர் வாங்கலாம். கருப்பு வெள்ளையில் நூற்றுக்கணக்கான போட்டோக்கள் எடுத்து, 'இந்தியா என் இந்தியா' என்று ஆல்பம் தயாரிக்கலாம். எல்லாவற்றுக்கும் அடிப்படை ஒரு கேமிரா, நல்ல ஜாதி கேமிரா, நல்ல கேமிரா வாங்க பத்தாயிரம் ரூபாய்க் காசு வேண்டும்.

காசு, காசுதான் முக்கியம் காசுதான் கடவுள்.

பெருமாளே, எனக்கு எப்படியாவது காசு வர்ணம், அதுக்கு நீ உதவி செய்யணும். கோவிலூர் கோபுரத்தை நோக்கி சுரேந்திரபாபு மனசால் வணங்கினான்.

இந்தப் பெருமாள் உதவுவாரா? சந்தேகப்பட்டான்.

சந்தேகத்தோடு மறுபடி வணங்கினான், தொலைவில் சைரன் ஒலி கேட்டது,

ஜனங்கள் ஓவென்று எழுந்தார்கள்.

எழுந்து நின்ற ஜனங்களைப் போலீசார் அதட்டினார்கள்.

ஆவேசமுற்ற ஜனங்களை இன்னும் ஆவேசப்படுத்துவது போன்று 'தலைவர் வாழ்க' என்று மைக்கில் கத்தினார்கள்.

போலீஸ்காரர்கள் அதட்டலைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

தலைவருடைய கார் முக்கூட்டு ரோட்டில் தயங்கி நின்றது.

ஏதோ சிலையில் மாலை அணிவித்தது ஸூம் லென்சில் லேசாய்த் தெரிந்தது.

சிறிது நேரம் கழித்து கார் அங்கிருந்து கிளம்பியது.

சரளைக்கல் வாசலுக்கு வந்தது.

தலைவர் வெள்ளை உடையில் இறங்குவது தெரிந்தது.

ஸூம் திருகி தலைவர் வருவதைப் பார்த்தான்.

சிரிப்பு...செழிப்பு...

தலைவர் நினைத்தால் இந்த மாதிரி நூறு கேமிரா வாங்க முடியும். நல்ல போட்டோ எடுத்து அவருக்குக் கொடுத்தால் அவர் கருணையையும் பெற முடியும். அந்தக் கருணையால் காசு கிடைத்தாலும் கிடைக்கலாம். மேடை விட்டு இறங்கி கீழே ஓடினான். காத்து இருந்த அனுவைத் தனியே போட்டோ எடுத்தான். அனு பதட்டமாத இருந்தாள். வலப்பக்கம் திரும்பி தலைவர் வருகையைத் தனியே போட்டோ எடுத்தான்.

தலைவர் தயங்கி லேடீஸ் பர்ஸ்ட் என்று சொன்னார்.



ஏழெட்டு போட்டோகிராபர்கள் அவனை இடித்துத் தள்ளி வெளிச்சம் கக்கினார்கள்.

சுரேந்திரபாபு அனுவிற்கு அருகே போய் நின்று அனுவை போகஸ் செய்தான்.

ஒரு சிறிய பெண்ணிடம் பேசிவிட்டுத் தலைவர் அனுவிற்கு அருகே வந்தார்.

கிளிக்....

அனு மாலையை உயர்த்தினாள்.

கிளிக்...

அனு மாலையைப் போட்டாள்.

கிளிக்—

யாரோ மறைத்தார்கள்.

கிளிக்...

சுரேந்திரபாபு இடப்பக்கம் நகர்ந்து தலைவர் முகத்தை வாங்கிக் கொண்டான்.

கிளிக்...

அனுவின் பக்கவாட்டிற்கு நகர்ந்தான்.

கிளிக்...

தலைவரின் பாதம் தொட்டாள்.

கிளிக்...

படீரென்று ஏதோ வெடித்தது.

கிளிக்...

ஆயிரக்கணக்கான ஊசிகள் சுரேந்திரபாபுவை ஒரு சேரத் தாக்கின.

உடம்பு அதிர்ந்தது.

நெருப்பு மாதிரி மிகப் பெரிய எரிச்சல் ஏறபட்டது.

குனிந்து பார்த்தான்.

எரிச்சல் ஏற்பட்ட இடங்களில் எல்லாம் ரத்தம் வழிந்தது.

வெடிமருந்து நாற்றம் மூக்கைத் துளைத்தது,

கண்கள் இருண்டன.

''பெருமாளே எனக்கு கேமிரா வேணும், காசு வேணும். என்னை எதுவும் பண்ணிடாதே...''

மெல்லப் பிரிந்த கண்களில் இடுக்கு வழியே வெள்ளையும், கருப்புமாய் புகை கலந்தது. காதில் சகிக்க முடியாத ஒரு ரீங்காரம் தோன்றியது.

சுரேந்திரபாபு லேசானான், மிதந்தான்.

விருட்டென்று வெகு உயரே போனான்.

அவனோடு நிறைய பேர் மிதந்தார்கள். உயரே போனார்கள்.

பூமியைப் பற்றிய நினைவுச் சங்கிலி அறுந்தது.

சுரேந்திரபாபு செத்துப் போனான்.

அவன் உடம்பு ஒரு கால் மடக்கி, ஒரு கால் நீட்டி பூமியில் கிடந்தது. அவன் ரவியிடம் கடன் வாங்கிய கேமிரா அவன் கழுத்தோடு பிணைக்கப்பட்டு சற்று தூரத்தில் இருந்தது.



நடந்த விஷயத்தை சட்டென்று கிரகித்துக் கொண்ட ஒரு போலீஸ் அதிகாரி கேமிராவை எடுத்தார், பத்திரப் படுத்தினார்.

## 3

ரவி மெட்டல் ஸ்டாண்டை உயர்த்தி, பிரித்து ஹால் நடுவே அசையாது அழுத்தினான். அந்த மெட்டல் ஸ்டாண்டை அழுத்தினால் முழங்கால் உயரம்தான் இருக்கும். பிடித்து இழுத்து உயர்த்தினால் மார்பு உயரம் வரும். அதன் மீது யாஷிகாவை வைத்து ஸ்க்ரூவைத் திருகி முடுக்கினான். யாஷிகாவின் மேல் பக்கத்தைப் பிரித்து அதன் வழியே, தான் எடுக்க வேண்டிய இடத்தை உற்றுப் பார்த்தான். எதிரே பச்சைப் பளிங்கு குளியல் தொட்டியில் தண்ணீர் நிரம்பிக் கொண்டு இருந்தது. இரண்டு பேபி விளக்குகளை பௌன்ஸ் செய்து குளியல் தொட்டி மீது ஒளியைச் சீராக்கினான்.

''இந்தப் பொண்ணு வந்தா அதுமேல எவ்வளவு லைட் தேவைன்னு பார்க்கலாம். அந்தப் பெண்ணின் உடல் நிறத்தை வைத்து, விளக்கு அளவை நிர்ணயிக்கலாம். பெண் கருப்பாக இருந்தால் விளக்கு அளவு கூடுதலாகவும், சிவப்பாக இருந்தால் விளக்கு அளவு குறைவாகவும் இருக்கும். வெறும் குளியல் தொட்டி என்றால் இந்த வெளிச்சம் போதும். வெறும் குளியல் தொட்டியை யார் பார்ப்பார்கள்? குளிக்கும் பெண்தான் விசேஷம். கண்ணுக்கு விருந்து. பல கோணங்களில் குளிக்கிற பெண்ணைப்படம் பிடித்துப் போடுவதுதான் இப்போதைய வேலை.

இந்த வேலை கொடுத்தது சினிமா பார்ட்டி. குரூப் டான்சில் ஆடிக்கொண்டு இருந்த பெண்ணை இந்தக்

கம்பெனி ஹீரோயினாக அறிமுகப்படுத்துகிறது. கம் பெனி புதுசு, கேமிராமேன் புதுசு, கதாசிரியர் புதுசு, டைரக்டர் புதுசு எல்லா புது ஆட்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பெண்ணின் உடம்பை முதலாகப் போட்டு முன்னேறத் துடிக்கிறார்கள்.

ஹோட்டலில் நடனமாடுகிறவள் காசுக்காக ஒருவனி டம் மனைவியாக நடிக்கிறாளாம். நடிக்க வந்த பெண் ணுக்கு நடனமாடாமல் இருக்க முடியாதாம். அவள் நடுக்கூடத்தில் நடனமாடிவிட ஏற்படுகிற சிக்கல்தான் கதையாம். அதற்காகவே நடனமாடுகிற பெண்ணைப் பிடித்து ஹீரோயினாகப் போட்டு இருக்கிறார்களாம். அடுத்த வாரம் முழுப் பக்க விளம்பரத்திற்காக ஒரு கவர்ச்சி போட்டோ வேண்டுமாம். இரண்டே கால் அடிக்கு ஒன்றேகால் அடியில் பத்து போட்டோ கேட்டு இருக்கிறார்கள். கம்பெனியில் மாட்டி வைக்க வேண்டு மாம். எவ்வளவு கவர்ச்சியாக எடுக்க முடியுமோ எடு என்று கட்டளையிட்டு இருக்கிறார்கள். எல்லாம் தயார். மேக்அப் போட்டுக் கொண்டு இருக்கும் அந்தப் பெண் குளியல் அறைக்கு இப்போது வரவேண்டும்.

உள்ளே நுழைந்ததும் ரவிக்கு வணக்கம் சொல்லியது. ஸ்டில் கேமிராவைத் தொட்டுக் கும்பிட்டது. இடுப்பு அசைந்து நடந்து குளியல் தொட்டியில் போய் நின்றது.

மார்பிலிருந்து தொடை வரை சுற்றி தைக்கப்பட்ட ஒற்றை டர்க்கி டவல், விரித்த செம்பட்டைத் தலை, செதுக்கி வரையப்பட்ட புருவம், கனிந்த கீழுதட்டில் அழுத்தித் தடவப்பட்ட க்ளாசி கழுத்தில் தடித்த தாலிக் கொடி, இரண்டு கைகளிலும் தங்கக் கலர் வளையல், பட்டை கொலுசு, சதங்கை மெட்டு, கால் முழுவதும் லேசாய் பூத்த பச்சை ரோமம், காதுகளில் வளையம்



தோல்நிறம் உற்றுப் பார்த்தால் சந்தனக் கட்டி தோற்கும்.

ரவி அந்தப் பெண் உடம்பில் விளக்குப் போட்டான். அவள் முகத்துக்கு அருகே மீட்டர் வைத்து அளவு பார்த்தான்,

''ரொம்ப அசிங்கமா எடுத்துடாதீங்க சார். ப்ளீஸ்'' அந்தப் பெண் கெஞ்சியது.

''சீச்சீ, அதெல்லாம் செய்ய மாட்டேம்மா.''

அறைக்குள் தயாரிப்பாளர், டைரக்டர், கதாசிரியர் நுழைந்தார்கள்.

ரவி தொழிலை ஆரம்பித்தான். குளிக்கும் முன் ஆறு போட்டோ எடுத்தான். தலைமுடி நனையாமல், நீர்த் தொட்டியில் உட்காரச் சொல்லி ஆறு போட்டோ எடுத் தான். நீரில் மூழ்கி வெளியே பொங்கி வருவது போல் சரம் சொட்டச் சொட்ட நாலு போட்டோ எடுத்தான். கேமிராவை அருகே எடுத்துப் போய் மார்பு டவலை தழைக்கச் சொல்லி இரண்டு போட்டோ எடுத்தான், இன்னும் இரண்டு பிலிம் இருந்தன. இரண்டு 'கிளிக்' செய்யலாம்.

''ஆத்தா இன்னும் செக்ஸியா காமி. இது போதாது, தயாரிப்பாளர் கட்டளையிட, அவள் என்ன செய்வ தென்று தெரியாமல் விழித்தாள்.

''தொட்டியில மூழ்கி டவலை எடுத்துடுங்க'' டைரக் டர் கட்டளையிட்டார். அந்தப் பெண் பரிதாபமாக ரவி யைப் பார்த்தது. ரவி எந்த உணர்ச்சியும் இல்லாமல் அவளைப் பார்த்தான்- அந்தப்பெண் தொட்டியில் மூழ்கி, டவலை எடுத்து வெளியே போட்டது. தொட்டி நீர்

அமைதியாகும்வரை காத்து இருந்தார்கள். அலை ஓய்ந்த நீர் வழியே அந்தப் பெண்ணின் மார்புகள் லேசாய்த் தெரிந்தன. ஒரு க்ளோஸ் அப் ஷாட்டும், ஒரு லாங் ஷாட்டும் ரவி எடுத்துக் கொண்டான். யாஷிகாவை மூடினான். விளக்குகள் அணைக்கப்பட்டன. தயாரிப்பாளர் டவலை எடுத்து அடுத்த அறைக்கு ஓடிப்போக அந்தப் பெண் தொட்டியில் இருந்தபடியே கத்தியது. தயாரிப்பாளரைத் தொடர்ந்து டைக்டரும்,கதாசிரியரும் சிரித்துக் கொண்டு பேசினார்கள்.

''வேற வழியில்ல எங்க ரூமுக்கு நீ இப்படியே வந்து தான் ஆகணும்'' என்று சத்தமிட்டார்கள். அந்தப் பெண் சோகமாய் தொட்டிக்குள்ளேயே உட்கார்ந்து இருந்தது. ரவி ஸ்டாண்டிலிருந்து கேமிராவைப் பிரித்தான். அந்தப் பெண்ணுக்கு முதுகு காட்டி ஸ்டாண்டை மடக்கினான். விளக்குகளை ஓரம் வைத்தான்.

''ஏங்க போட்டோகிராபர், எதுனா டவல்இருக்கா?'' அந்தப் பெண் கேட்டது. லைட் பௌன்ஸ் பண்ண வைத்து இருந்த வெள்ளை சாட்டின் துணியை எடுத்து அந்தப் பெண்மீது போட்டான். டர்க்கி டவலைவிட பௌன்ஸ் துணி பெரியது. அது கழுத்திலிருந்து முழங்கால் வரை மறைத்தது அந்தப் பெண் வெள்ளை சாட்டினை சுற்றிக் கொண்டு எழுந்தாள். அடுத்த அறைக்குப் போய் அசிங்கமாய் கத்தினாள்.

ரவி உபகரணங்களைப் பெட்டியில் அடுக்கி ஒரே வார்த்தையில் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தான் வேறு சாட்டின் கிளாத் நூற்று நாற்பது ரூபாய் ஆகும். ஒரு பெண்ணின் மானத்தைவிட நூற்று நாற்பது ரூபாய் முக்கியமில்லை.

வாய் கூசாது கெட்ட வார்த்தை சொன்ன அந்தப் பெண் பிள்ளை காசு பார்த்தவுடன் சாட்டின் துணியைத் தூக்கிப் போட்டு விட்டு அவர்கள் மடியில் உட்கார்ந்து



கொள்ளலாம். அது அவள் தலையெழுத்து. அந்தப் பாவத்தை ரவி ஒருபோதும் செய்யமாட்டான். எந்தப் பெண்ணையும் அசிங்கப்படுத்த மாட்டான். எவளையும் இணங்கு என்று சொல்ல மாட்டான். இணங்கு என்று சொல்பவர்கள், பெண்ணை இணங்கவைக்க காசு வீசுகிறவர்கள் நிறைய இருக்கிறார்கள், அரை நிர்வாண போட்டோ ஒருகலை, அங்கு அத்துமீறல் பாவம். மேலும் கவுசல்யா மாதிரி ஒரு பெண்ணுக்கு கணவனாக இருக்கும் ரவி இந்த மாதிரி பெண்ணை மனசால் நினைப்பது கூடப் பாவம்.

கவுசல்யா ஒரு முறை கேட்டாள்.

''இப்படி அசிங்க அசிங்கமா பொம்பளைங்களை போட்டோ எடுக்கறீங்களே, உங்க மனசில ஒன்னுமே தோணாதா?''

''தோணும்.''

''ஐயோ'' கவுசல்யா கூவினாள்.

''என்ன தோணும்னு கேளு?''

''என்ன தோணும்?''

''ஐயோ பாவம்னு தோணும்.''

''நிஜந்தானா?''

''உன் தலைமேல சத்தியமா நிஜம்.''

''என்னை மட்டும் நாள் தவறாம தொந்தரவு பண்றீங்க.''

''நீ என்ன புருஷன்னு மதிக்கற. நான் உன்னைப் பொண்டாட்டின்னு மதிக்கறேன். பரஸ்பரம் மதிப்புல உண்டாகற சந்தோஷம் அது. என்னைய பொறுக்கின்னு நினைக்கற பொம்பளைய என்னால தொட முடியாது''

''நீங்க பொறுக்கி இல்லையா?''

''என்னைக் கொன்னு போட்டாக்கூட அந்தக் குணம்
வராது.''

''நீங்க பொறுக்கிதான்.''

''ஆய்...''

''என்கிட்ட மட்டுமே ஆட்டம் போடற பொறுக்கி''
கவுசல்யா மடியில் உட்கார்ந்து கழுத்தைக் கட்டிக் கொள்
வாள். அவள் ஏழு மாச வயிறு இடுப்பில் முட்டும். அவ
ளின் கர்ப்பிணி சந்தோஷம் கன்னத்தில், கண்களில்
தெரியும்.

ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபடுவது "இந்த
கர்ப்ப விஷயத்திற்காகத்தான். தன்னால் கர்ப்பமாக்கப்
பட்ட பெண்ணை மடியில் வைத்துக் கொஞ்சுவது மிகப்
பெரிய சந்தோஷம். உன் கர்ப்பத்தைத் தாங்குகின்ற
என்னைத் தாங்கு என்று பெண் ஆண் மடியில் அமர்வது
முழுமையான நம்பிக்கை. எதுவும் பேசாமல் ஒருவரை
ஒருவர் பார்த்துக் கொண்டு இருப்பது களங்கமில்லாத
நிறைவு. இதெல்லாம் குளியல் தொட்டி பெண்ணிடம்
கிடையாது.

வீட்டிற்குப் போய் கவுசல்யாவிடம் குளியல் தொட்டி
பெண்ணுக்கு சாட்டின் துணி கொடுத்ததைச் சொல்ல
வேண்டும். அதை மொத்தமும் கேட்டு விட்டு அவள்
ரவியின் முகத்தைத் திருகுவாள். அவள் முகத்தைக் கையில்
ஏந்தி, ''நீங்க ஏன் இவ்வளவு நல்லவரா இருக்கீங்க?''
என்று கொஞ்சுவாள். நல்லவனாக இருப்பது பாராட்டப்
படும். பாராட்டப்படுவதும் சந்தோஷம்.



ரவியின் அப்பா நல்லவர், அம்மா உத்தமி, அக்காள்
பத்தினி, மனைவி தேவதை, அதனால் ரவியும் நல்லவ
னாக இருந்தான். இயல்பிலேயே அவனிடம் நல்ல குணங்
கள் இருந்தன. இரக்க உணர்ச்சி அதிகம் இருந்தது.

சுரேந்திரபாபு கேமிரா கடன் கேட்டபோது இந்த
இரக்க உணர்ச்சி அதிகப்பட, நிக்கான் கேமிராவையும்
ஸூமையும் கடன் கொடுத்தான். ஒன்பதாயிரம் ரூபாய்
விலை உள்ள பெட்டியை யாரும் சட்டென்று தர மாட்
டார்கள்.

''வேற எதுவான்னாலும் கேள், கேமிரா. கேட்
காதே'' என்று சொல்லி விடுவார்கள்.

சுரேந்திரபாபு நல்ல போட்டோகிராபர். ஆனால்
சாப்பாட்டிற்கே கஷ்டப்படுகிறான். லைட்டிங் கச்சித
மாய் செய்வான், எள் என்பதற்கு முன் எண்ணெயாய்
நிற்பான். கூடமாட உதவிகள் செய்து போட்டோ காசு
வாங்கிப் போவான். நல்ல போட்டோ கிராபருக்கு நல்ல
ஹெல்ப்பர் தேவை. சுரேந்திரபாபு நல்ல ஹெல்ப்பர்.
நல்ல போட்டோ கிராபர்.

ஒரு நல்ல போட்டோகிராபர் சாப்பாட்டிற்கு
கஷ்டப்படக்கூடாது.

ரவி இந்த இருபத்தி ஏழு வயது வரை சாப்பாட்டிற்கு
கஷ்டப்பட்டதில்லை. காசு இல்லையே என்று கஷ்டப்
பட்டதில்லை. இன்னும் கார் வாங்க முடியவில்லையே
என்கிற ஆதங்கம் இருக்கிறதே தவிர அடிப்படை வசதி
களில் குறைவில்லை. ரவி வாயில் வெள்ளிப் பாலாடை
யோடு பிறந்தவன். தங்கத் தட்டுக்குத் திட்டமிடுபவன்
கடினமாக உழைத்தால், கனவு காணாது போராடினால்.
தங்கத்தட்டு நிச்சயம் கிடைக்கும். புதிய மாருதி கார்
வாங்கிவிட முடியும்.

கார் வாங்குகிற ஆசைக்கு முன்னர் வேறு செலவுகள் இருக்கின்றன, கவுசல்யாவின் சீமந்தச் செலவு பத்தாயிரம் ஆகும். அக்கா சீதாலட்சுமி இரண்டாவது பிள்ளைப் பேறுக்கு வந்து இருக்கிறாள். அதற்கு ஒரு ஆறாயிரம் ரூபாய் செலவாகும். அப்பாவை வேலூர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் ஒரு வாரம் வைத்து இருந்து கொண்டு வரவேண்டும். அதற்கு ஒரு பதினைந்தாயிரம் ரூபாய் கையில் இருக்க வேண்டும். அதற்காகத்தான் இந்த சினிமாப் பார்ட்டியையும் ஒப்புக் கொண்டது. இரண்டாயிரம்ரூபாய் அட்வான்ஸ் வாங்கியது குறைந்த பட்சம் ஐந்தாயிரம் ரூபாய் இதில் பார்த்துவிட முடியும். காசு, காசு முக்கியம், தெய்வம். வெள்ளி ஸ்பூனோ, தங்க ஸ்பூனோ காசு தொடர்ந்து சம்பாதித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நாளைக்கு சுரேந்திரபாபு வந்தால் அவனை டார்க் ரூமில் வைத்துக்கொண்டு, இரண்டே காலுக்கு ஒன்றே காலடி இருபத்தி இரண்டு படங்களையும் கழுவி எடுத்து விடமுடியும்.

சுரேந்திரபாபு கொஞ்சம் ஆசை உள்ளவன்.

''யாரு அண்ணே இந்தக் குட்டி? டக்கரா இருக்கே?'' படம் பார்த்துவிட்டுக் கேட்பான்.

''அடடே, லைட்டிங் பண்ண நான் வராது போயிட்டேனே'' ஆதங்கப்படுவான்.

அவனிடமும் வெள்ளை சாட்டின் துணியை வீசியதைச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதில் நிச்சயம் ஒரு சந்தோஷம் இருக்கிறது.

நல்லவனாக இருப்பது கூட கர்வம் மிக்க செயல், தான். ஒருவன் பல கஷ்டங்களுக்கு இடையேதான் நல்லவனாய் இருக்க முடியும்.



இரண்டாயிரம் ரூபாய் அட்வான்ஸ் இந்த சினிமா கம்பெனி தந்திருக்கிறது. தலைவாழையிலை சைசுக்கு பெரிய பெரிய படங்கள் அவர்களுக்குத் தரவேண்டும். தந்த உடனேயே மீதிக் காசு வாங்கிவிட வேண்டும். ஆறு ஏழு ரூபாய் பில் போட முடியும்.

காசு—காசு முக்கியம் என்பதால்தான் இந்த மாதிரி போட்டோ எடுக்க வேண்டிய நிர்பந்தம். குளியல் தொட்டியில் நடனமாடும் பெண்ணை அரைகுறை ஆடையில் ஊற வைத்து எடுக்கிற பாவம்.

இப்படிப்பட்ட உத்யோகம் நல்லதா கெட்டதா தெரியவில்லை, இதனால் ஏதும் பழி பாவம் வருமா தெரியவில்லை.

இதற்கு நான் காரணமில்லை என்று வெளி மனசு சொன்னாலும் உள்மனசு நீயும் உடந்தை என்று சொல்வது போல் ஒரு பிரமை.

அப்பாசெய்கிற தவறு பிள்ளை தலைக்கு வரும் என்று அப்பா அடிக்கடி சொல்வார். தான் தவறே செய்யாத ஆள் என்று பெருமைப்படுவார். அதனால்தான் குழந்தைகள் திறமையாய், நல்ல குணமாய் இருக்கிறதென்று பிறரிடம் பேசுவார்.

அரை நிர்வாண போட்டோ எடுப்பது தவறா தெரியவில்லை. கவுசல்யாவின் வயிற்றில் வளரும் பிள்ளைக்கு இதனால் கெடுதல் வருமா தெரியவில்லை. அந்தப் பெண்ணை, இந்நேரம் மசிய வைத்திருப்பார்கள். தயாரிப்பாளரும், டைரக்டரும் ஒரே அறையில் ஒரே பெண்ணோடு, ச்சே வேண்டாம். எனக்கு எதற்கு இந்த சிந்தனை.

''நான் போட்டோகிராபர். தொழில் முறை போட்டோகிராபர், என்னால் யாருக்கும் எந்த தொந்தரவும் கிடையாது, யார் மனதும் வேதனைப் பட்டது

கிடையாது. எனக்கு எவரும் வேதனை தரப் போவ தில்லை.

அவன் விட்டு வாசலுக்கு வந்தான். தோட்டக் கதவு திறந்து ஸ்கூட்டரை உள்ளே தள்ளினான். அவன் வண்டி சப்தம் கேட்டு கவுசல்யா மெல்ல எழுந்து வந்து கதவு திறந்தாள். சிரித்தாள்.

## 4

''என்னா சிரிப்பு''

''ஒண்ணுமில்ல, நேரத்தோட வந்துட்டீங்களே, பொண்டாட்டி ஞாபகமான்னு நினைச்சுக்கிட்டேன், சிரிப்பு வந்தது.''

''சின்ன வேலை முடிச்சுட்டேன். வீட்ல யாரும் இல்லையா?''

''இல்லை''

''எப்படி உன்னைத் தனியா வுட்டுட்டுப் போனாங்க''

''அம்மா அப்பாவ கூட்டிட்டு செக்கப்புக்கு போயி ருக்கு, உங்க தங்கச்சி இரண்டு மணிக்குப் போச்சு''

''எங்கே...?''

''அதெல்லாம் நான் கேட்கறதில்ல. எங்கியோ போவும். இருட்டின பிறகு வரும்''

''யாராவது கேட்க வேணாமா?''

''எனக்கேன் வம்பு, வீட்ல பெரியவங்க கேட்டாலே சரியா பதில் சொல்லாது. நான் எதுக்கு கேட்கணும்?''



''சரி எதுனா போன் வந்துதா?''

''எங்கம்மா போன் பண்ணாங்க. நாளைக்கு வளை காப்புக்கு கூப்புட வாராங்களாம். உங்களை வீட்டுல இருக்கச் சொன்னாங்க''

''எப்ப?''

''சாயந்திரமா?''

''சரி அப்புறம்''

''கொஞ்ச நேரத்துக்குமுன் உங்க பெரிய தங்கச்சி வீட்டுலேர்ந்து போன் வந்தது. அவங்க வீட்டுக்காரர் போன் பண்ணாரு. பையன் நினைப்பாவே இருக்கேன். சனி ஞாயிறுல வரேன்னாங்க?''

''விநோதினியும் இல்லையா?''

''பக்கத்து தெருவில் யாரோ சிநேகிதியாம். பார்க்கப் போச்சு.''

''எல்லாம் கிளம்பி போயிட்டாங்களா உன்னைத் தனியா வுட்டுட்டு.''

''உனக்கு காபி முடியுமா? அலுப்பா இருக்கு''

''போடறேனே, நாளைக்கு எங்க வீட்ல வளைகாப் புக்கு அழைக்க வந்தா மத்ததும் பேசணும்.''

''பேசிடலாம். உன்னைக் கூட்டிட்டுப் போறது பத்தி தானே... பேசிடலாம்.''

பேண்ட் சட்டை களைந்து லுங்கியும், பனியனுமாய் ஹாலுக்கு வந்தான். கொஞ்சம் வெய்யில் தணிந்ததும் குளிக்கலாம் என்று திட்டமிட்டான்.

சோபாவில் உட்காரும்போது கவுசல்யா காபி தம்ள ரோடு வந்தாள்.

சிறிது நேரம் அடுப்படியில் நின்றதுகூட ஏழுமாத கர்ப்பிணிக்குக் கடினமான விஷயம் போலும். முகத்தில் பெரிய களைப்பு ஒட்டிக் கொண்டிருந்தது.

அம்மாவுக்கும், சமையல் வேலை களைப்பு தந்து விடுகிறது. பெரிய தங்கை சரஸ்வதி வேலை செய்கிற பெண்தான், ஆனால் அவளுக்கும் பேறுகாலம். அது தவிர மூன்று வயது பிள்ளையைக் கண்கொத்தி பாம்பாய் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

எல்லோருக்கும் வேலை இருக்கிறது. விநோதினி கொஞ்சம் கூடமாட உதவலாம். பொறுப்பு வரவில்லை. கடைசிப் பெண் என்று செல்லம். சரி போவட்டும் போவட்டும் என்கிற அம்மாவின் தலையீடு. ஆனால் அவளிடம் ஒரு துடிப்பு இருக்கிறது. செய்ய வேண்டும் என்று தீர்மானித்தால் செய்து முடிக்கும் வேகம் இருக்கிறது. அவளுக்காய் தோன்ற வேண்டும்.

நாலு வருடத்து நெகடிவ்வை வகைப்படுத்த உட்கார்ந்து திண்டாடியபோது ஒரே நாளில் சகல நெகடிவும் உற்று உற்றுப் பார்த்து திரைப்பட வாரியாய் கல்யாணம் கல்யாணமாய் பிரித்து வைத்தாள். இயற்கைக் காட்சிகள், இதர படங்கள் என்று பிரித்துக் கொடுத்தாள்.

''கஷ்டப்பட்டு செய்திருக்க. உனக்கு என்ன வேணும் கேள்'' என்று கேட்க 'ஒரு நூறு ரூபாய் கொடு' என்று பளிச்சென்று கேட்டாள்.

''நூறு ரூபாயா உனக்கு எதுக்கு?''

''அப்ப வேணாம்.''

''வேற எதுனா புடவை, ரவிக்கைன்னு கேட்பேன்னு நினைச்சேன்.''

''ஏன் எங்கிட்ட துட்டா கொடுத்தா நாங்க வாங்கிக்க மாட்டோமா?''



கொடுத்தான்.

என்ன வாங்கினாள்... தெரியவில்லை.

இப்படி துட்டு தரது தப்பு என்று நாலு நாட்கள் பொறுத்து கவுசல்யா சொன்னபோது, ''இதோ பார் இது எனக்கும் எங்க அண்ணனுக்கும் உண்டானது... நீ அனாவசியமாக தலையிடாதே'' என்று கத்தினாள்.

இன்னும் நாலுநாள் போக கவுசல்யா குமட்டி வாந்தி எடுப்பது பார்த்துவிட்டு அவளைக் கைத்தாங்லாய் படுக்க வைத்துவிட்டு வேலைகள் மொத்தமும் கவனித்தாள்.

விநோதினி ரசம் வச்சுது... விநோதினி துவையல் அரைச்சுது. விநோதினி வீடு பெருக்கிற்று. எல்லோரும் எல்லோரும் பேச சாதாரணமாய் எடுத்துக்கொண்டாள்.

ரவி வியப்பும் கவலையும் கொண்டான்.

''அது வயசுங்க... செல்லமா வளர்ந்த வயசு, பொண்ணும் அப்படித்தான். இரண்டும் கெட்டானா இருக்கும். அதட்டினா எகிறும். அன்பா சொன்னா கட்டுப்படும். வீட்ல அதுக்கு அப்பா அம்மா இருக்கிறபோது நீங்க அவங்கள மீறி கண்டிக்க முடியாது.''

''ஏன் கண்டிக்க முடியாது.''

''என் தலை உருளும், நீங்க கண்டிச்சா உங்க பக்கம் தான் நான் நிக்கணும், நான் சொல்லிக் கொடுத்து நீங்க பேசறா மாதிரி ஆயிடும். இரண்டு தங்கச்சி இருக்கேன்னு கவலைப்பட்டுதான் கொடுத்தாங்க என்னை உங்களுக்கு''

''நீ வரபோதே ஒருத்தி கல்யாணம் முடிஞ்சி போச்சே.''

''அத்தோட போச்சா... புள்ளை பேறுக்கு வரமாட்டாளா. இங்கே வந்து செஞ்ச [முதல் வேலை உங்க பெரிய

தங்கச்சி புடவைதோச்சு போட்டது தானே....நிறைமாசம் புடவையை வண்ணானுக்குப் போட்டுட்டா வண்ணானுக்கு போட்டுட்டா வண்ணானுக்குப் போட்டுட்டான்னு நலைஞ்சு பேரைக் கேட்டுட்டா...வேணாங்க, என்கிட்ட கொடுங்க நான் தோச்சு போடறேன்னு நான் தோச்சேன்.

''புரியுது.''

''தோச்சதுல ஒண்ணும் குறைஞ்சுடலை. நானும் உண்டாயிருக்கிறேன். என் துணிய யார் தோச்சு போடுவாங்க, இங்க யாரைக் கேட்க முடியும்.''

''என்னாண்ட கொடு.''

''வேற வினையே வேணாம்.''

''எங்க வீடு புடிக்கலையா உனக்கு.''

''எல்லாம் நல்லவங்கதாம்பா. எதுக்கும் தலைல ஐஸ் வச்சா மாதிரியே பேசணும். அதென்னவோ வாய திறந்து பாராட்டினவங்கதான் ரொம்ப நல்லவங்கன்னு ஒரு எண்ணம். பொய்யாவும் பாராட்டலாம். தெரியலை உங்க வீட்ல யாருக்கும்.''

''எங்கப்பாரே அந்த மாதிரிதான் கொஞ்சம்.''

''கொஞ்சம் என்ன. உங்கப்பாவாலதான் எலலோர் பழக்கமும். வகை தொகை தெரியாம கிடக்குது.''

''ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுவத்தஞ்சுல அண்ணாதுரை மாலை போட்டார்ன்னு இப்பமும் புதுசா சொல்றாங்க.''

''ஆமா அப்ப எனக்கு ஆறு வயசு. அதே மாலையை என் கழுத்துல போட்டு நான், அப்பா. அண்ணாதுரை எல்லாம் ஒரே போட்டால...''

''கஷ்டம்டா சாமி. அதுக்கப்பால உங்க வீட்ல எந்த விசேஷமும் நடக்கலையா.''



''இல்லை. எதுவும் நடக்கவில்லை. கூட்டம் நடத்த நூற்றியொரு ரூபாய் தந்த அப்பாவுக்கு மலர் மாலை தரப்பட்டதுதான் இந்த வீட்டின் மகத்தான நிகழ்ச்சி. அவர் கட்சி ஆள் இல்லை அனுதாபி. இப்போது அனுதாபிகூட இல்லை. ஆனால் அந்த மலர் மாலை நிகழ்ச்சிதான் இன்னமும் பெருமையாய் பேசப்படும் விஷயம்''

''வாழ்க்கை ரெயில் தண்டவாளம் மாதிரி சிறிதுகூட அகலம் குறையாது, ஒரே அளவாய் போய்க் கொண்டிருக்கிறது.

''பெரிய பணக்கஷ்டம்... கஷ்டம் வந்ததில்லை. சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதில்லை''

''எங்களுக்கு சீர் செனத்தி வேணாம், நல்ல குணவதியா பொண்ணு வேணும். நாலு மருமவ... இவ வந்தா அஞ்சாவது, ஒன்று இருக்க வேணும். கட்டாயமில்லை. வந்து போயிட்டு இருக்கணும். மாமனார், மாமியார்னு தாங்க வேணும். தன்மையா பேசிப் பழகணும்.''

''பெரிய தங்கைக்கு வரன் அப்படித்தான் வந்தது. குடும்பத்தின் அமைதி பற்றி கேள்விப்பட்டுதான் பெண் எடுத்தார்கள்.''

''நீங்க சீரு செனத்தி வேணாம்னா நாங்க வுட்டுறதா செய்வோம். செய்ததுக்கு சந்தோஷப்பட்டார்கள். நாலு பேரிடமும் சொல்லி பாராட்டினார்கள். அவர்கள் பக்கமிருந்த ஒரு பெண்ணை ரவிச்சந்திரனுக்குக் கேட்டார்கள்.''

அப்பா அதையே சொன்னார்கள். ''எங்களுக்கு சீரு, செனத்தி வேணாம். நல்ல குடும்பமா நல்ல குணவதியா வேணும்.''

நாலுபக்கம் விசாரித்து விட்டு சம்மதம் சொன்னார் அப்பா. அங்கே சீரும், செனத்தியும் குறைவின்றி நடந்தது.

''நம்ம ஜாதில கல்யாணத்துக்கு ரொம்ப துட்டு செலவழிக்கிறோம்'' அப்பா சம்பிரதாயமாகச் சொன்னார்.

''வேற எதுக்குச் செலவழிக்கணும், சொல்லுங்க'' கவுசல்யா வீட்டில் பிடித்துக் கொண்டார்கள். 'குடிக்கறதில்லை. சூதாடறதில்லை, கெட்டபொம்பளை தொடுப்பு இலலை. வைகுண்ட ஏகாதசி மறுநாள் ஆயிரம் பேருக்கு சோறு போடறது தவிர பெரிய செலவு இல்லை. அவன் புண்ணியத்துல நோவு, நொடி இல்லாது இருக்கும், கஷ்டப்பட்டு சம்பாதிக்கறம். பொண்ணு கல்யாணம் பெரிசில்லையா எங்களுக்கு?''

அப்பா சிரித்தபடி வாய்ப் பொத்திக் கொண்டார்.

''எதுக்கு சீரு செய்வது தெரியுங்களா?''

''தெரியலை சொல்லுங்க.''

''நான் படா ஆசாமின்னு காட்டறதுக்கு இல்லை, ஷோ பிசினஸ் இல்லை. ஒரு கஷ்டம்னு உங்க வீட்ல வந்தா பயந்திராதீங்க. எங்க பொண்ணைக் கஷ்டப்படுத்திராதீங்க. நாங்க இருக்கோம். எங்களுக்கு உதவி செய்ய முடியும்னு காட்டறதுக்கு.''

''அடடா.''

''உங்களுக்கு கஷ்டம் வரணும்னு நான் சொல்லலை. வந்தா சம்பந்திமார் வீடு இருக்குதுன்னு தோணும்.''

''கஷ்டம் வராதயே தோணுதய்ய.''

''எப்படீங்க''



''ஆப்பம், தேங்காப் பால் கொடுத்தீங்களே, மறுவீடு அழைப்புக்கு ஆறு தின்னுட்டேன், ருசியா தின்றப்ப எல்லாம் உங்க வூட்டு ஞாபகம்தான்.''

வாய்விட்டுச் சிரித்தார்கள்.

மறுநாள் மோட்டார் சைக்கிளில் எவர்சில்வர் தூக்கில் மைத்துனர் சூடு ஆறாத ஆப்பம் பத்தும், தேங்காய்ப் பாலும் தந்துவிட்டுப் போனான்.

வெறும் பாத்திரம் திருப்பித் தருவாங்களா... அம்மா முறுக்கு, சீடை, இதற்கென்று செய்து அனுப்பினாள்.

ஒன்றுக்குள் ஒன்றாய் பெண் கொடுத்து பெண் எடுத்த மாதிரி இருந்ததால் நல்லது கெட்டதுக்குப் போக வேண்டியிருந்தது.

''என்ன சம்பந்தி சுருட்டு புடிக்கிறீங்களாமே. உங்க மக கவுசல்யா சொல்லி வருத்தப்பட்டுச்சு'' அப்பா கேட்டார்.

''எப்பன்னா ஒண்ணு ரெண்டு அவ்வளவுதான்.''

''இருமறீங்களாமே.''

''பனி.''

''நீங்க. செய்யறது நல்லா இல்லை. குடிக்கறமா சூதாடறமான்னு அருமையா பேசினிங்க. இப்ப சுருட்டுல மாட்டிட்டு கஷ்டப்படறீங்க.''

''பழக்கமாயிடுச்சு வுட முடியலை.''

''நான் ஒண்ணும் குத்தமா சொல்லலை. உடம்புக்குக் கெடுதல்னு தெரிஞ்சு அந்த சனியனைப் புடிப்பானேன்.''

''வுட்டுறேன்.''

ரவியின் மாமனார் உயிரை விட்டார். மூச்சுத் திணறல் ஏற்பட்டு மூன்று நிமிடத்தில் மாரடைப்பு ஏற்பட்டு விட்டது.

அப்பாதான் போன் எடுத்து, விஷயம் தெரிந்தார். ரவி ஊரில் இல்லை, பிரைவேட் டாக்சியில் கொண்டு வரச்சொல்லி வண்டி வந்த பிறகு மெல்ல கௌசல்யா விடம் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை, போய் பார்த்து விட்டு வரலாம் வா என்று தெரிவித்து வீட்டுக்கு அருகே வண்டி போகும்போது தகவல் வெளியிட்டார்.

''எதுக்கு சீரு செய்யறது...ஷோ பிசினஸ் இல்லை... உங்களுக்கு ஒரு கஷ்டம்னு வரபோது சம்பந்தி நினைப்பு வரணும். எங்க பெண்ணைக் கஷ்டப்படுத்தாத எங்கிட்ட இது செய்யுங்கன்னு கேட்கணும்'' இப்படி நெஞ்சு நிமிர்த்தி சொன்னவருக்கு அப்பா செய்ய வேண்டிய தாயிற்று.

பிள்ளைகளும், பெண்களும், மனைவியும், சுற்றமும் புரண்டு அழுதபோது திடமாய் நின்று கருமாதி காரியம் வரை முடிக்க வேண்டியிருந்தது.

''உங்களுக்கு ஒரு கஷ்டம் வந்தா என்கிட்ட வரணும்னு நெஞ்சு நிமிர்த்தி பேசிட்டு எங்களைத் தனியா வுட்டுட்டுப் போயிட்டாரே'' மாமியார் புலம்பினாள்.

''யாரு தனி...அப்படி தனியா வுட்டுருவோமா...டேய் ரவி உம் பொண்டாட்டி ரெண்டு மாசம் இங்ஙன இருக்கட்டும். நீ இங்க வந்து போயிட்டிரு''

கவுசல்யா சூல் கொண்டது அவள் வீட்டில்தான்.

அப்பா கேள்விப்பட்டு வந்து கவுசல்யாவைப் பார்த்தார்.

''நம்ம சம்பந்திதான் பேரப் புள்ளையா பொறக்கப் போறாரு. கவலையே படாதீங்க.''



''பொண்ணா பொறந்துட்டா''

''சம்பத்தி ஆத்தா பொறந்ததுன்னு நினைச்சுப்பம்''

''பெரிய மனசு பெரியமனசு, இந்தக்காலத்துல இப்படி பேசற மனுஷாள் உண்டா'' மாமி நெகிழ்ந்து போனாள். ''இருக்கச் சொல்லுடி உன் மாமனாரை... வருவாருன்னு ஆப்பத்துக்கு அரைச்சு வச்சிருக்கேன்''

''வேணாம்''

''ஏன்?''

''அன்னிக்குக் கொடுத்தனுப்பிச்சீங்களே— அது போதும். இந்த அன்புக்குக் கட்டுப்பட்டுத்தான் வரதும் போறதும்'' உங்க புருஷன் இல்லாத பலகாரம் தனியா சாப்பிட புடிக்கலை''

மறுத்தலிலும் அன்பு வெளி வருமா... வந்தது.

கவுசல்யாவுக்கு மாமனார் தெய்வம். மாமியார் உயிர்.

சுருட்டு இல்லை. குடி இல்லை. கூத்தி இல்லை. அப்பாவுக்கும் மார்பு அடைத்தது வயசு. வயசுக்கு ஏற்பில்லாத பெரும் தீனி.

மசாலா கடலை சாப்பிடற வயசா இது...ஊருக்கெல்லாம் உபதேசம் பண்ணிட்டு இப்படி படுத்துகிட்டா... மாமியார் வந்து ஆஸ்பத்திரியில் பார்த்துவிட்டுச் சத்தம் போட்டாள். திட்டினாள்.

திட்டுவதில் அன்பு வெளி வருமா...?

வந்தது.

''ஏண்டி டி.வி.யில தினம் தினம் சொல்றான் பார்க்கலையா... கொழுப்பு இல்லாத எண்ணெய் நெஞ்சு

அடைக்காத பொருளுன்னு... அதுல சமைக்க வேண்டியது தானே கடலெண்ணெய் வேணாம்'' கவுசல்யாவைத் திட்டிவிட்டுப் போனாள்.

இடது பக்க வால்வு பழுது, ஆப்ரேஷன் பண்ண முடியாது. வயசாகிவிட்டது. உடம்பு தாங்காது. அப்படியே பொத்தின மாதிரி இருப்பது நல்லது.

நடமாடவே அவரை யாரும் விடவில்லை.

மெல்ல நடந்து மூன்று தெரு தள்ளியிருக்கும் சம்பந்தி அம்மாளின் இரண்டாவது பையன் வீட்டிற்குப் போய் வருவார். அது ஒரு நடை எல்லையாக வைத்துக் கொண்டார்.

''டேய் அவருக்குன்னு எப்பவும் அங்க ஒரு சேர் பிரிச்சு போட்டு வை... உள்ள வாங்கன்னு மரியாதையாக கூப்பிடு. உட்காரட்டும். உட்கார்ந்து வியர்வை அடங்கினதும் போகட்டும். காபி கொடுத்துறாத. வேற ஏதானும் 'கொடு. டீ போடு. ஒவ்வொரு தடவையும் மறக்காம கூட வரட்டுமான்னு கேளு''

சம்பந்தியம்மாளின் இரண்டாவது பிள்ளை இல்லாது போனால் அவளின் மருமகள் வரவேற்பாள். உபசரிப்பாள்.

ஊர் கதை பேசிவிட்டுத் திரும்புவது தினசரி வழக்கம் உட்கார்ந்து தினசரி அரை மணி பேசுவதாலேயே இந்தப் பக்கத்து மனிதர்கள், அந்தப் பக்கத்து மனிதர்கள் பரிச்சயம் அதிகமாயிற்று.

சம்பந்தியம்மாளின் இரண்டாவது மகனின் மாமியார், மூன்றாவது மகளின் மாமனார், மைத்துனன்னு என்று பெரிய வட்டம் பரிச்சயமாயிற்று. அந்த வட்டத்தில் வயதின் காரணமாகவும், ஒழுக்கத்தின் காரணமாகவும் பொருளாதார உயர்வின் காரணமாகவும் அப்பாவுக்கு பெரும் மதிப்பிருந்தது.



மனித வாழ்க்கையில் சந்தோஷத்துக்கான காரணம் காசு வசதி மட்டுமில்லை. பிள்ளைப்பேறு மட்டுமில்லை. நோய் நொடிகளற்ற வாழ்க்கை மட்டுமில்லை. கவுரவம் ஒரு முக்கிய விஷயம்.

ஒரு சபையில் ஆள் நுழைய ''ஐயா வாங்க'' என்று பத்து பேர் எழுந்து நிற்க கவுரவம். வந்தவர் அமர்ந்த பிறகு மற்றவர் அமரும் பாங்கு. ''எங்க பக்கம் வயசுல பெரியவங்க யாருமில்லை. அதனால முதல் பத்திரிகை ஐயாகிட்ட கொடுத்து ஆசீர்வாதம் வாங்கணும். ஐயா வந்து நின்று நடத்திக் கொடுக்கணும்.''

அப்பாவுக்குக் கிடைக்கிற கவுரவத்தை அந்தக் குடும்பம் முழுவதும் உணர்ந்து நன்றாய் அனுபவிக்கும்

''வீட்ல பொண்ணு பெரிசானதுக்கு போட்டோ எடுக்கணும்னிங்களாம்.''

''ஆமா நீங்க யாரு.''

''போட்டோகிராபர்.''

''சின்ன பிள்ளையா இருக்கியே... பொண்ணு கூச்சப்படுமே. இரு வரேன். ஏய்—'' ஒரு நடுவயசு முகம் சுருக்கி உள்ளே போகும்.

''யாரு அனுப்பினது?''

''எங்க அப்பா சாமிப்பிள்ளை.''

''யாரு பெரியவரா?''

''ஆமா,''

''அவரு மகனா நீ?''

''ஆமா.''

''அட முன்னாடியே சொல்லக் கூடாது? நான் என்னவோ தெருமுனை போட்டோ கடைக்காரன்னு நினைச்சுட்டேன். தப்பா நினைக்காதீங்க தம்பி. பாப்பா இங்க வா... இது பொண்ணுங்க. இந்த ட்ரஸ் போறுங்களா?''

''ரோஸ், சிகப்புல ஏதுனா இல்லியா?''

''ஏண்டி சிகப்புல ஏதுனா புடவை இருக்கா?''

''பச்சை கூட பரவாயில்லை.''

''நீங்களே கேளுங்க தம்பி. நம்ப புள்ளைதான். பெரியவர் மகன்.''

ஆண்கள் வெளியேறிவிட நாலு பெண்களுடன் லைட் போட்டு வயதுக்கு வந்த பெண்ணை அலங்கரிக்கச் சொல்லி இப்படி அப்படி நிற்கச் சொல்லி வண்ணமாய் எடுத்துத் தள்ளுவான்.

அப்பாவின் மதிப்பு அங்கே பிள்ளைக்குக் கிடைத்தது.

உறவுச் சுற்று வட்டம் பெருக நிறைய ஆர்டர்கள் கிடைத்தன. நிறைய கல்யாணம், நிறைய சடங்கு, சில சமயம் நாலு உதவியாட்கள் தேவையாயிற்று. நாற்பது சதவிகிதம் லாபம் இருந்தது. நாலைந்து வித கேமிராக்கள் வாங்க முடிந்தது. முன்பக்க ஓட்டுக்கூரை இடித்து தளம் போட்டு மேல்கூரை ஒட்டி ஹாலுக்கு மொசைக்கிடைத்து மேல் பகுதியில் எவர் குறுக்கீடுமின்றி மனைவியுடன் சல்லாபிக்க முடிந்தது.

இதெல்லாம் மீறி இப்போது லேசாய் விநோதினியை பற்றி ஒரு கவலை.

இத்தோடு பெரிய தங்கையின் பிள்ளைப் பேறுக்கு அழைக்க உதவி செய்ய ஆள் தேவை.



''என்ன எங்கியோ யோசனை'' ஆள் இல்லாத சவுகரியத்தில் கவுசல்யா ரவிச்சந்திரனுக்கு அருகே புடவை நெகிழ உட்கார்ந்தாள்.

விநோதினி வரலையே என்று மறுபடி இவளிடம் சொல்வது தவறு தானே தன் தங்கையை மனைவிக்கு எதிரே தவறாப் பேசக்கூடாது. விநோதினி வரட்டும், தனியே கூப்பிட்டு பேசலாம்.

''வளையல் போடணும்னியே...எத்தினி சவரன்.''

''ரெண்டுலேயும் போடலாம் அஞ்சிலேயும் போடலாம்''

''அஞ்சா''

''முடிஞ்சதுதானே... கட்டாயமா என்ன?''

''சரி அப்புறம் சத்திரம் பார்த்து.''

''சத்திரமா.''

''நமக்குதான் உறவு கும்பலே ஜாஸ்தியாச்சே முதல் பிரசவத்துக்குத்தான் சாப்பிடப் போறோம். ஒருநாள் தான் காலைல ஆரம்பிச்சு மதியானம் முடிஞ்சிடும்.''

காசு செலவு என்பது கூட கவலையில்லை, அலைந்து ஆடி கூட நின்று குறைவறச் செய்ய வேண்டும்.

வேலைகள் நிறைய இருக்கின்றன. இந்த நேரத்தில் இந்த வேலை வந்திருக்கிறது. ஸ்டுடியோ பக்கம் போகவே முடியாது. அதே சமயம் கவுசல்யாவும் முக்கியம்.

பேப்பர், பேனா எடுத்து மடமடவென்று கணக்கு போட்டான். இருபத்தி ஆறாயிரம் ரூபாய் என்று பேப்பர் கணக்கு காட்டியது. ஐந்து சவரன் வளையலே பெரிய தொகையாக இருந்தது. குறைக்கக் கூடாது.

''முதல்ல வளையல் வாங்கிட்டு வந்துடலாம். நீ என் கூட வர்றியா கவுசல்யா.''

''வீட்ல யாரும் இல்லை. பூட்டிக்கிட்டா போறது...''

''பக்கத்து வீட்ல சாவி கொடுத்துட்டு போலாமே.''

பத்து நிமிஷத்தில் கவுசல்யா உடுத்திக் கொண்டு கிளம்பினாள். அவளுக்கு மறுபடி மூச்சிறைத்தது. பக்கத்து வீட்டுக்கு சாவி கொண்டு போகும்போது அதிகம் தள்ளாடினாள். நகை வாங்கப் போகிறோம் என்று பக்கத்து வீட்டில் சொல்ல விருப்பமில்லை. அம்மா வீட்டுக்கு ஒருநடை போய் வருகிறேன் என்று பொய் சொன்னாள்.

''ரொம்ப குலுங்காத ஓட்டுங்கப்பா'' மோட்டார் சைக்கிளின் பின்சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

நாலு வளையல்கள் ஐந்து சவரனில் தேர்ந்தெடுக்கப் பட்டன.

''போட்டுக்கம்மா, போட்டுக்கம்மா'' கடைக்காரர் கர்ப்பிணி என்கிற வாஞ்சையில் கெஞ்ச, கைகளில் வளையல் அணிந்து வளையலுக்கான பெட்டியை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள்

அசாத்திய களைப்பு வீட்டுக்குள் நுழைந்ததும்வந்தது.

வினோதினி சாப்பிட்டுக் கொண்டிருந்தது. ரவியின் பெரிய தங்கையை மாப்பிள்ளை ஒருநாள் தங்கறதுக்கு கூட்டிப் போனாராம். குழந்தையைப் பார்க்க ஆசையாம். குழந்தை ஆசையா, பொண்டாட்டி ஆசையா? புரியவில்லை.

வர வெள்ளிக்கிழமை இன்னிலேர்ந்து ஆறாம்நாள் வளைகாப்பு. மாமனாரும் மாமியாரும் அறிவிக்க, வீடு பத்திரிகை எழுதுவதில் இறங்கியது.



''நான் சொல்றத அப்படியே எழுது ரவி'' அப்பா கட்டளையிட, பேனா தேடி ரவி எடுத்துத் தயாராக,

''பிள்ளையார் சுழி போட்டுக்க.''

ரவி பிள்ளையார் சுழி போட்டான். பேனா எழுத வில்லை. அழுத்தி எழுதினான், பேப்பர் கிழிந்தது.

''இவன் ஒரு தண்ட கருமாந்திரம். பேப்பர் இப்படி கொண்டா'' பேப்பர் கைமாறியபோது அங்கே குண்டு வெடித்தது.

## 5

குண்டு வெடித்து இருபது நிமிடத்தில் சென்னைக்குத் தகவல் கிடைத்தது.

பத்து நாற்பது.

சென்னை உறங்கத் துவங்கியிருந்தது. பதினோரு மணிக்கு சில பேட்டைகளில் தலைவர் மறைவு செய்தியை ஜனங்கள் நம்ப முடியாது தவித்தார்கள், பயத்தில் அலைந்தார்கள்.

பன்னிரெண்டு மணிக்குச் செய்தி ஸ்தாபனங்கள் அச்சு எந்திரம் நிறுத்தினார்கள். செய்தி அடித்தவரை உள்ள தினசரியைக் கட்டு கட்டி ஓரம் போட்டார்கள்.

தலைவரின் வாழ்க்கை வரலாறு தேடினார்கள்.

''யாருப்பா...யாருப்பா செய்திருப்பாங்க'' கேள்வி கேட்டார்கள்.

ஒரு மணிக்கு கூடுதல் போலீஸ் ஆவடியிலிருந்து லாரி லாரியாய் நகருக்குள் பரவியது. பரவிய லாரியே செய்தி பரப்பியது.

''ஐயோ...ஐயோ'' ரவி வீட்டு வாசலில் யாரோ ஒரு பெண் அழத் துவங்கினாள்.

இனிமே எவன் நம்ம ஊருக்குள்ள அகதின்னு வந்தாலும் வெட்டிரணும். ஒரு லுங்கி ஆள் அரிவாளுடன் தெருவில் அலைந்தான்.

தெரு விழித்துக்கொண்டது.

ரவியின் அப்பா விழித்துக்கொண்டார், விளக்கு போட்டார்.

''ரவி எழுந்திருடா. அவன் அறைக் கதவைத் தட்டினார், வாசலுக்கும் போனார். அம்மா வாரிச் சுருட்டி எழுந்திருந்தாள். கவுசல்யா எழுந்து உட்கார்ந்து ரவிக்கை பட்டனைப் போட்டுக் கொண்டாள். கண்ணாடி முன்பு நின்று இழுத்து விட்டுக்கொண்டு தலை முடியைச் சரி செய்துகொண்டாள்.

வாசலில் சத்தம் அதிகமாகியது.

''கடைசி வீட்ல நாலு அகதிப் பசங்க இருக்கானுங்க, ஒரு பொம்பளையோட. போய் வெட்டி போடுங்கடா...''

ரவி கூச்சல் கேட்டு திடுக்கிட்டு விழித்தான்.

வீடு வாசலுக்கு வந்தது. கலவரத்துடன் எட்டிப் பார்த்தது.

தலைவர் 'வெடிகுண்டால் தாக்கப்பட்டார் என்று மட்டுமே செய்தி கிடைத்தது.

''எந்த இடத்துல?''

''கோயிலூர்ல''

''ஐயோ'' ரவி கத்தினான்.



''என்னடா...?''

''சுரேந்திரபாபு என் காமிரா எடுத்துக்கிட்டு போயிருக்கானே''

''என்ன கேமிரா''

''நிக்கான்... என்னுது. ஸூம் லென்சோட...''

''வந்துருவான் பஸ் பிடிச்சு வரவேணாமா...?

''வெடிகுண்டு வெடிச்சுருக்குன்றாங்களே, காமிரா உடைஞ்சிருந்துன்னா...''

''கண்டவன்கிட்ட ஏண்டா காமிரா குடுக்கறே?''

''நம்ம சுரேந்திரபாபும்மா''

''வருவான். அங்க ஏக கலாட்டாவாயிருக்கும். வருவான் இரு''

காலைப் பத்திரிகைகள் தலைவர் இறந்ததை, சுரேந்திரபாபு இறந்ததை, கூட்டத்தில் பலர் இறந்ததை, காயம் பட்டதை விளக்கின.

''நான் போய் சுரேந்திரபாபு வீட்ல...''

''சும்மா இருடா. வெளிவாசல்ல போற நேரமா இது''

''காமிரா போயிருச்சுப்பா''

''போட்டும். பீடை போச்சு''

''வர்ற வெள்ளிக்கிழமை வளைகாப்பு வெச்சுருக்கமே அது என்ன பண்றது?'' அம்மா கேட்டாள்.

''சத்திரத்துக்குச் சொல்லணும்'' ரவி அலுப்பானான்.

''எதுவும் இப்ப முடியாது. வீட்டோட இருங்க எல்லோரும். விநோதினி வெளியே போவக் கூடாது, இது முக்கியம்'' அப்பா கத்தினார்.

''ஒரு வாரம் ஆனா கூட தலைவர் செத்தது பெரிசா இருக்கும். குறையாது. வீட்டோட வச்சுருலாமாப்பா''

''நானும் அதான் யோசிக்கிறேன்''

''ட்ரெயின், பஸ் போவாது. ஆளுங்க வரப் போவ கஷ்டம்''

''வந்தும் அவரு செத்ததைத்தான் வளைகாப்புல பேசுவாங்க...'' அம்மா நொந்து கொண்டாள்.

''வேற என்ன பேச முடியும்? சாதாரண துக்கமா அது?''

''அதனாலதான் சொல்றேன். நல்ல காரியத்துல அந்தப் பேச்சு வேணாம், வீட்டோட செய்வோம்னு''

''செலவுக்குப் பயந்து சுருக்கிட்டாங்கன்னு கவுசல்யா வீட்ல பேசினாங்கன்னா...'' ரவி கவலைப்பட்டு கேட்டான்,

''புத்தி உள்ளவங்க பேசமாட்டாங்க. ஏம்மா உன் வீட்ல பேசி கேளு என்ன அபிப்ராயம்னு'' அப்பா கட்டளையிட, கவுசல்யா போனுக்கு ஓடினாள்.

''அந்தப் பொம்பளைய நெனச்சா கஷ்டமா இருக்கு''

''சம்பந்தியம்மாளா?''

''இல்லை? தலைவரு வெய்ப் ஊர் விட்டு ஊர் வந்து கல்யாணம் பண்ணி புள்ளைங்க பெத்து— ஐயோன்னு போயிட்டுருக்கும் அதுக்கு''

''கஷ்டம்தான், வயசு வந்த பொண்ணு இருக்கில்ல தலைவருக்கு''

''புள்ளை கூட இருக்கான்''

''பாவம். மகாபாவம். சொடுக்கிற நேரத்துல கலைஞ்சு போச்சே எல்லாம்''



டி.வி. செய்தி சொல்லியது. துக்கம் கொண்டாடியது, கடைகளோ போக்குவரத்தோ இன்றி உச்சி வெய்யில் வீதியில் அயர்ந்துபோய் அமர்ந்திருந்தது.

கவுசல்யாவுக்கு போன் வந்தது. ''வெள்ளிக்கிழமை வளைகாப்புசிம்பிளா நடக்கட்டும். புள்ளைக்கு தொட்டில் போடறத பெரிசா நடத்தலாம்னாங்க.''

''பொழச்சு கிடந்தா பிச்சக்காரனுக்கு. அது அடுத்த விஷயம். நம்ம வீடு உங்க வீடு போதும். இருவது, இருவத்தி அஞ்சு இலை போடற மாதிரி வச்சுக்குவம், டேய் ரவி, போய் சமையல் ஐயர்கிட்ட பேசிட்டு வர்றியா?''

''வெளியே போக வேணாம்னு கத்துறீங்க...''

''இன்னிக்கு புடிச்சாதானே முடியும். சமையல் ஆள் இல்லாட்டி உன் தலைலதான் சமைக்கறது விடியும்னு பார்க்கறேன்''

''அப்படியே பந்தல்காரனுக்குச் சொல்லு''

''எதுக்குடி''

''வாசல்ல பத்து பேர் சேர் போட்டு உட்காரலாமே.'

''நாயனம் வேணுமா?''

''காலைல மட்டும் வாசிக்கட்டும். இன்னும் அஞ்சு நாள் இருக்கே. எல்லா துக்கமும் முடிஞ்சுரும். தப்பா இருக்காது. ஒரு அரை மணி வாசிக்கட்டும்.''

''புடவை துணி எடுக்கணும்''

''இரண்டு நாள் பொறுத்து எடுக்கலாம். பேங்க் இருக்காதுப்பா இரண்டு நாளைக்கு''

''அப்ப ஒண்ணு செய். சரஸ்வதி வீட்டுக்காரர்கிட்ட பேசு. ஒரு பத்தாயிரம் வாங்கிக்க. இரண்டு நாள்ல தரேன்னு சொல்லு.''

''எதுக்கு அவரண்டைபோய்...'' அம்மா மறித்தாள்.

''சும்மா இரு தேவைப்படும். ஜனம் வெறுப்புல இருக்கு. இரண்டு நாளன்றது மூணு நாள் 'பந்த்'ன்னு போய்ருச்சுன்னா வெள்ளிக்கிழமை வீட்டோட வச்சுருக்கோம்னு சொல்லு''

''பத்திரிகை''

''போட முடியாதுடா வாய் வார்த்தையா கூப்புடணும். நானும் போன்ல பேசறேன்னு சொல்லு''

ரவி மோட்டார் சைக்கிள் உதைத்தான். 'ஜாக்கிரதை ஜாக்கிரதை' ஆள் ஆளுக்கு கூவினார்கள்.

எல்லோர் முகமும் குழப்பமாய் இருந்தது தெரிந்தது. அவன் மோட்டார் சைக்கிள் தெரு தாண்ட, தெரு முனையில் அவன் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்த அம்பாஸிடர் கார் நகர்ந்து அவன் வீட்டு வாசலில் நின்றது.

''போட்டோகிராபர் ரவிசந்திரன் வீடுதானுங்களே''

''ஆமா...'' கவுசல்யா கதவு திறந்தாள்.

''ரவி இல்லீங்களா''

''வெளியே போயிருக்காரு.'' கவுசல்யா பதில் சொன்னாள்.

''எங்க?''

''ஏன், நீங்க யாரு?''

''போலீஸ். எங்க போயிருக்காரு?''

''மாமா'' கவுசல்யா கத்தினாள்.

போலீஸ் படியேறியது.



அந்த வீட்டில் உள்ளவர்கள் பயத்திலும் வெளிறினார்கள்.

## 6

''நாங்க ரகசிய போலீசுங்க. ஒன்னும் பயப்படவாணாம். உட்கார்ந்து பேசலாம். இது உங்க மருமகளா? அம்மா குடிக்க கொஞ்சம் தண்ணி கொடுங்க''

அப்பா முகம் சிவந்து கலவரமானார்.

''உங்க பையன் கேமிராதான் கடைசியா தலைவர போட்டோ எடுத்து இருக்கு. போட்டோ எடுத்த பையன் செத்துட்டான். யாருன்னு விசாரிக்க வந்துருக்கோம்''

''பையன் இப்பத்தான் வெளியே போனான்''

''பார்த்தோம்''

''அவன்கிட்டதான் கேட்கணும். எங்களுக்கு ஒன்றும் தெரியாது''

''எது?''

''எதுவும்''

''நாங்க எதுவும் கேட்கவேயில்லை. தெரியாதுன்றீங்களே?''

''தலைவர் சாவு பத்தி தெரியாதுன்னேன்''

''தெரிஞ்சுக்க வந்திருக்கோம்''

''ஐயா, நாங்க நல்ல குடும்பம். மரியாதைப்பட்ட பேமிலி''

''பார்த்தா தெரியுதே''

''என்ன வேணும் உங்களுக்கு?''

''சோதனை போடணுங்க''

''என்ன?''

''வீடு சோதனை போடணும்''

''நாங்க ஒரு தப்பும் செய்யலைய்யா. ரவி நியூஸ் கேட்டவுடனே ஐயோ கேமிரான்னு கத்தினான். உடனே பீடையே போச்சுன்னேன்''

''கேமிரா போவலை. போயிருந்தா ரொம்ப கஷ்டம்''

''என் புள்ளை இல்லாத நேரம் பார்த்து வந்து இப்படி கேட்கறீங்களே''

''அவர வேற போலீஸ் பார்த்துக்கும்''

''அவன் அறியாத புள்ளைய்யா''

''தெரிஞ்சுருமே இப்ப''

''எங்க மேல சந்தேகப்படறீங்களா?''

''ஒரு நாளும் சந்தேகப்படலை. எதுனா தடயம் கிடைக்குமான்னு பார்க்கணும்''

''சந்தேகப்படலை. ஆனா தடயம் பார்க்கறோம்னா என்ன அர்த்தம்?''

''இது சும்மா ரொட்டீன்''

''மாமா சோதனை போட்டுக்கட்டும். தடுத்தா தப்பாவும்'' கவுசல்யா கத்தலாய் பேசினாள்.



''அது பேச்சு. உங்க மருமக சரியா சொல்லுது''

''தண்ணி இந்தாங்க. காபி போடட்டுங்களா?''

''சரி தாயே. சாப்பிடறோம். அவரு பிலிம் வச்சு இருக்கிற எடம் எது?''

''உள்ளாற படுக்கை அறைல இருக்கு. இருங்க—''

''நீ இரும்மா, நான் போய்க்கிறேன்''

''பாவாடை ஜாக்கெட் கிடக்குது. அது எடுத்துடலாம்னு சொல்றேன்''

''கிடந்துட்டுப் போவுது. எங்க வூட்லயும் அப்படித் தான் இறைபடும். பீரோ திறங்க தாயே. இது யாரு. ரவியோட தங்கச்சியா?''

''ஆமாங்க''

''பேர் என்ன?''

''விநோதினி''

''தாயார் பேரு, அப்பா பேரு, உன் பேரு, வயது எல்லாம் சொல்லுங்க''

''பிலிம் எங்க வச்சிருப்பாரு''

''கீழ் தட்டுல''

''ஒரு சேர் போடும்மா. விளக்கு போடு''

ஆறு பேர் இடம் பிரித்துக்கொண்டு வீட்டைப் புரட்டிப் போட்டார்கள்.

''எங்க சமையல் அறை கூட சோதனை போடணுமா?''

''சும்மா ஒரு ரொட்டீன்''

''என்னய்யா இது. ரொட்டீன் ரொட்டீன்னு குடித்தனக்காரன் வூட்டை கலைச்சுப் போடறீங்க அடுக்குமா இது, நீ போலீஸ்தானா, போலீசுன்னு எப்படித் தெரியும் எனக்கு?''

''பெரியவரே கத்தாதீங்க. உடம்பு சரியில்லை உங்களுக்கு''

''என்ன தெரியும் என் உடம்பு பத்தி?''

''போன வருஷம் பத்தாம் மாசம் ஹார்ட் அட்டாக் டாக்டர் ராஜரத்தினம் பார்த்தாரு. இருபது நாள் ஆஸ்பிட்டல்ல இருந்திங்க''

''எப்படித் தெரியும்''

''நாங்க போலீசுங்க. ஒரு வூட்டுக்கு வர முன்னாடி விவரம் தெரியாத வரமாட்டோம்''

''எங்க விசாரிச்சீங்க?''

''எதிர் வீடு, பக்கத்து வீடுல விசாரிப்போம்''

''எப்ப?''

''காலைல. உட்காருங்க. பதட்டம் எதுக்கு?''

''எம்புள்ளைய அரஸ்ட் பண்ணிட்டீங்களா?''

''தேவையானா செய்வோம். டெலிபோன் ஒட்டு கேட்போம், லெட்டர் பிரிச்சி படிப்போம் மறுபடி சோதனை போடுவோம்''

''முருகா''

''பயப்பட வேணாம். இதுவரைக்கும் உங்க பேர்ல தப்பு தெரியலை. கவுசல்யாம்மா இந்த பிலிம் மொத்தமும் எடுத்துக்கிட்டுப் போறோம்''

''அவர் கிட்ட கேட்கணுமே''



அவரு வரட்டும். அதுவரைக்கும் இருப்போம்.''

''இங்க சாப்பிடறீங்களா. அவரு வர நேரமாவும்''

''வேணாம் தாயே, அது தப்பு. காபி போதும்''

''அக்கம் பக்கத்து வீடுகள் எட்டிப்பார்த்தன. விவரம் தெரிந்து வியந்தன. உச்சி வெய்யிலில் ஆரம்பித்த சோதனை மாலை அந்தி சாயும் வரை தொடர்ந்தது.

வாசலில் மோட்டார் சைக்கிள் சப்தம் கேட்க, கவுசல்யாவை கதவு திறக்கச் சொன்னார்கள். எதற்கோ தயாராய் காத்து இருப்பவர்கள் போல சுவர் பக்கம் ஒதுங்கி நின்றார்கள்.

ரவி உள்ளே நுழைந்தான்.

''என்னா?''

கவுசல்யா அழுதாள்.

''என்ன கவுசல்யா'' ஹாலுக்கு வந்தான், வீடு கலைந்து கிடந்தது.

''என்னப்பா?''

அப்பா அழுதார்.

''என்ன, யாரு இவங்க?''

''ரவி, நாங்க ரகசிய போலீஸ், போட்டோ கிராபர் ரவிச்சந்திரன் நீங்கதானே?''

''ஆமா.''

''உட்காருங்க.''

இரவு ஒன்பது மணிவரை கேள்வியால் துளைத்து எடுத்தனர்.

ரவி சகலத்திற்கும் பதில் சொன்னான். பதினாறு வயதில் முதன் முதலாய் எடுத்த போட்டோ முதல் கடைசியாய் எடுத்த போட்டோ வரை வாரிக் கொண்டு எழுந்தார்கள்.

போனில் பல இடங்களுக்குப் பேசினார்கள். வாசலுக்குப் போய் காரில் இருந்த ஒயர்லெசில் பேசினார்கள்.

''ரவி ஊர் விட்டு போகக் கூடாது.''

''சரி சார்.''

''கூப்பிட்டபோது வரணும்''

''சரி சார்''

''இதுவரைக்கும் தப்பு தெரியலை ரவி.''

''என்கிட்டே தப்பே கிடையாது சார்.''

''நல்லது. எங்களுக்குத் தெரியாம, ஊர் தாண்டினா கைது பண்ணிடுவோம்.''

''போகமாட்டேன் சார். ஒரு ரிக்வெஸ்ட்''

''என்ன?''

''வர வெள்ளிக்கிழமை எங்க வீட்ல அவங்களுக்கு வளைக்காப்பு.''

''போடா வளைகாப்பும் வேணாம், ஒரு மண்ணும் வேணாம்'' அப்பா கத்தினார்.

''அப்பா சும்மா இருங்க. அன்னிக்கு மட்டும் வீட்ல இருக்கணும் சார்.''

''இருக்கலாம், நிறைய ஜனம் வரும். உங்களுக்கு இடைஞ்சல், இது எல்லாம் நீ எடுத்ததா?''

''நான் எடுத்த நெகடிவ்தான்.''



''சுரேந்திரபாபு கடன் வாங்கிப் போன அந்த நெகடிவ் யார்கிட்ட இருக்கும்''

''சுரேந்திரபாபுகிட்ட இருக்கும். எனக்குத் தரமாட்டான்''

''சுரேந்திரபாபு நெகடிவ் இதுல இல்லை?''

''ஒரு துண்டுகூட இல்லை.''

''சரி வரோம்.''

''எதுக்கு மறுபடி வந்து? அதான் கலைச்சுப் போட்டீங்களே'' அப்பா கத்தினார்.

''அப்பாவுக்குப் புரியலை. சொல்லு, விளக்கிசொல்லு அவரை மிரட்டக் கூடாதுன்னுதான் தன்மையா பேசினோம். கவுசல்யாம்மா நீங்க சொல்லுங்க.''

கவுசல்யா பேசாதிருந்தாள்.

வந்தவர்கள் கார் ஏறி போனார்கள்.

அடுத்த வீடு மொத்தமும் உள்ளே வந்தது.

''என்னா ரவி, என்னா நடந்தது?''

எதிர்வீடு உள்ளே நுழைந்தது. ''என்னம்மா போலீசா அவங்க? உம்மேல சந்தேகப்படறாங்களா.''

பத்து மணிக்கு நாலு செய்தி பத்திரிகையாளர்கள் உள்ளே வந்தார்கள்.

எல்லா செய்தி பத்திரிகை ஆட்களும் ரவிக்குத் தெரிந்தவர்கள்.

''உன் கேமிராவாமே, சுரேந்திரபாபுக்குக் கடன் கொடுத்தியாமே, என்ன கேமிரா அது எப்ப கொடுத்தே. நெகடிவ் வாரிக்கிட்டு போய்ட்டானா?''

''வந்தது ரகசிய போலீஸ் இல்லை. சி. பி. ஐ. தெரிஞ்சுக்க.''

மறுநாள் காலையில் போட்டோ கிராபர் கைது? என்று கேள்விக் குறியோடு ரவியின் போட்டோ பிரசுரமாகி இருந்தது.

ரவி நொந்து போனான்.

அப்பா படுக்கையானார்.

கவுசல்யா ஒரு இடமாய் உட்காராது அலைந்தாள்.

விநோதினி டி.வி. பார்த்தபடியே இருந்தாள். டி.வி. தலைவரின் ஈமக்கிரியைகளை விடாது படம் பிடித்துக் காட்டியது.

தலைவர் தகனமான பத்தாவது நிமிடம் மறுபடி போலீஸ் வந்தது.

''பெரிய அதிகாரி பார்க்கணுமாம் உன்னை. வா ராஜா'' அழைத்தது, வெளியே ஜீப் நின்றிருக்க, ரவி விடைபெற்று வண்டியேறினான்.

கவுசல்யாவும், அம்மாவும் அழுதார்கள், விநோதினி அவர்களைச் சமாதானப்படுத்தினாள்.

எதிர்வீடும், அடுத்த வீடும், இன்னும் சில வீடுகளும் வாசலுக்கு வந்து வேடிக்கை பார்த்தன.

ரவி தலை குனிந்து கொண்டான்.

பயந்தான்.

''போட்டோ எடுக்க கேமிரா கொடுக்கற அளவுக்கு சுரேந்திரபாபு பழக்கம்?''

உயரமும், அகலமுமாய் இருந்த பெரிய அதிகாரி மெல்ல சுழல்நாற்காலியில் ஆடிக்கொண்டே கேட்டார்.



''ஆமாங்க. எனக்கு அசிஸ்டெண்டா இருந்தான்.''

''சுரேந்திரபாபு பழக்கம்னா, அவன் நண்பர்களும் பழக்கமா?''

''சிலர் பழக்கம் உண்டுங்க.''

''யார் யார்?''

''நிறைய பேர். நீங்க பேர் சொன்னா தெரியும் தெரியாது சொல்லிருவேன்''

''உன் வருமானம் என்ன?''

''பத்து பனிரெண்டு வருங்க,''

''டாக்ஸ் கட்டறியா''

''இல்லைங்க''

''சமீபமா யார் காசு கொடுத்தாங்க.''

''நிறைய பேர்''

''அஞ்சு சவரன் நகை வாங்கி இருக்கிங்க''

''வளைகாப்புங்க, வீட்ல...''

''ஏது பணம்?'

''என் பணங்க''

''அஞ்சு சவரன் நகை வாங்கற அளவுக்குப் பணம் உண்டா?''

''அம்பது சவரனா வாங்கினேன், அஞ்சு சவரன் வாங்க முடியுங்க.''

''அப்பாவுக்குப் போன வருஷம் பன்னிரெண்டாயிரம் செலவு பண்ணியிருக்க ஆஸ்பத்திரியில.''

''எங்க அப்பா அவரு.''

''ஏது பணம்?''

''என் பணங்க,''

''இப்ப பாங்கல எவ்ளோ இருக்கு?''

''முப்பது ரூபா இருக்குங்க. எல்லாத்துக்கும் கணக்கு இருக்கு.''

''டாக்ஸ் கட்டறதில்லை.''

''இல்லைங்க.''

''சரி, சுரேந்திரபாபு அகதிகளோட நட்பா இருந்தாரா?''

''ஆமாங்க.''

''யார், யார் தெரியுமா?''

''தெரியாது.''

''இவரு யார்?'' போட்டோ காட்டினார்.

''தெரியாது. ஒருதடவ சுரேந்திரபாபுவோட பார்த்து இருக்கேன். அவரோட மோட்டார் சைக்கிள்ல உட்கார்ந்து வந்தான். கேமிரா கேட்டான் கொடுத்தேன். நாலு நாள்ல கொடுத்துட்டான்''

''என்ன கேமிரா?''

''யாஷிகா.''

''எத்தனை கேமிரா இருக்கு?''

''ஏழு கேமிராங்க.''

''எல்லாம் உன்னுதா?''

''சொந்த கேமிராங்க.''

''ஏது பணம்?''

''எதுக்கு?''

''கேமிரா ஏழு வாங்க?''



''என் பணங்க. சம்பாதிச்சு சேமிச்சு வாங்கினது.''

''இது யார்?'' ஒரு கலர் போட்டோ காட்டினார்.

''என் தங்கச்சிங்க.''

''யார் எடுத்தது?''

''தெரியலிங்க.''

''எங்க எடுத்தது புரியுதா.''

''பீச்சுல.''

''போஸ் பார்த்தியா.''

''ஆமாங்க.''

''உன் தங்கச்சி மாடலா?''

''இல்லீங்க வீட்டோட இருக்கு.''

''இது பார்.'' இன்னொரு போட்டோ காட்டினார். அதுவும் கலர், கால் தூக்கி கட்டுமரத்தில் வைத்து இருந்தாள். மிடி பறந்து முழங்காலும், தொடை விளிம்பும் காட்டியது.

''உன் தங்கச்சி மாடலா?''

''இல்லீங்க.''

''யார் எடுத்தது?''

''தெரியலீங்க.''

''எனக்குத் தெரியாத இப்படி போஸ் கொடுத்துருக்கா?''

''ஆமாங்க.''

''சினிமால நடிக்கப் போவுதா உன் தங்கச்சி.''

''கிடையாதுங்க. கல்யாணத்துக்கு பார்க்கறோம்.''

''இது யார்?'' வேறு போட்டோ காட்டினார்.

அவன் நடிகையை நீர் தொட்டியில் எடுத்த போட்டோ.

பெயர் சொன்னான். விவரம் சொன்னான்,

''இவங்க மாடலா?''

''ஆமாங்க நடிகை.''

''உன் தங்கச்சி?''

''வீட்டோட இருக்கிற பொண்ணு.''

''வீட்டோட இருக்கிற பொண்ணு இப்புடி கை தூக்கி, கால் தூக்கி போஸ் தருமா?''

''தெரியலீங்க,''

''யார் எடுத்தது?''

''தெரியலீங்க?''

''சொல்லு.''

''சத்தியமா தெரியாதுங்க.''

''உன் தங்கச்சிக்கு எதுனா காண்டாக்ட் உண்டா!''

''யாரோடா.''

''புரட்சிப்படை.''

''இல்லீங்க.''

''கேமிரா கொடுத்தபோது சுரேந்திரபாபுவோட யார் வந்தது?''

''தெரியாதுங்க.''

''தெரியாமலா ஒன்பதாயிரம் ரூபா கேமிரா குடுத்தே.''



''என் தங்கச்சி கொடுத்தது''

''உன் தங்கச்சி சுரேந்திரபாபு லவ் பண்ணுதா?''

''ச்சே—ச்சே''

''வேற யாரையாவது லவ் பண்ணுதா?''

''இல்லீங்க''

''சுரேந்திரபாபு, உன் தங்கச்சிகிட்ட எப்படி பழகுவாரு''

''தங்கச்சி மாதிரி''

''உன் தங்கச்சிய தேடிகிட்டு யாராவது வருவாங்களா?''

''இல்லீங்க. வர மாட்டாங்க''

''உன்னைத் தேடிகிட்டு அகதிகள், புரட்சிப் படை ஆளுங்க வருவாங்களா?''

''வரமாட்டாங்க''

''இது யார்?''

''தலைவர்''

''யார் எடுத்தது?''

''பீச் கூட்டத்துல நான் எடுத்தேன்.''

''யார் எடுக்கச் சொன்னது. டெல்லி தலைவர் யாராவது வந்தா நாங்களா எடுப்போம், லோக்கல் ஆள் வாங்கும் பத்திரிகை கேட்கும்.''

''இது யார் எடுத்தது?''

''நான் தலைவர் பேசறபோது கூட்டம் எடுத்தேன்''

''இது யார் தெரியுதா''

''தெரியுது சார். சுரேந்திரபாபுவோட வந்த ஆள்''

''இவர் யார் தெரியுமா?'' வேறு போட்டோ காட்டினார்.

''அவருதான்''

''பேர் தெரியுமா?''

''தெரியாது சார்''

''அறிவரசன்''

ரவி பேசாது அவரைப் பார்த்தான்.

''அறிவரசனைத் தெரியுமா''

''தெரியாது சார்''

''பொய் சொல்லாத ரவி''

''சத்தியமா தெரியாது சார்''

''சரி, இன்ஸ்பெக்டர் இவரை விசாரியுங்க'' அதிகாரி எழுந்து போனார். அவர் மேஜையில் விநோதினி தலையில் தொப்பியுடன் கை தூக்கி, கால் தூக்கி நின்று இருந்தாள்.

ரவிக்கு நெஞ்சு வலித்தது.

''வா போலாம்'' அந்தக் கட்டடத்தின் பின்பகுதிக்கு இன்ஸ்பெக்டர் அழைத்துப் போனார்.

''உட்கார்''

உட்கார்ந்தான்.

''அறிவரசனைத் தெரியுமா?''

''தெரியாது சார்''



''அடிச்சு விஷயம் வாங்குன்னு அதிகாரி சொல்லி இருக்காரு. நான் உன்னை அடிக்க இஷ்டப்படல சொல்'

''அறிவரசன் தெரியுமா?''

''தெரியாது சார்''

''உண்மையைச் சொல். தெரியுமா?''

''சொல்டா''

''சத்தியமா தெரியாது சார்''

ரவி அழுதான். முகம் பொத்தி விசும்பினான்.

''ரவி''

''சார்''

''அங்க பார்''

எழுப்பி சன்னலுக்கு அருகே கூட்டிப் போனார்.

ரவி பார்த்து விட்டு பயத்தில் உறைந்தான்.

## 7

நாலைந்து போலீஸ்காரர்கள் ஒரு இளைஞனை பிரம்புகளால் வேகமாய் தாக்கிக் கொண்டிருந்தார்கள். கதறக் கதற அடித்துத் துவைத்தார்கள்.

''காலைலேர்ந்து அடி வாங்கறான். இன்னும் பேர் சொல்லலை. டேய் போதும் ஐஸ்கட்டி ஆரம்பிங்க.''

போலீஸ் அடிப்பது நிறுத்தியது.

''ஐஸ் கட்டின்னா என்ன தெரியுமா? குச்சி ஐஸ் இல்லே குச்சி ஐஸ் அதுமாதிரி குளிர் பெட்டில நிறைய ஐஸ் கட்டி விரல் நீளம் வைச்சிருக்கோம். சட்டை பேண்ட் அவுத்து குப்புற போட்டு ஆசன வாய்ல ஐஸ் கட்டி வைப்போம். என்ன ஆவும் தெரியுமா?''

''தெரியாது சார்''

''நோவும். உயிர் போற மாதிரி நோவும். சொத்தைப் பல் இருக்கா உனக்கு? வாய் திற''

திறந்தான். கடைசி பல் சொத்தை. அங்கினியும் ஒரு ஐஸ்கட்டி வச்சு வாய அழுத்தி மூடிக்கவும். சொத்த பல்ல ஐஸ் இறங்குனா என்ன ஆவும்''

''நோவும்''

''உயிர் போற மாதிரி நோவும்''

உள்ளே அலறல் பெரிதாய் கேட்டது.

ரவி நடுங்கினான்.

''...இங்கியும் ஒரு ஐஸ்கட்டி எடுத்தாப்பா''

''சார் வேணாம் சார்''

''சொல்லிடு அறிவுக்கரசன் யாரு?''

''தெரியாது சார்''

''பொய் சொல்லாத ரவி''

''சத்யமா தெரியாது சார்''

''டூப் அடிக்கிற''

''கடவுள் மேல ஆணையா தெரியாது சார்'' கதறினான்.

''ஐஸ்கட்டி வச்சாத்தான் சொல்வியா

''வையுங்க சார் என்ன வேணா பண்ணுங்க'' முகம் துடைத்துக் கொண்டான்.



''இப்படி சொல்லிட்டா வுட்டுறுவுமா?''

''கடவுள் என்னைக் காப்பாத்துவாரு சார்''

''மாட்டாரு ரவி''

''காப்பாத்துவாரு. பிறந்த அன்னைலேர்ந்து இது வரைக்கும் நான் யாருக்கும் எந்த கெடுதலும் பண்ணலை சார்'' அழுதான், விசும்பினான். ''எல்லோருக்கும் நல்லது செய்திருக்கிறேன். உதவி செஞ்சிருக்கேன். அது காப்பாத்தும் சார்''

''அழுவாத ரவி''

ரவி நாற்காலியில் அமர்ந்து பெஞ்சில் தலைசாய்த்துக் கொண்டான். உள்ளே விநோதினி கை தூக்கி நின்றாள் சிரித்தாள்.

''ரவி. நாளை காலைல பத்து மணிக்கு இங்க நீயா வரணும்''

''என்ன அரஸ்ட் பண்ணலையா?''

''அரஸ்ட் பண்ணா வீட்டுக்கு அனுப்புவமா, விசாரிக்க வச்சுருக்கோம். நீயா காலைல வரலை வீட்ல பூந்து தலைமுடியை புடிச்சு தெருவோட இழுத்தாருவோம்''

''வரேன் சார்''

''லேட்டானால கூட உம்மேல சந்தேகம் வரும். கண்ணைத் துடச்சுக்க, வீட்டுக்குப் போய் சாப்புட்டு நிம்மதியா தூங்கு''

தூங்க முடியுமா? தெரியவில்லை,

ஆட்டோ பிடித்து வீட்டுக்கு வந்தான்.

''என்னடா அடிச்சாங்களா?''

''விநோதினி எங்க?''

''பக்கத்து வீட்ல கேரம்போர்டு ஆடறா''

''வரச்சொல்லு''

''எதுக்குடா?''

''வரச்சொல்லு'' கத்தினான்.

வீடு அரண்டது. கவுசல்யா வெளியே ஓடி விநோதினிக்குக் குரல் கொடுத்தாள். விநோதினி துள்ளலுடன் வந்தாள்.

''இங்க வாடி''

''என்னா?''

''பீச்சுக்கு போனியா?''

''எங்க?''

''பீச்சுக்கு போனியா?''

''இல்லியே''

''பொய் சொல்லாத. பீச்சுல போட்டோ எடுத்தாங்களா உன்னை?''

''யாரு இல்லையே''

''சிவப்பு மிடி போட்டு போஸ் கொடுத்தியே போட்டோக்கு''

''இல்லையே''

''கொன்னுடுவேன்''

''என்னா என்கிட்ட எகிர்ற. போலீஸ்ல போட்டாங்களா உன்னை''

''சொல்றீ நாயே'' எழுந்து அவள் தலைமுடியை கொத்தாய் பிடித்து இழுத்தான்.

''சொல்றீ''



''தலையை வுடு.''

''போட்டோக்கு போஸ் கொடுத்தியா?''

''இல்லை.''

''பொய்யா சொல்ற, பொய்யா சொல்ற'' பொத்து பொத்தென்று முதுகிலும், முகத்திலும் அடித்தான். வினோதினி அலறினாள். வீடு தவித்தது. விலக்கியது.

''உட்றா அவளை வுட்றா அவளை'' அம்மா கத்தினாள். கவுசல்யா அலறினாள்.

அக்கம் பக்கம் உள்ள வீடுகள் ஆவலால் அந்தக் கூச்சலைக் கேட்டன.

என்னவோ தப்பு இருக்கு ரவிகிட்டே. நெருப்பில்லாம புகையுமா?

''அடிச்சிருக்காம் போல ரவிய. மூஞ்சி சிவந்து போயிருக்கு.''

''அடிப்பாங்கதான்.''

''உள்ள என்ன கலாட்டா?''

''அப்பனுக்கும், புள்ளைக்கும் சண்டை. பொண்டாட்டியை அடிக்கிறான் போல.''

''வினோதினி அழுவுது.''

''வினோதினியையும் அடிக்கிறான் போல.''

''என்னான்னு கேட்பமா?''

''வா போகலாம். போய் நாலு பேரா கேட்கலாம்'' கூட்டம் கதவு திறந்து படியேறியது.

''என்னா கலாட்டா ரவி, வீட்ல.''

''ஒண்ணுமில்ல சார்.''

''என்னா சொல்லுப்பா''

''ஒண்ணுமில்ல போய்ட்டு வாங்க சார்—''

''என்ன ஆச்சு போலீஸ்ல.''

''ஒண்ணும் ஆவலை போங்க.''

''சொல்லுப்பா எங்ககிட்ட கூட பயப்படறே''

''யோவ் போய்யா வெளியே'' ரவி அவரை நெட்டித் தள்ளி கதவு சாத்தினான்.

அப்பா நெஞ்சு பிடித்து படுக்கையில் சாய்ந்தார்.

''நான் சொல்லலை என்னவோ தப்பு இருக்கு இந்த வீட்ல.''

''என்ன தப்பு.''

''அஞ்சு சவரன் நகை வாங்கினாங்களாம் ஒரே நாள்ல, வளைகாப்புக்கு. அஞ்சு சவரன் நகை என்னா விலை? பதினைஞ்சு பதினாறு ரூவா. முடியுமா? எங்கியா துட்டு வருது.''

''புரட்சிப் படை துட்டா?''

''இருக்கலாம்.''

''அப்ப போகாத இருக்கறது பெட்டர். இந்தா இனிமே வினோதினிய நம்ம வூட்டுக்கு வரவிடாதே.''

''ஏன்?''

''சொல்றத செய்டி— அந்த வீட்லேர்ந்து நம்ம வீட்டுக்கு வரக்கூடாது.''

'டேஞ்சரான வீடு சார்.''

''நம்மையும் விசாரிப்பானா இவங்களைப் பத்தி.''

''விசாரிக்கலாம்.''

''என்னா சொல்றது.''



''தெரிஞ்சத சொல்லிடணும்.''

கூட்டம் கலைந்தது, அப்பா நெஞ்சு வலிக்கிறது என்று சொன்னார். ரவி டாக்டர் வீட்டுக்கு ஓடினான். அவரோடு வந்தான்.

டாக்டர் தூங்க ஊசி போட்டு விட்டுப் போனார்.

டாக்டரை தெரு என்ன ஏதென்று விசாரித்தது.

டாக்டர் மூலம் கேள்விப்பட்டதை வெளிய ஒன்றுக்கு நாலாய் பரப்பியது.

''சோதனை போட வந்தபோது கிழவரு ஏடாகூட மாய் பேசினாரு. வுட்டானாம் போலீசு நாலு அறை. வயசான கிழவன்னு பார்க்கறேன் உள்ளே போட்டுறு வேன்னு சொல்லிட்டுப் போனானாம்.''

''ரவி வந்துட்டான் வெளியே?''

''நம்ம போலீஸ் போக்கே தனி. அவனை வெளிய விட்டுட்டு யார், யார் வீட்டுக்கு வராங்கனு நோட்டம் பார்த்துக்கும். சி. பி. ஐ. போலீசாச்சே. அதும் போக்கே தனி.''

கூட்டம் பேசியதில் ஒரு சதவிகித உண்மை இருந்தது.

நாலு வீடு தள்ளி போலீஸ் தள்ளு வண்டியில் சேமியா பாயசம் விற்றது, பெரிய தங்கையும், கணவரும் தொலை பேசியில் பேசிவிட்டு வந்தார்கள். போலீஸ் குறித்துக் கொண்டது. தலைமையகத்துக்குத் தகவல் சொல்லிற்று.

''இங்க இருக்க வேணாம். சீக்கிரம் போயிடுங்க'' அப்பா அவசரப்படுத்த, பத்து நிமிடத்தில் மாப்பிள்ளை யும், பெரிய தங்கை சரஸ்வதியும் வெளியே வந்தார்கள். தெருமுனையில் போலீஸ் ஜீப் வந்து மடக்கியது.

''யார்? என்ன பெயர்? என்ன விவரம்? என்ன பேசி னீர்கள்?'' நிற்க வைத்து கேள்வி கேட்டது. கேட்டதை

தெரு வேடிக்கைப் பார்த்தது. மாப்பிள்ளை குன்றிப் போனார்.

ரவி வீட்டுக்கு போன்செய்து இனிமே உங்க வீட்டுக்கு வரமாட்டேன் என்றார்.

''கவுசல்யாவை அம்மா வீட்டுக்கு அனுப்பு'' என்று அப்பா சொன்னார்.

''முடியாது போக மாட்டேன்'' கவுசல்யா தீர்மான மாய் சொல்லி விட்டாள்.

கவுசல்யாவின் வீடு இங்கு தேடிவர, ''ஐயோ ஏன் வந்தீங்க'' அம்மா பதறினாள்.

கவுசல்யா வீடு முகம் சுருக்கியது.

''ஏன் வரக்கூடாது.!'

''இங்க கொஞ்சம் போலீஸ் தொந்தரவு அதிகம்மா''

''எனக்கென்னடி பயம்.''

''அவர இழுத்துகிட்டு போய் கன்னாபின்னான்னு பயமுறுத்தினாங்க''

''தப்பு ஏதுனா செய்துட்டாரா.''

''காமிரா கடன் கொடுத்தது தப்புமா.''

''அதுக்கு எத்தினி வருஷம் ஜெயில்?'' அறியாமல் கேள்வி வந்தது.

ரவி ஆத்திரமானான். ரவி அம்மா ரவுத்திரமானாள்.

''கண்ட முண்டச்சி படியேறி எம்புள்ளை ஜெயி லுக்குப் போணும்னு பேசறாளே'' அம்மா திட்டினாள்.

கவுசல்யா வீடு கை உதறியது. ''உப்புபோட்டு சோறு தின்றவ நான் இனிமே இந்த வூட்டு படியேற மாட்டேன். குத்தமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. அப்பேர்பட்ட தலை



வரை கொன்னுட்டு போட்டோ எடுத்தேன். போட்டோ எடுத்தேன்னா வுட்டுறுவாங்களா''

''போடி வெளியே'' அம்மா கத்தினாள்.

கவுசல்யா வீடு வெளியேறியது.

கவுசல்யா வாய்விட்டு அழுதாள்.

தெரு சிரித்தது.

''நம்ம தெரு பேரு, பேட்டை பேரு பேப்பர்ல வரும் பாரேன்'' சந்தோஷப்பட்டது.

ரவி மறுபடி விநோதினியிடம் போய் உட்கார்ந்தான்.

''எங்க அந்த போட்டோ? எடுத்தது யார்? எப்ப எடுத்தாங்க?''

''பீச்சுல.''

''யாரு?''

''துவரம்பருப்பு ஆள்?''

''எப்போ?''

''நாலு நாள் முன்னாடி.''

''நீ ஏன் போன,''

''கூப்பிட்டாரு போனேன்.''

''போய்?''

''ஹோட்டல ஐஸ்கிரீம் சாப்பிட்டதும் மீன்காட்சி சாலை போனாம.''

''எதுல?''

''அந்த ஆள் ஸ்கூட்டர்ல.''

''அப்புறம்?''

''புது கேமிரா வாங்கியிருக்கேன். போட்டோ புடிக்கி றேன்னான்.''

''என்ன கேமிரா?''

''ஆட்டோ ப்ளாஷ்''

''பட்டை கேமிராவா''

''ஆமா''

''ஏன் அப்படி போஸ் கொடுத்தே.''

''காத்துல தொப்பி பறந்துச்சு புடிச்சுக்கிட்டேன். சும்மா கால் தூக்கி நின்னேன்.''

''அப்புறம்?''

''எனக்கும் அவனுக்கும் சண்டை வந்துருச்சு''

''அப்புறம்?''

''வந்துட்டேன்.''

''வேற எதுனா செய்தானாடி?'' அம்மா கேட்டாள்.

''இல்லை, நான் சும்மா ஒரு வெறுப்புல லவ் பண்ணேன்.''

''பொய் சொல்லாதே.''

''தொட்டானாடி?''

''ஜாஸ்தி தொடலை.''

''ஜாஸ்தி தொடலையா? முண்டை முண்டை'' அம்மா விளக்குமாறு எடுத்து வந்து சரமாரியாய் விநோதினியை அடித்தாள். தலை கால், முகம், முதுகு என்று விளாசினாள்.

அப்பாவுக்கு மறுபடியும் நெஞ்சுவலி வந்தது.

ரவி அம்மாவை விலக்கி விட்டு அப்பாவுக்கு மாத்திரை கொடுத்தான். படுக்க வைத்தான். அப்பா அழுதபடியே கந்தர் சஷ்டி கவசம் சொன்னார்.

வீடு உடைந்து போயிற்று என்று தெளிவாய் தெரிந்தது.



கவுசல்யா விளக்கு ஏற்றினாள். பத்துமுறை வெங்கடாஜலபதி படம்முன்பு குனிந்து எழுந்து நமஸ்கரித்தாள். மஞ்சள் துணியில் காசு முடிந்து அங்கப்பிரதட்சணம் செய்வதாய் வேண்டிக் கொண்டாள்.

டெலிபோனில் அப்பாவின் உடல்நிலை பற்றி டாக்டருக்குச் சொன்னபோது, அந்த டெலிபோனும் ஒட்டுக் கேட்பது புரிந்தது.

மறுநாள், காலை ஒன்பது மணிக்கு துணி உடுத்திக் கொண்டு வெங்கடாஜலபதி படத்துக்கு நமஸ்கரித்து விட்டு ரவி கிளம்பினான்.

ஒன்பது ஐம்பதுக்கு விசாரணை நடத்தும் இடத்துக்குப் போனான் ஏனோ உடம்பு நடுங்கியது.

## 8

''அந்த ஆள் வந்துட்டான் சார்'' இன்ஸ்பெக்டர் திரைச்சீலை விலக்கி பெரிய அதிகாரியிடம் பேசினார்.

''யாரு?''

''போட்டோகிராபர், ரவி''

''மணி என்னா?''

''ஒன்பது ஐம்பத்தியாறு''

''எத்தனை மணிக்கு வரச் சொன்னீங்க?''

''பத்து மணிக்கு''

''அவன்கிட்ட தப்பு இல்லைன்னு தோணுது''

''ஆமாம் சார்''

"இவன்கேமிராகடன் கொடுத்தான் அவ்வளவுதான்... அந்த சுரேந்திரபாபு துட்டுக்கு ஆசைபட்டு கூட்டத்தில் சேர்ந்தான்.

"சும்மா விசாரி"

"தினம் வரச் சொல்லட்டா?"

"சொல்லு பத்துநாள் அலையவுடு"

"அரஸ்ட் பண்ண வேணாமில்லையா?"

"நிச்சயம் வேணாம்"

"தங்கச்சி போட்டோ?"

"கொடுத்துரு. எடுத்த ஆளை ட்ரேஸ் பண்ணீங் களா?"

"லேப்ல போய் அட்ரஸ் கேட்டு தெரிஞ்சுக்கிட்டோம் ஆள் தேடலை"

"தேடி, சும்மா பேசு"

"இப்ப இவன்கிட்ட என்ன விசாரிக்கிறது?"

"எதுனா விசாரி. இவன் தப்பு ஆள் இல்லை. கோ ஆப்ரேட் பண்றான் இல்லையா?"

"ஹண்ட்ரட் பர்சன்ட்"

"ஒரு மாசம் ஊரைத் தாண்டாதேன்னு சொல்லு"

"சரி சார்" சல்யூட் அடித்து விட்டு வாசலுக்கு வந்தார்.

"வா ரவி"

"குட்மார்னிங் சார்"

"குட்மார்னிங் உக்காரு. டிபன் சாப்பிட்டு வரேன். மெல்லிய ஸ்கிரீனுக்குப் பின்னால் இருட்டில் அமர்ந்தபடி



இட்லி தோசை சாப்பிட்டபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ரவி வேதனையோடு எங்கோ வெறித்துக் கொண்டி ருந்தான்.

அவன் முகத்தில் சிறிதளவும் தவறு தெரியவில்லை.

கையலம்பி வெளியே வந்தார்.

"ரவி"

"சார்"

"என் டாட்டர் நாலு வயசு. வரவாரம் பர்த்டே போட்டோ எடுக்கணும்"

"எடுக்கலாம் சார்"

"அறிவுக்கரசன் யாரு?"

"தெரியாது சார்"

"தெரிஞ்சத சொல்?"

"எதுவும் தெரியாது சார்"

சுரேந்திரபாபு பற்றி கேட்டார், ரவி தெளிவாய்பதில் சொன்னான்.

"இன்னிக்கு இரண்டு புரட்சிப் படை ஆளு பிடிச் சோம், பார்க்கறியா"

"சரி சார்"

பார்த்தான். சுருண்டு படுத்திருந்தார்கள். உதைக்க எழுந்தார்கள்.

"யாரு தெரியுமா?"

"தெரியாது சார்"

''என்னடா முறைக்கறே'' அந்த ஆளில் ஒருவனை எட்டி உதைத்தார்.

''இவங்கதானா சார்?''

''தெரியலை. ஏதோ சம்பந்தம். இருக்கு உனக்குத் தெரியுமா இவங்களை''

''தெரியாது சார்''

''தலையெழுத்து கேமிரா கொடுத்துமாட்டிக்கினேன்''

''ஆமா சார்''

''தங்கச்சி போட்டோ எடுத்தவன் பேர் தெரியுமா?''

''தெரியும் சார். சத்திவேல் சேலத்துல துவரம்பருப்பு விக்கிறவன், மாரியம்மன் கோவிலுக்கு விழான்னு கூட்டிகிட்டு போனான்''

''தங்கச்சிக்கும், அவனுக்கும் தொடர்பா''

''ஆமா சார். நேத்துதான் கண்டுபிடிச்சேன். அம்மா துடப்பத்துலியே அடிச்சாங்க அவளை. அவமானமாயிடுச்சு சார்''

''வயசு பொண்ணைச் சட்டுன்னு கட்டி கொடுத்திடணும்''

''ஆமா சார்''

''துவரம்பருப்பு ஆளுக்கு கட்டித்தரப்போறீங்களா?''

''நா செத்தாலும் நடக்காது சார்''

''ஏன்?''

''போட்டோ வாங்கவரன்னுட்டு வீட்ல பொண்ணை கணக்கு பண்ணிட்டான்''

''பொண்ணு சரியில்லை''



''ஆமா சார். நானும் மயிரப்புடிச்சு நாலு போட்டேன்.

''தப்பு உன்னது, பொட்ட புள்ளைய அடிப்பானேன்''

''செல்லமா வளர்த்துட்டோம்''

''அதான் தப்பு''

''ஆமா சார்''

''செல்லமா வளர்க்கலாம். என் பொண்ணு எனக்கு செல்லம் ஆனா சிலது தப்பா வளருது. சிலது சரியா வளருது''

''ஆமா சார்''

''வா போலாம்''

''எங்க?''

''அந்த துவரம் பருப்புக்காரன் வீட்டுக்கு சும்மா போய் மிரட்டிட்டு வரலாம்'' ஜீப்பில் கிளம்பினார்கள்.

''அவன் புரட்சிப் படையா.''

''போய் இரண்டு அறைவுட்டா தெரியும். வரவாரம் என் டாட்டர் பர்த்டே வர்றீயா?''

''வர்றேன் சார்''

''எவ்வளோ சார்ஜ் பண்றே?''

''உங்களுக்கு சார்ஜ் இல்லை சார்''

''நிறைய எடுக்கணும்''

''எடுத்துக்கலாம் சார்''

இடம் தேடி உள்ளே போனார். நாலாவது நிமிடம் அவனை இழுத்து வெளியே வந்தார்.

''வாரண்ட் இருக்கா, வாரண்ட் இருக்கா?'' விவரம் தெரியாது துவரம்பருப்பு கத்தினான்.

லுங்கியும் பனியனுமாய் இருந்தான்.

''வாரண்ட் வேணுமா?''

''ஆமாம் வாரண்ட் எங்கே?'

''இந்தா வாங்கிக்க'' பளீரென்று அறை. தலை சுற்றி கீழே விழுந்தான். கூட்டம் கூடியது.

''பீச்சில யாரை போட்டோ எடுத்தே.''

''ஒரு பெண்ணை''

''அந்த போட்டோவை ஏன் கவர்ல போட்டு அந்த வீட்டுககு போஸ்ட் பண்ணே''

''பொறுக்கி சார் அவ. என் கேமிராவைப் புடுங்கி மணல்ல வீசிட்டா அவ. வீட்டுக்குத் தெரியட்டும்ன்னு செஞ்சேன்''

''அப்ப நீ யாரு மாமா பையனா?''

மறுபடி அறை விழுந்தது. உலுக்கிய உலுக்கலில் பனியன் கிழிந்தது.

''வாரண்ட் இல்லாத அடிக்கிறியே உன்னை எவனும் கேட்க முடியாதுன்னு நினைக்கிறியா. சேலம் எம்.எல்.ஏ. எங்க ஆளு''

''உங்க ஆளுன்னா பொண்ணு கூட்டி கொடுக் கிறியா நீ''

''யோவ்''

''யோவ்வா?'' நடுத்தெருவில் அவனை புரட்டிபுரட்டி எடுத்தார். சரமாரியாய் குத்தும், உதையும் விழுந்தன. துவரம்பருப்பு அலறினான். கைகூப்பினான்.



''இது மூதல்லியே செய்து இருக்கலாமில்லே. உட்கார் அப்படி'' சுவரோரம் குத்திட்டு உட்கார வைத்தார். ஒயர் லெஸ்சில் சமீப போலீஸ் ஸ்டேஷனை அழைத்தார்.

ஜீப்பில் போலீஸ் வர, அவனை நாலு நாள் காவலில் வைக்கச் சொன்னார்.

''பட்டா துவரம்பருப்பு. நாலு நாளுக்கப்புறம் மரியாதையா ஊர் போய் சேரு. இங்கன கத்தின கொன்னுருவேன்''

துவரம்பருப்பு தலையாட்டினான். ரவியைப்பரிதாப மாய் பார்த்தான். ரவிக்கும் கஷ்டமாய் இருந்தது.

''ரவி''

''சார்''

''வீட்டாண்ட இறக்கி விடறேன்''

''வேணாம் சார் ப்ளீஸ்''

''ஏன் கஷ்டமாய் இருக்குதா, போலீஸ்காரன்கூட விட்டுக்கு போக? சரி வழியில இறங்கிக்க. எங்க வேலை கஷ்டமான வேலை ரவி. ஆறுநாளா வூட்டுக்குப்போகலை குழந்தை பர்த்டேக்கு கூட போக முடியுமா தெரியலை''

ரவி பேசாது இருந்தான்.

''உன் பொண்டாட்டி முழுகாம இருக்கா இல்லை, ஏழாம் மாசமா''

''ஆமா சார் வெள்ளிக்கிழமை வளைகாப்பு. நலங்கு. நீங்க வாங்க சார் சாப்பிடறதுக்கு''

''வேணாம். போலீஸ்காரன் விசேஷத்துக்கு வந்தா கூட கூட்டம் பயப்படும். நா வரலை. அப்பா பயந்துட் டாரா?''

''ஆமா சார்''

''பயமில்லைன்னு சொல்லிடு''

''சரி சார்''

''தெனம் ஒரு பத்து நா வந்து தலைகாட்டிட்டு போ. அது நல்லது உனக்கு''

''வரேன் சார். ஒரு கேள்வி சார்''

''என்னா?''

''குண்டு வெடிச்சது பொம்பளையாமே. பெரிய கூட்டம் வேலை செய்யுதாமே?''

''ஆமா''

''கண்டு பிடிச்சுடுவீங்களா?''

''பிடிக்கணும். அதுக்குதானே சம்பளம்''

''என்ன சம்பளம் சார்?''

''உன்னது விட கம்மி''

''சி.பி.ஐ. தானே''

''சி.பி.ஐ.தான். பேரு பெத்த பேரு. தாகத்துக்கு நீரு லேது. கவர்மெண்ட் சம்பளம் என்னத்த கொடுத்தரப் போறான். விரட்டறதுல மட்டும் குறைச்சல் இல்லை''

''நான் இறங்கிக்கட்டா...?''

''சரி. உன் தங்கச்சி பேரு என்னா?''

''விநோதினி''

''அடிக்காத, பொட்டை புள்ள. ஆயிரம் கனா இருக்கும், நல்ல இடமா பார்க்க ஆரம்பி''

''ஆமா சார்''

''அப்பாகிட்ட சொல்லு. மன்னிச்சுக்க சொல்லு''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை சார்''

''உங்க வீட்டுக்குள்ளே நுழையும்போதே தெரிஞ்சு போச்சு. இது நல்ல இடம் தப்பு இல்லைன்னு''

''தாங்க்யூ சார்''



''குழந்தை பொறந்த தகவல் சொல்லுய்யா''

''சரி சார். அட்ரஸ் தாங்க''

''எதுக்கு?''

''பர்த்டே போட்டோ எடுக்கணுமே''

''என் குழந்தை பர்த்டேக்கு நானே போகமுடியாது. நீ மட்டும் வந்து என்னா செய்யப்போறே. அழற குழந்தையை போட்டோ எடுக்கப்போறியா வுடு''

''வேணாமா சார்?''

''வேணாம். நாளை காலைல பத்து மணிக்கு வா''

''வராட்டா''

''ரவி. போலீஸ்காரன் கிட்ட மட்டும் விளையாடதே. வராட்டா சந்தேகம் வரும். வம்பு வரும்''

''வந்துடறேன் சார்.''

''நல்லது. என்ன பெங்களூர் அனுப்புவாங்க போல இருக்கு, அதனால என்ன, ஒரு பத்து 'நா வந்துட்டு போ. இறங்கிக்க'' ஜீப் நின்றது.

''சரி சார்''

''வரட்டா''

''தாங்க்யூ சார்''

ஜீப் மறைந்தது.

ரவி வீடு நோக்கி நடந்தான். நாளை மறுநாள் வளைகாப்பு யாரையாவது கூப்பிட வேண்டாமா? கூப்பிட்டால் வருவார்களா? மாட்டார்கள். இது மறைய நாளாகும்.

யாரையும் கூப்பிட வேண்டாம். விருந்துகூட வேண்டாம்.

இரவு மனைவியைப் படுக்கையில் உட்கார வைத்து சகல விவரமும் சொல்லி ஒவ்வொரு வளையலாய் தானே போட வேண்டும்.

"ஒரு டீ சாப்பிடலாமா"

தாகம் எழுந்தது.

டீக்கடையில் சினிமா பாட்டு ஒலித்தது.

"என் அன்புக் காதலா, என்னாளும் கூடலா" இனிமையாய் குரல் அவனைச் சுற்றிக்கொண்டது. கால்கள் தாளம் போட்டன.

விநோதினி பாவம் செம்மை அடி வாங்கி விட்டது. அந்தப் பெண்ணை சரியாய் கவனித்து வளர்க்கவில்லை. அவள் விருப்பம் கேட்கவில்லை. தவறு செய்தபோது நாலு பக்கமும் சூழ்ந்து அடித்தோம்.

பதட்டம் பயம் தந்த பதட்டம்.

எதற்கு பயம்? மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்.

மடியாவது கனமானது. பறக்கும் காக்கை மனிதர் முதுகில் எச்சமிட்டதுபோல் அவமானம், பயம் மனிதர் மீது எப்போது வேண்டுமானாலும் படரும். எனக்குப் படர்ந்ததே அதுபோல் ஏற்படும்.

போய் விநோதினியைச்சமாதானப்படுத்த வேண்டும். கேமிரா சொல்லித் தர வேண்டும், அவளையே தனக்கு



வேலையிலும் உதவியாய் வைத்துக் கொள்ள வேண்டும். உற்சாகமூட்ட வேண்டும். வீட்டோடு இருப்பதால் தான் உலகம் புரியவில்லை. வெளியே வரட்டும். உலகம் புரியும்.

"என் அன்புக் காதலா? என்னாளும் கூடலா" மனசும் கூடப் பாடியது.

கவுசல்யா வீட்டுக்குப் போக மாட்டேன் என்று நின்றாள். கெட்டிக்காரி. தைரியசாலி.

அவளுக்கு நன்றி சொல்ல வேண்டும். எடுத்து மடியில் அமர்த்தி ஒவ்வொரு வளையலாய் போட வேண்டும்.

நோகாமல் நோவாமல் அணைத்துக் கொள்ள வேண்டும்.

பாவம், தலைவர். அதைவிடப் பாவம் அந்தத் தலைவன் மனைவி. 'என் அன்புக் காதலா?' என்று இனி அந்தப் பெண்மணி யாரைப் பாடும்.

முகம் பொத்தி சிதையருகே ஒதுங்கிக் குலுங்கி குலுங்கி அழுதது அந்தப் பெண்மணி, மகாபாவம்.

உள்ளே அடிபட்ட புரட்சிப் படை ஆள் கூட பாவம் தான். அவனுக்கு மனைவி உண்டா? குழந்தை உண்டா? தெரியவில்லை. அவன் ஏன் இப்படிச் செய்தான் தெரியவில்லை.

அறிவரசன் படம் போஸ்டராய் ஒட்டப்பட்டிருக்கிறது. அவனுக்கு மனைவி உண்டா? குழந்தை உண்டா? தெரியவில்லை.

விநோதினி ஒரு வெறுப்பில் ஆணைக் காதலித்தது போல் இவர்கள் பல விஷயங்களை வெறுப்பில் காதலிக்

கிறார்கள். புரட்சி என்கிறார்கள். புரட்சியைக் காதலிக்கிறார்கள்.

வெறுப்பில் வளர்ந்த காதல் விபரீதமாகும். ஆகியிருக்கிறது.

எப்படிக் காதலிக்க வேண்டும்?

தெரியவில்லை.

யாருக்கும் தெரியவில்லை.

யாரும் சொல்லித் தரவில்லை.

டீ குடித்து விட்டு காசு தந்து, மெல்ல தன் வீடு நோக்கி நடந்தான்.

**முற்றும்**